BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை
THE NEW TESTAMENT COMMENTARY
கலாத்தியர்

GOOD NEWS PUBLISHERS

கலாத்தியர்

யாக்கோபு நிருபத்தைப் போலல்லாது, கலாத்தியரில் எருசலேம் சங்கத்தில் விவாதிக்கப்பட்ட முழு சங்கதிகளும் நேரிடையாகவே எழுதப்பட்டுள்ளன. சங்கத்தில் வெளிப்படுத்தப்பட்ட அபிப்ராயங்களின் பின்னணியையும், கலாத்தியாவிலுள்ள சூழ்நிலைகளுக்கு எவ்விதம் பவுல் செயல்பட்டார் என்பதையும் இந்நிருபம் நமக்களிக்கிறது.

ஆக்கியோனும், வரலாற்று அமைப்பும்

பவுல் தனது முதலாம் சுவிசேஷப் பிரயாணத்தில் கலாத்தியாவின் பகுதிகளைப் பார்வையிட்டார். இந்தப்பகுதியில் பிசீதியா, அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா, தெர்பே ஆகிய பட்டணங்கள் அடங்கும் (அப்போஸ்தலர் 13:3-14:23) பர்னபாவுடன் சேர்ந்து இவ்விடங்களில் பவுல் சபைகளை ஸ்தாபித்து விட்டு, சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்குத் திரும்பினார். (அப்போஸ்தலர் நடபடிகள் 14:21-28).

பவுல் அந்தியோகியாவில் இருந்தபொழுது, கலாத்தியாவிலுள்ள விசுவாசிகள் தவறான "சுவிசேஷத்தை", அதாவது, மனுஷர் விருத்தசேதனம் பண்ணப்பட்டு, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டால் மட்டுமே இரட்சிக்கப்படக் கூடும் என்னும் உபதேசத்தை ஏற்றுக் கொண்டார்கள் எனக் கேள்வியுற்று, பேரதிர்ச்சி அடைந்தார் (1:6). கலாத்தியருக்கு அவர் எழுதுகையில், அவர்களுடைய தவறின் பாராதூரத்தை அவர்கள் உணரும் வகையில் ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டார்.

தவறான "சுவிசேஷத்தை" ஏற்றுக் கொள்ளும்படி கலாத்தியர்களைத் தூண்டியவர்களுக்கு, அப்போஸ்தலர் 15:1-2-இல் கூறப்பட்டவர்களுக்குள் இருந்த அதே அபிப்ராயங்கள் இருந்தன. ஆலோசனைச் சங்கத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் கலாத்தியரில் எழுதப்பட்ட போதிலும், சங்கத்தின் தீர்மானத்தைப் பற்றிய விவரம் ஏதும் கொடுக்கப்படவில்லை. இந்த உண்மையிலிருந்தும், ஆலோசனைச் சங்கம் கூடுவதற்கு சில காலத்திற்கு முன்னர் கலாத்தியர் நிருபம் எழுதப்பட்டிருக்கலாம் என்பது புலனாகிறது. இது எப்பொழுது எழுதப்பட்டது என்பது ஒரு பொருட்டல்ல, இதன் பொருளடக்கம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது அடிப்படை சத்தியத்தைப் பறைசாற்றுகிறது. நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல், கிறிஸ்துவில் மாத்திரம் விசுவாசம் வைப்பதே கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரம் என்னும் இந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுவதே, புறஜாதிகளிடையே சுவிசேஷம் போராற்றலுடன் முன்னேறுவதற்கு ஏற்ற அடிப்படையாயிற்று.

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

பவுல் சட்ட பூர்வமான தவறை வன்மையாக எதிர்த்து, அதன் வழக்கறிஞர்களைக் கண்டனஞ் செய்து, கிறிஸ்துவில் மாத்திரம் உள்ள விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிப்புண்டு என்னும் உண்மைச் சுவிசேஷத்தைத் தற்காத்தார். தவறான போதனையை புறக்கணித்துவிட்டு, தங்களுடைய சுயாதீனத்திலே நிலைபெற்று, அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யும்படி பவுல் கலாத்தியரைத் தூண்டினார்.

கலாத்தியர்

கலாத்தியர்-சுவிசேஷத்தின் உண்மையான தன்மை

1. சுவிசேஷத்தின் தெய்வீக ஆரம்பம் (1:1-24).
2. சுவிசேஷத்தின் தற்காப்பு (2:1-21).
3. சுவிசேஷத்தின் அடிப்படை விளக்கம் (3:1-4:7).
4. சத்தியத்தை விட்டுவிட்டவர்களுக்கான கரிசனை (4:8-31).
5. சத்தியத்தைக் கைக்கொள்ளும்படிக்கு புத்திமதி (5:1-6:10).
6. சுவிசேஷத்தைப் பற்றிய மேன்மை பாராட்டல் (6:11-18).

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. யாக்கோபு நிருபத்தின் ஆக்கியோனாகிய யாக்கோபு இயேசுவின் சகோதரனும், எருசலேம் சங்கத்தின் பொறுப்பாளருமாயிருந்தார். ஆரம்பத்தில் இயேசுவே கர்த்தர் என்பதை இவர் புறக்கணித்தார். ஆனால், பிற்பாடு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களில் இவரும் ஒருவராயிருந்தார் என்பதைக் காண்கிறோம்.

2. யாக்கோபு நிருபம் முற்றிலும் யூதரைப் பற்றியதே. இது சபையின் துவக்கக் காலத்திற்கு, அதாவது, எருசலேமில் ஆலோசனைச் சங்கம் கூடுவதற்கு முன்னர் (அப்போஸ்தலர் 15) உள்ள காலத்திற்கு உட்பட்டது.

3. உபத்திரவங்கள், சோதனைகள், விசுவாசம், நற்கிரியைகள், பொருளாசையினாலும் சுயநலத்தினாலும் உண்டாகும் அபாயங்கள், தேவன் பேரிலுள்ள விசுவாசத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றை யாக்கோபு நிருபம் மையப்பொருளாக் கொண்டுள்ளது.

4. கலாத்தியர் நிருபம் அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்பட்டது. இந்நிருபத்தில் ஆலோசனைச் சங்கத்தைப் பற்றி ஏதும் குறிப்பிடப்படாததால், யாக்கோபு நிருபத்தைப் போல இதுவும் ஆலோசனைச் சங்கம் கூடுவதற்கு முன்னரே எழுதப்பட்டிருக்கலாம்.

5. பவுல் கலாத்தியரில் கிறிஸ்துவின் உண்மைச் சுவிசேஷத்தை வலியுறுத்திக் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவினால் மாத்திரமே இரட்சிப்புண்டு. "நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" (கலாத்தியர் 5:4).

சுவிசேஷத்தைத் தவறாகப் புரட்டுவது

கலாத்தியர் 1:6-10

முன்னுரை

அ. பவுலின் போதனை மூலமாகக் கிறிஸ்துவண்டை சேர்ந்த புறஜாதியாரான கிறிஸ்தவர்களிடம் யூத கிறிஸ்தவர்கள் கொடூரமான பகைமை மனப்பான்மையுடையவர்களாயிருந்தனர். "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே இரட்சிப்பு" என்ற அவனுடைய சுவிசேஷம், ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவதற்குத் தேவையான எல்லா தகுதிகளையும் சந்திக்கவில்லை என்றும், விருத்தசேதனத்திற்கும் கீழ்ப்படியவேண்டுமென்றும், யூதர்களுடைய மற்ற பழைய ஏற்பாட்டுக் கற்பனைகளையும் அவ்வாறே கடைபிடிக்கவேண்டுமென்றும் அவர்கள் கூறினார்கள்.

ஆ. சுவிசேஷ செய்திக்குள் இந்த அந்நிய கருத்துக்களை நுழைத்த காரியமே, பவுல் அவர்களை சுவிசேஷ "புரட்டர்கள்" (நேர்மையிழந்தவர்கள், ஒன்றின் பண்பை மாற்றுகிறவர்கள், ஏமாற்றுகிறவர்கள்) என்று கண்டனம் செய்யக் காரணமாயிருந்தது. பவுலையும் பர்னபாவையும் எருசலேமில் ஆலோசனை சபையில் எதிர்த்தவர்களும் இதே குழுவைச் சார்ந்தவர்களாகவே அநேகமாக இருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 15:2,5,24)

1. சில கிறிஸ்தவர்கள், சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்களை நம்பும்படியாகச் சீக்கிரத்தில் திரும்பிவிடுகின்றனர். (1:6-7).

அ. வசனம் 6. "நான் ஆச்சரியப்படுகிறேன்" பவுல் "ஆச்சரியப்படும்படியாக" சில காலத்திய விசுவாசிகளுக்கு என்ன சம்பவித்தது? அவர் அதிசயப்பட்டார். திகைத்தார், கலங்கினார், தடுமாறினார், குழப்பமடைந்தார், என்று இது பொருள்படும். கிறிஸ்துவின் மூலமாக பிதாவாகிய தேவனிடம் புதிதாகக் கண்ட தொடர்பையும், அது அவர்களுக்குச் செய்த எல்லா நன்மையையும், இவ்வளவு சீக்கிரத்தில் கலாத்தியர் விட்டு விலகியது குறித்து அவர் ஆச்சரியப்பட்டார்.

ஆ. வசனம் 6. "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு..." "உங்களை அழைத்தவர்" பிதாவாகிய தேவனாக இருக்கிறார். (1 தெசலோனிகேயர்2:12; 1பேதுரு1:15) அவருடைய கிருபை (ரோமர்3:24; எபேசியர் 2:8-9) "தேவனுடைய அழைப்பிற்கு, காரணமாக இருக்கிறது, இது கீழ்க்கண்டவாறு பொருள்படும்:

1. மானிடர்களின் பாவங்களுக்காக உபத்திரவங்களை அனுபவிக்க கிறிஸ்துவை அனுப்பின அவருடைய கிருபையுள்ள கிரியைக்காக (யோவான் 3:16)

2. கிறிஸ்துவை கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருடைய இருதயத்திலும் இந்த தேவனுடைய கிரியையினால் ஏவப்பட்ட தெய்வீக அனுபவம் (யோவான் 3:3-8)

3. அவனுடைய இருதயத்தில் ஏவப்பட்ட தெய்வீக அனுபவத்தின் விளைவாக, அவன் ஜீவிக்கும் புதிய வாழ்க்கை (கலாத்தியர் 16:15; 2கொரிந்தியர். 5:17)

சுவிசேஷத்தைத் தவறாகப் புரட்டுவது

கலாத்தியர் 1:6-10

இ. "கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கும் இந்த தேவனுடைய கிருபை, அப்போஸ்தலனாகிய பவுலினால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷ செய்தியின் மூலமாக கலாத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (வசனம்8; 1கொரிந்தியர்15:1; 2கொரிந்தியர் 11:4; கலாத்தியர்2:2 மற்றும் ரோமர் 10: 14-15)

ஈ. "இவ்வளவு சீக்கிரமாய் விட்டு" என்றால் வெகு சீக்கிரத்தில் (அல்லது மிக இலேசாக) முதலில் அதை ஏற்றுக்கொண்ட பின், அதை விட்டுத் திரும்பி, விட்டு விலகிச் சென்றுவிடுவது, தேவனுடைய கிருபையை வேறொரு காரியத்திற்காக மாற்றிக்கொள்வது, நான் உங்களுக்குக் கூறிய கருத்துக்களுக்குப் பதிலாக, யூதேயர்கள் (யூத கிறிஸ்தவர்கள்) கூறுபவைகளை ஏற்றுக்கொள்ளுவது, "சமய சந்தர்ப்பவாதி" ஆக மாறுவது, கைவிட்டு ஓடிவிடுகிற ஒருவன், என்று பொருள்படும்.

உ. வசனம் 6-7 "வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி ...." அது உண்மையில் சுவிசேஷம் அல்லவே அல்ல. "விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு" என்ற சத்தியத்துடன் அந்நியக் கருத்துக்களைச் சேர்த்துக்கொள்ளும் அந்த சுவிசேஷம் உண்மையில் சுவிசேஷம் அல்லவே அல்ல. கிரியையினால் இரட்சிப்பு என்ற கருத்தினால் அது கறைப்படுத்தப்பட்டது. அது உன்னை இரட்சிக்காது. அது போலியானது. இந்த "வேறொரு சுவிசேஷத்தை" ஏற்றுக்கொள்வது, சத்தியத்தைப் புறக்கணிக்கும் செயல். அது ஒருவன் கிருபையிலிருந்து விழுந்து போவதில் முடியும்! (கலாத்தியர் 5:4)

ஊ. வசனம் 7. "சிலர் உங்களைக் கலகப்படுத்தி...." "சிலர்" என்றால் யூதேயர்கள். இவர்கள் புற ஜாதியாரான கிறிஸ்தவர்களிடம் குரூரமாகவும் பகைமை உணர்வுடனும் இருந்தார்கள் மற்றும், "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் மட்டும்" போதுமானது என்ற எளிய சுவிசேஷச் செய்தியுடன், விருத்தசேதனம் செய்வதையும், பழைய ஏற்பாட்டு யூத கற்பனைகளை ஆசரிப்பதையும் சேர்த்துக்கொண்டனர்!

எ. இந்த யூதேயர்கள் உள்ளூர் சபைகளில் தொல்லைகளைத் தூண்டிவிட்டு, விசுவாசிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தினர். குட்டை நீரிலுள்ள வண்டல்களைக் கலக்கி, அதை கலங்கிய நீராக சேற்றைப் போலாக்குவது, இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

ஏ. வசனம் 7. "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல" "சுவிசேஷத்தைப் புரட்ட" என்றால், ரூபத்தை மாற்றுவது அல்லது அதனுடைய பண்புகளை மாற்றுவது, அதைக் கெடுத்துவிடுவது, வித்தியாசமான ஏதேனும் ஒன்றாக மாற்றுவது. யூதேயர்கள், முதன் முதலாவது இருந்த, "கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்ற சுவிசேஷ செய்தியின்" பண்புகளை மாற்ற முயற்சி செய்ததின் விளைவாக, உள்ளூர் சபையில் தொல்லைகளைத் தூண்டிவிட்டனர். (கலாத்தியர் 1:11-12). கிறிஸ்து மற்றும் ஆதி அப்போஸ்தலர்களால் "நற்செய்தி" முதன்முதலாக அறிவிக்கப்பட்டதிலிருந்து சுமார் 2000 ஆண்டுகளாக பூவுலகில் அதிக மாற்றங்கள் நேரிடவில்லை.

2. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள் நித்தியமாகத் தண்டிக்கப்படுவார்கள். (1:8-9)

அ. வசனம் 8-9. "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை

சுவிசேஷத்தைத் தவறாகப் புரட்டுவது

கலாத்தியர் 1:6-10

உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" இந்த வாக்கியம் வலியுறுத்திக் கூறப்படுவதற்காக 9 ஆவது வசனத்தில் மறுபடியும் கூறப்படுகிறது. இரண்டு காரியங்கள் குறிப்பாக இங்கே கூறப்படுகிறது.

1. முதன்முதலாக கூறப்பட்ட சுவிசேஷ செய்தியிலிருந்து விலகியிருக்கும் எந்த சுவிசேஷ செய்தியும், "கிறிஸ்துவின் சுவிசேஷம்" என்று அழைக்கப்பட முடியாது. "அது சுவிசேஷம் அல்ல".

2. சுவிசேஷத்தின் அதிகாரம், சுவிசேஷ செய்தியின்பொருளடக்கத்தில் அமைந்திருக்கிறதே அல்லாமல், செய்தி எடுத்துச் செல்லும் தூதனிடம் இல்லை!

ஆ. கீழ்க்கண்டவற்றை நாம் நினைவுகூரும்போது, பவுல் இவ்வாறு இந்த அவர்களுடைய உரிமையை ரத்து செய்வது அதிக அவசியமானது:

1.அதிகப்படியான தீர்க்கதரிசனங்களையும், அறிவிப்புகளையும் மற்றும் பவுல் மற்றும் அவன் உடன் ஊழியர்களிடமிருந்து நிருபங்களையும் பெற்றுக்கொண்டதாக உரிமைபாராட்டும் அநேகக் கள்ளப்போதகர்கள் ஆதிசபையில் இருந்தார்கள். (2தெசலோனிக்கேயர் 2:1-2)

2. சில யூத கிறிஸ்தவர்கள் தேவதூதர்களை மிகுந்த மதிப்புக்குரியவர்களாகத் தொடர்ந்து கருதிவந்தனர். ஏனெனில் யூததேசம் தொடர்பான முக்கியமான அநேகக் காரியங்களில் அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாயிருந்தார்கள் (கலாத்தியர் 3:19) தூதர்களின் ஆராதனையை உண்மையில் ஆதரித்து செயல்முறைப்படுத்தி வந்த கள்ளப்போதகர்களில் ஒரு பிரிவினர் இருந்தார்கள். (கொலோசெயர் 2:18)

3. சாத்தானும், அவன் அதிகாரத்தில் இருக்கும் விழுந்துபோன தூதர்களும் (பிசாசுகள்) ஒளியின் தூதர்களாக வேடம்மாறி, மனிதர்களுக்கு தவறான கொள்கைகளைப் போதிக்கின்றனர். (2கொரிந்தியர் 11:14-15; 1தீமோத்தேயு 4:1)

இ. "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் ...." கலாத்தியாவிற்குப், பவுல் பர்னபாவுடன் செய்த முதல் தூரதேச சுவிசேஷ ஊழியப் பிரயாணத்தின் போது வருகைதந்ததை அநேகமாகக் குறிப்பிடலாம். (பெர்கே, அந்திபோகியா, இக்கோனியா, லீஸ்திரா, மற்றும் தெர்பை - அப்போஸ்தலர் 13:13-14:25) மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள கற்பனைகளை அனுசரிப்பதை விட்டு, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு என்று, பிசீதியாவிலுள்ள அந்திபோகியாவில் பவுல் பிரசங்கம் செய்ததாக எழுதப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் 13:38-39)

ஈ."..... அவன் சபிக்கப்பட்டவனாயிருப்பான்" என்றால், நித்திய சாபத்தை அனுபவிப்பான், நித்திய அழிவை அடைவான் மற்றும் தேவனுடைய கரத்தினால் அழிக்கப்படுவான், என்று பொருள்படும். முடிவில், தேவனுடைய வெள்ளை சிம்மாசனத்தின் முன் நின்ற பிறகு, அக்கினிக் கடலுக்குள் - நரகத்திற்குள் தூக்கி எறியப்படுவான்என்பதைஇதுகுறிப்பிடுகிறதேயல்லாமல்வேறொன்றைக்குறிக்கவில்லை. (வெளிப்படுத்தின விசேஷம் 20:11,15) மற்றும் இது உண்மையானது ஏனெனில், பொய்யான சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள், மற்றவர்களை, தேவகோபாக்கினையினின்று இரட்சிக்கும் அந்த ஒரே காரியத்திலிருந்து (ஒரே வழியிலிருந்து) விலகிச் செல்ல வழி நடத்துகின்றனர்! (மத்தேயு 18:6)

சுவிசேஷத்தைத் தவறாகப் புரட்டுவது

கலாத்தியர் 1:6-10

3. கிறிஸ்துவினுடைய உண்மையான ஊழியர்கள், சுவிசேஷத்தைப் புரட்டமாட்டார்கள் (1:10)

அ. "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்?....." "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் அவருடைய அனுமதியை சம்பாதித்து, தேவனை பிரியப்படுத்த பவுல் முயற்சிக்கிறார் என்பதே நிச்சயமாக இக்கேள்விக்கு பதிலாக இருக்கும். அவர் சுவிசேஷத்தைப் புரட்டவில்லை!

ஆ. சுவிசேஷத்தைப் புரட்டுகிற யூத கிறிஸ்தவர்கள், போலியானவர்கள் என்று நிரூபிக்கும்படியாக மனுஷரைப்பிரியப் படுத்துவதற்காகவா, என்று இருமுறை குறிப்பிட்டுக் கூறியிருக்கக் கூடும். "இரட்சிப்புக்கான தேவைகளைப் பவுல் குறைக்கிறார்" என்றும், (விருத்தசேதனம், மற்றும் பழைய ஏற்பாட்டு மற்ற கற்பனைகளைக் கைக்கொள்ளுவதைத் தவிர்ப்பது) மனுஷரைப் பிரியப்படுத்தவும், அவர்களிடம் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளவும் இவ்வாறு கூறுகிறார் என்றும், அவர் தேவனைப் பிரியப்படுத்துபவராக இருப்பதற்குப் பதிலாக, மனுஷரைப் பிரியப்படுத்துபவராக இருக்கிறார் என்றும், அவர்கள் அநேகமாகக் கூறியிருக்கக் கூடும்.

இ. "நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே". பவுல் மனிதர்களைப் பிரியப்படுத்த முயற்சிக்கிறவராயிருந்திருப்பாரானால், உண்மை சுவிசேஷமாகிய, "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் மட்டும்" என்பதை புரட்டுகிற மனிதர்களை (போலியானதை அறிவிப்பவர்களை) குற்றவாளிகள் என்று தீர்த்திருக்கமாட்டார்.

ஈ. அவர் மனிதர்களைப் பிரியப்படுத்த முயற்சித்து இருந்திருப்பாரானால், அவர் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாய் (அடிமை) இருந்திருக்கமாட்டார். (ரோமர் 1:1) அவைகள் ஒன்றிற்கொன்று விசேஷமாக சுவிசேஷ செய்தி தொடர்பான காரியங்களில் பொருத்தமானதாக இல்லை. (அப்போஸ்தலர் 4:19; 5:29; மற்றும் மத்தேயு 6:24) உண்மையான கிறிஸ்துவினுடைய அடிமைகள், யாரைப் பிரியப்படுத்த வேண்டுமென்று (மனிதர் அல்லது கிறிஸ்து) தீர்மானம் எடுப்பதில் எதிர்க்கப்படும் போது, ஒவ்வொரு முறையும், கிறிஸ்துவைப் பிரியப்படுத்துவதையே தெரிந்து கொள்ளுவார்கள்! அது, உபத்திரவம் அல்லது இரத்தச் சாட்சி மரணம் எதுவாக இருந்தபோதிலும் அவர்கள் இதைச் செய்வார்கள். (2கொரிந்தியர் 11:23-29; அப்போஸ்தலர் 1:8)

முடிவுரை

அ. சுவிசேஷ செய்திக்குரிய அபாயம் இன்னமும் கடந்து சென்றுவிடவில்லை! பவுல் மற்றும் ஆதி திருச்சபையின் காலங்களில் இருந்ததுபோலவே இன்றும் அது புரட்டப்படுகிறது.

ஆ. விருத்தசேதனம் மற்றும் பழையஏற்பாட்டிலுள்ள மற்ற கற்பனைகளையும் அனுசரிக்க வேண்டுமென்று, யூத கிறிஸ்தவர்களால் சேர்க்கப்பட்டதினால் "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற உண்மையான சுவிசேஷம், ஆதிச் சபையில் புரட்டப்பட்டது.

சுவிசேஷத்தைத் தவறாகப் புரட்டுவது

கலாத்தியர் 1:6-10

இ. இரட்சிப்பு கீழ்க்கண்டவற்றால் அல்லது இவைகளையும் சேர்த்துக்கொள்வதினால் பெற்றுக் கொள்ள முடியும் என்று உரிமையுடன் கூறிக் கொள்ளும் எண்ணற்ற பிரிவுகளிலுள்ள மனிதர்களால்இன்று சுவிசேஷம் புரட்டப்படுகிறது.

1. மானிட மாம்ச சரீரம் மற்றும் நாம் வாழும் இந்த இயற்கை உலகம் ஆகியவற்றிற்கு விஞ்ஞான அறிவையும் அதன் பயன்களையும் உபயோகிக்க வேண்டும்.

2. சுயத்தைச் சார்ந்திருத்தல், சுயதீர்மானம் செய்ய சுயமாக உயர்ந்த காரியங்களைப் பெற்றுக் கொள்ளல்.

3. காரியங்கள் மீது மனதை செலுத்தல். மனதில்ரூபங்களைஉண்டாக்குவது. தியானம்செய்தல் (தியானத்தால் உண்மையையும் கடவுளையும் காணலாம் என்ற நம்பிக்கை)

4.துறவறம்-மாம்சசரீரத்தை வேண்டுமென்றே துன்புறுத்துவது.

5. எதிர்பார்க்கப்படும் பணிவிடை அல்லது வேலைகளை நிறைவேற்றுவது.

6. விக்கிரகங்கள், மிருகங்கள், மற்றும் இயற்கை பொருட்களுக்கு பலிகளையும் காணிக்கைகளையும் படைப்பது.

7.இரட்சிப்பு,இந்தஉலகத்தில் செல்வசெழிப்புடன் எப்போதும் இணைந்திருக்கும் என்று சிலர் உரிமைபாராட்டுகின்றனர்.

8. நீரில் முழுக்கு ஞானஸ்நானம்.

9. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்.

10. ஒரு குறிப்பிட்ட நாளில் ஆராதனைக்குக் கூடி வருதல்.

11. உலகத்தாரால் நல்லவர்களென்று நோக்கப்படுவது.

12. சுயவெறுப்பு மற்றும், உடை, தலை அலங்காரம், முக அலங்கார வாசனைப் பொருட்கள், நகைகள் ஆகியவற்றில் மிதமாக இருத்தல்.

13. சில உணவுவகைகளை உட்கொள்வது அல்லது உட்கொள்ளாமல் இருப்பது (அல்லது குடிக்காமல்).

14. ஆராதனை இடங்களுக்குச் செல்வது அல்லது புண்ணிய யாத்திரைகளை மேற்கொள்ளுவது.

15. தயாளனாக இருத்தல் - ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் கொடுத்தல்.

16. துன்மார்க்கமான சமூக பொல்லாப்புகளை எதிர்ப்பது - உம் கருசிதைத்தல், போதை பொருட்களை குடித்தல் முதலியன. இவைகளில் சில கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் விளைவாக இருக்கலாம். ஆனால், இவைகள் நம்முடைய இரட்சிப்புக்கு அடிப்படையாக இருக்க முடியாது!

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 1:11-24

முன்னுரை

அ. பழைய ஏற்பாட்டு யூத கற்பனைகளில் எதிர்பார்க்கப்படுபவைகளைக் கைக்கொள்ளுவதை விட்டுவிட்டு, "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்று கூறும் ஒரு சுவிசேஷம், அந்த ஒரே "ஒரு சுவிசேஷம்" மட்டுமே உள்ளது என்று பவுல் ஏற்கனவே, வசனம் 6-10 சொல்லியிருக்கிறார்.

ஆ. ஆகிலும், அநேகக் கலாத்தியர்கள் அந்த "ஒரே ஒரு சுவிசேஷத்தை" கைவிட்டு, அவர்கள் மத்தியில் வந்த (பட்டணத்திலிருந்து பட்டணம் வந்த பவுலை அநேகமாக பின் தொடர்ந்து வந்திருக்கக்கூடும்) யூத கிறிஸ்தவர்களால் பிரசங்கிக்கப்பட்ட வேற்றுமையான சுவிசேஷத்தின் பக்கமாகத் திரும்பிவிட்டனர். அவர்கள் சுவிசேஷத்தைப் புரட்டினார்கள் மற்றும் இரட்சிப்பு குறித்துக் கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:

1. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் என்பது போதுமானதல்ல.

2. விருத்தசேதனம், பழைய ஏற்பாட்டிலுள்ள யூதர்களின் மற்ற கற்பனைகள், மற்றும் விசேஷ நாட்கள் ஆகியவைகளும் சேர்க்கப்படவேண்டும்.

இ. ஆகவே, "அவருடைய சுவிசேஷம்" முதன்முதலில் ஆரம்பமானதை, கலாத்தியர்களுக்கு ஞாபகப்படுத்துவது அவசியம் என்று பவுல் கண்டார். யூத சமயத்திலிருந்த அவருடைய முந்திய வாழ்க்கையையும் கூட அவர் அவர்களுக்கு நினைப்பூட்டினார், மற்றும் உண்மையான சுவிசேஷத்தில், விருத்தசேதனமும், பழைய ஏற்பாட்டிலுள்ள யூத கற்பனைகளின் எதிர்பார்ப்புகளை கைக்கொள்ளவேண்டுமென்பதும், சேர்க்கப்படவில்லை என்பதைக் காட்ட, யூத சமயத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்திற்கு வந்த அவருடைய மாற்றத்தையும் நினைப்பூட்டினார்.

1. பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தினதின் மூலமாய் கிடைத்தது. (1:11-12)

அ. வசனம் 11. "மேலும் சகோதரரே ...... உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" எல்லா விசுவாசிகளும் தேவனுடைய பிள்ளைகள். (1யோவான் 3:1-2) ஆகவே, கர்த்தருக்குள் சகோதரர்களும் சகோதரிகளுமாயிருக்கிறோம். எனவே ஒருவரையொருவர் இம்மாதிரியாக அழைக்கலாம். அழைக்க வேண்டும்!

ஆ. வசனம் 11. "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் .....". யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் வேறுபாடு இல்லாமல், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு (நியாயப்பிரமாணம் ஒருபுறம் இருக்க) என்பதே பவுலுடைய சுவிசேஷம் (அப்போஸ்தலர் 15:9; மற்றும் ரோமர் 2:16; 16:25) பவுல் முதன்முதலாகக் கலாத்தியர்களுடன் இருந்தபோது, அவர்களுக்கு இந்த சுவிசேஷத்தையே பிரசங்கித்தார். ஆனால், அவர்கள் உண்மையாகவே "இந்த சுவிசேஷத்தை" மறந்துவிட்டனர். ஆகவே, மறுபடியும் அவர், அவர்களுக்கு அதை அறியும்படி செய்தார்!

இ. வசனம் 11-12, "..... மனுஷருடைய போதனையின்படியானதல்ல ....." "அவருடைய சுவிசேஷம்" மனிதனால் உண்டானதல்ல என்பதை நிரூபிக்க, பவுல் உண்மையில் மூன்று கூற்றுகளைத் தருகிறார்:

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 1:11-24

1. "(இது) மனுஷனுடைய போசனையின்படியானதல்ல" எந்த ஒரு மனிதனாலும் (பவுலும் இதில் உள்ளடங்குவார்) வடிவமைக்கப்பட்டதல்ல; எந்த ஒரு மனிதனின் சிந்தனையிலும் இது முதன்முதலாக உருவாக்கப்படவில்லை.

2. "நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை..." ஆதி அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேம் சபையிலிருந்த தலைவர்களை இது அநேகமாகக் குறிப்பிடலாம்.

3. "... மனுஷனால் கற்றதுமில்லை ......" இந்தக் கூற்றும், ஆதி அப்போஸ்தலர்களையும் எருசலேமிலிருந்த சபையிலுள்ள தலைவர்களையும் அநேகமாக குறிப்பிடலாம்.

ஈ. வசனம் 12. "... இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" என்றால், பவுல் பிரசங்கித்த சுவிசேஷம், ஒரு வெளிப்பாடு, ஒரு ஆவிக்குரிய தெய்வீக பிரகாசம் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது, சபைக்காகப் பவுலுக்கு இயேசு கிறிஸ்துவின் சிந்தனையிலிருந்து (பரிசுத்த ஆவியானவர் மூலமாக) சொல்லப்பட்டது. (எபேசியர் 3:2-3; 1கொரிந்தியர் 2:6-8, 10-13) "சுவிசேஷம்" யூதருக்காக இருப்பது எப்படியோ அவ்வாறாகவே புறஜாதியாருக்கும் உரியது என்று பேதுருவுக்கு வெளிப்படுத்தப்பட்டதற்கு இது அதிகமாக ஒத்ததாக இருக்கிறது. அப்போஸ்தலர் 10:9-16,28-29; 15:6-9)

உ. தமஸ்கு சாலையில் அவன் சந்திக்கப்பட்டபோது கிறிஸ்துவிடமிருந்து பவுல், "அவனுடைய சுவிசேஷத்தை" அநேகமாகப் பெற்றிருக்கவேண்டும். (அப்போஸ்தலர் 9:6,16) அல்லது அவருடைய மனந்திரும்புதலுக்குப் பின், உடனடியாக அரேபியாவிற்கு சென்று தங்கியிருக்கும்போது பெற்றிருக்கலாம். (கலாத்தியர் 1:17)

2. பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் மனிதர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதல்ல (1:13-17)

அ. வசனம் 13-14. "நான் யூத மார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பவுல், யூதமார்க்கத்தை "வாழ்க்கை நடை" என்று விவரிப்பது சரியாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகள், பரிசேயர்களாலும் நியாயப்பிரமாண போதகர்களாலும் விரிவாக்கப்பட்டு, அதில் ஒரு நபருடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நுட்பமான விளக்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. யூத மார்க்கத்தில் பவுலுடைய வாழ்க்கை நடையில் கீழ்க்கண்ட காரியங்கள் உள்ளடக்கப்பட்டது:

1. தேவனுடைய சபையை கடூரமாக உபத்திரவப்படுத்தி அழிப்பது - பவுல், அதி தீவிர மதப்பற்றுள்ள யூதன். இக்காரணத்தினால் அவன், "மிருகத்தனமாக, பலவந்தமாக, அசாதாரணமான அளவிற்கு, அளவிடமுடியாத எல்லைக்கு மேல்", சபையை உபத்திரவப்படுத்தி அழித்தான். (அப்போஸ்தலர் 8:1-4; 9:1-2,13-14, 22:4-5; 26:9-12)

2. அவனுடைய காலத்திலிருந்த அநேக யூதர்களுக்கெல்லாம் மேலாக, அவன் யூதமார்க்கத்தில் முன்னேறியிருந்தான் - இதற்கு, தோராவை

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 1:11-24

(பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் மோசேயின் நியாயப்பிரமாணம், பஞ்ஞாகமம்) யும், அதனோடு சம்பந்தப்பட்ட ரபிகளின் (பரிசேயர்கள்) பாரம்பரியங்களையும் மனப்பாடம் செய்ய ஏராளமான நேரம் அவசியமாயிருந்திருக்கும். பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளையும் அதனோடு சம்பந்தப்பட்ட பரிசேயர்களுடைய பாரம்பரியங்களையும் நிறைவேற்ற, தனிப்பட்ட சொந்த வைராக்கியமும், அதி தீவிர மதப்பற்றும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். (ஆகிலும் சாத்தியமில்லை என்று நிரூபிக்கப்பட்டது. ரோமர் 7:14-20) இது, சந்தேகமின்றி, சபை சார்பாக பகைமை உணர்ச்சியுடன் இருப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது! (அப்போஸ்தலர் 22:3-5)

3. அவனுடைய பிதாக்களுடைய பாரம்பரியத்தைப்பற்றிய அவனுடைய வைராக்கியம் – இவைகள் தோராவோடு சம்பந்தப்பட்ட ரபிமார்களின் (பரிசேயர்கள்) போதனைகள், அவைகளில் 613 கட்டளைகள் (நேரடியாக செய்யவேண்டிய கற்பனைகள் 248, மற்றும் செய்யக்கூடாது என்று தவிர்க்கவேண்டியவைகள் 365) பிலிப்பியருக்கு எழுதின அவருடைய நிருபத்தில், அவருடைய முந்தைய வாழ்க்கை நடையைக் குறித்துப் பேசுகிறார் (3:4-6) யூத மார்க்கத்தில் பவுலுடைய இந்த முந்தின வாழ்க்கை நடையைப் பற்றியவைகள் எல்லாவற்றையும், கலாத்தியர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்.

ஆ. புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல கிறிஸ்து பவுலை ஏன் தெரிந்தெடுத்தார் என்பதை நாம் பார்க்கலாம்.

இக்காரியத்தைச் செய்வதற்கு, அவனுடைய மதப்பற்றும், அதி தீவிர மத வைராக்கியமும், யூதமார்க்கத்தைப்பற்றிய அறிவுமுடைய ஒரு மனிதன் அவசியமாக இருக்கிறது. விசேஷமாகப் படிப்படியாகத் தொடர்ந்து கீழ்க்கண்டவர்களால் எதிர்த்து சவால் விடப்படும் நிலையிலிருந்தது

1. எருசலேமிற்கு வெளியேயுள்ள துன்மார்க்கமும் விக்கிரக ஆராதனையும் நிறைந்த புறஜாதிகள்.

2. அவர் ஸ்தாபித்த சபைகள் இருந்த எருசலேம் மற்றும் வேறு பட்டணங்களிலிருந்த மனந்திரும்பின யூதர்கள்.

இ. வசனம் 15-16. “அப்படியிருந்தும் ..... தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன் ....” “அழைத்த” என்பது, “புறஜாதிகள் மத்தியில் கிறிஸ்துவை பிரசங்கிக்க பவுல் அழைக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் 9:15; ரோமர் 11:13; 15:15-16; கலாத்தியர் 12:7) தேவன் பவுலை அழைத்த போது, அவர் அவனுக்காக மூன்று காரியங்களைச் செய்தார்:

1. பிறப்பிலிருந்தே அவன் பிரித்தெடுக்கப்பட்டதை அவனுக்கு ஞாபகப்படுத்தினார். “பவுல் பிறப்பதற்கு முன்பாகப்” புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்காக, தேவன் அவரை முன் குறித்தார், என்று இது பொருள்படும். (இதற்கு ஒத்த சம்பவம் எரேமியா 1:5 ஏசாயா 49:1-3)

2. அவருக்கு, அவருடைய கிருபையை அருளிச் செய்தார். “கிருபை” என்பது, பவுலுக்கு அவருடைய மனந்திரும்புதலின் போது கொடுக்கப்பட்ட தகுதிக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய தேவனுடைய சகாயத்தை, இங்கே குறிப்பிடுகிறது.

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 1:11-24

3. அவருக்குள் தேவனுடைய குமாரனை வெளிப்படுத்தினார். இது தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் தனிப்பட்ட முறையில், பவுலுக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டதை குறிக்கும். இது, சரீரம், அவ்வாறே ஆவியில், உயிர்த்தெழுந்த கிறிஸ்து பிரகாசிக்கப்பட்டு, பவுலுக்கு நாடகபாணியில் வெளிப்படுத்தப்பட்ட சம்பவமாக இருக்கிறது. (அப்போஸ்தலர் 9:3-7). இயேசுவே, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாகிய மேசியா என்பது பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டதும் உள்ளடங்கும் (அப்போஸ்தலர் 9:20).

ஈ. வசனம் 15-17. "தம்முடைய குமாரனை (கிறிஸ்து) நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக ... பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும் ...". இங்கே, பவுல் உண்மையில் மூன்று காரியங்களைச் சொல்லுகிறார். புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க அழைக்கப்பட்டபோது, அவர்:

1. மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை. இது மற்றொரு வழியில், பவுல் "அவருடைய சுவிசேஷத்தை" வேறு எந்த ஒரு மனிதனிடமிருந்தும் பெற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லுகிறார். (வசனம் 12)

2.எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகவில்லை. இந்த வாக்கியத்தில்,எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள், அவருடைய சுவிசேஷத்திற்கு ஆரம்ப காரணமானவர்கள் அல்ல என்று பவுல் தெரிவிக்கிறார். அவர், முதன் முதல் இருந்த ஆதி அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் தம்மைச் சேர்த்துக் கொள்ளுகிறார்!

3. உடனடியாக அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பி வந்தார். அவருடைய சுவிசேஷத்தை வேறு எந்த ஒரு மனிதனிடமிருந்தும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை இது மேலும் அதிகப்படியாக நிரூபிக்கிறது.

உ. வேறு எந்த மனிதனிடமிருந்தும் அவருடைய சுவிசேஷத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை நிரூபிக்கும்படியாக, பவுல் இக்காரியங்களெல்லாவற்றையும் கூறுகிறார். இதற்கு மாறாக, தனிப்பட்ட முறையில் இயேசுகிறிஸ்துவிடமிருந்து வெளிப்பாடாகப் பெற்றுக்கொண்டார்! (வசனம் 12) யூதருடைய நியாயப்பிரமாணம் அல்லது பாரம்பரியங்களிலிருந்தும் அவருடைய சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று, யூத மார்க்கத்திலிருந்த முந்தின வாழ்க்கை நிரூபிக்கிறது. இவைகள் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு நேர் எதிராக இருக்கின்றன!

3. எருசலேமிலிருந்த ஆவிக்குரிய தலைவர்கள் அல்லது யூதேயாவிலிருந்த சபைகள், பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு எதிராக விவாதத்திற்கு அழைக்கவில்லை (1:18-24)

அ. வசனம் 18. "பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்". அப்போஸ்தலர்களையோ அல்லது எருசலேமிலிருந்த சபையையோ கலந்து ஆலோசிப்பதற்கு முன்பாகவே, மூன்று வருடங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் செலவிட்டதாகப் பவுல் அநேகமாகக் கூறுவது போல் காணப்படுகிறது.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் கலாத்தியர் 1:11-24

(அப்போஸ்தலர் 9:20-30) ஆகிலும், அதிகப் பொருத்தமாகத் தெரிவது என்னவென்றால், எருசலேமுக்குச் செல்லுவதற்கு முன், அவர் மூன்று வருடங்கள் அரேபியாவில் செலவிட்டு, பின் தமஸ்கு பட்டணத்தில் குறுகிய காலம் சுவிசேஷத்தைப் பரப்பினார் என்பதாகும். இவைகளெல்லாம் எப்படியிருப்பினும், அவர் மறுபடியும், கீழ்க்கண்டவற்றில் அவருடைய சுதந்திரத்தை நிலைநாட்டுகிறார்:

1. அவருடைய சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்ட காரியம்.

2. அதைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டது.

ஆ. வசனம் 18-19. "..... பேதுருவைக் கண்டுகொள்ளும்படி ..... கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை". பேதுருவைத் தனிமையாகச் சந்தித்து, அவனைக் கண்டுகொள்ளும்படியாகப் பவுல் எருசலேமுக்குச் சென்றான். "கண்டுகொள்ளும்படியாக" என்பது, பவுல், எருசலேமுக்குச் சென்றது, அவனுடைய சுவிசேஷத்திற்கு பேதுருவினுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது அதைப் பிரசங்கிப்பதற்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ இல்லை என்பதை உணர்த்துகிறது. அவனுடைய பதினைந்து நாள் சந்திப்பில், எருசலேம் சபையின் ஆவிக்குரிய தலைவரான யாக்கோபைச் சந்தித்தார். ஆகிலும், இயேசுவானவர், உலகத்தில், அவருடைய ஊழியக்காலத்தில் என்ன பேசினார் என்றும் என்ன செய்தார் என்பதையும் பேதுரு மற்றும் யாக்கோபிடமிருந்து, பவுல் சந்தேகமின்றி கற்றுக்கொண்டார்.

இ. வசனம் 20. "நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று, தேவனுக்கு முன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். "சுவிசேஷம் மற்றும் அதைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டது, அப்போஸ்தலர்களையோ அல்லது, எருசலேமிலிருந்த சபையையோ சார்ந்ததல்ல என்பதைப் பவுல் மறுபடியும் (இந்த முறை மிகுந்த வற்புறுத்தலோடு, சக்தியோடு) அதிக முயற்சியோடு உறுதிப்படுத்துகிறார். இதற்கு மாறாக, அவருக்கு விரோதமாக தவறாகக் கூறப்பட்ட குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு அநேகமாகப் பவுல் பதிலளிப்பதாக இருக்கக்கூடும்.

ஈ. வசனம் 21-23 "பின்பு சீரியா, சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன். ... யூதேயா தேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்". சிலிசியா மற்றும் சீரியா நாடுகளை பவுல் சந்தித்ததைப்பற்றி, அப்போஸ்தலர் 9:30 மற்றும் 11:25-26 வசனங்களில் எழுதப்பட்டுள்ளது. பவுலுடைய சொந்த ஊர், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணம். ஆகவே, பவுலுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தினுடைய அடுத்த காலம் எருசலேமுக்கு அருகேயுள்ள பிரதேசங்கள் அல்ல. அந்த சமயத்தில், யூதேயா சபையிலுள்ள யாவருக்கும் உண்மையில் அவன் "அறியப்படாதவனாக" இருந்தான். எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் சபையின் அதிகாரத்திற்கு அவர் கீழ்ப்பட்டவர் அல்ல என்பதற்கும் அவருடைய சுவிசேஷம் மற்றும் அதைப் புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்க அவர்களால் அனுப்பப்படவில்லை என்பதற்கும் மேலும் அத்தாட்சியாக இருக்க இந்தக் குறிப்புகள் பவுலால் கூறப்பட்டன.

பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 1:11-24

உ. ஸ்தேவானுடைய இரத்த சாட்சி மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட உபத்திரவங்களால் சிதரப்பட்ட கிறிஸ்தவ குழுக்களினால் "யூதேயாவிலுள்ள (பாலஸ்தீனம்) சபைகள்" இருந்தது. (அப்போஸ்தலர்8:1) இந்த சம்பவத்திற்கு முன்பாகவே, எருசலேமிலிருந்த சீடர்களின் வெளியிட சுவிசே ஊழியத்தின் மூலமாக அவைகளில் சில ஸ்தாபிக்கப்பட்டிருக்க சாத்தியமுண்டு. இந்த சபைகள் பவுலைத் தனிப்பட்ட முறையில் அறிந்ததுமில்லை, பவுல் அவர்களைச் சந்தித்ததும், அவர்களுடைய சபைகளில், அவருடைய மனந்திரும்புதலுக்குப் பின் பிரசங்கித்ததுமில்லை. அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கையை மட்டும் கேள்விப்பட்டிருந்தார்கள்: "முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே (எருசலேமில்) தான் அழிக்கத் தேடின விசுவாத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள்". (வசனம் 23)

ஊ. வசனம்24. "என்னைப் பற்றி (அவர்கள்) தேவனை மகிமைப்படுத்தினார்கள்", "அவர்கள்" என்பது, யூதேயாவிலிருந்த சபைகளைக் குறிக்கும். பவுலுடைய மனந்திருப்புதல் மற்றும் ஊழியத்தினிமித்தமாக இச்சபைகளிலிருந்த விசுவாசிகள் தேவனை மிக உயர்வாக மகிமைப்படுத்தினார்கள், மகத்துவமுள்ளவராக, அவரைக் கண்டனர், அவருக்கு மரியாதை செலுத்தினர் மற்றும் அவருடைய நாமத்தை மிக அதிகமாக பெரிதாக்கினார்கள்.

தேவன் அவருக்குஎதேனும் செய்யவேண்டுமென்று, ஆர்வத்துடன் மிக ஊக்கமாக, சந்தேகமின்றி அவர்கள் ஜெயம்செய்திருப்பார்கள். தேவன், இவையெல்லாவற்றின் மூலமாகவும் மிக அதிகமாக மகிமைப்பட்டார்!

முடிவுரை

அ. பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்,

1. இயேசு கிறிஸ்துவிடமிருந்து வெளிப்பாடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2. மனிதர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை.

3. எருசலேமிலிருந்த ஆவிக்குரிய தலைவர்கள் அல்லது யூதேயாவிலிருந்த சபைகள் ஆகிய இவைகளால் விவாதத்திற்கு அழைக்கப்படவில்லை. ஆகவே இது, ஒன்றே ஒரு சுவிசேஷம், இத்துடன் எதுவும் சேர்க்கப்படவேண்டிய அவசியம் இல்லை, அல்லது, இதிலிருந்து எதுவும் எடுக்கப்படவும், கூடாது!

ஆ. யூதமார்க்கத்தில் வாழ்க்கை, சபையை அவன் உபத்திரவப்படுத்துவது, மற்றும் அவன் மனந்திரும்புவான் என்பதும், புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் அவருடைய தூதனாக இருப்பான் என்பதும், நம்மில் சிலருக்கு ஆறுதலாக இருப்பான் என்பதும் தேவனால் ஏற்கனவே அறியப்பட்டிருந்தது. நாம் பவுலைப்போல இரட்சிக்கப்படும் முன், பிரதான பாவியாகவும், சபையை உபத்திரவப்படுத்துகிறவர்களாகவும் இருந்தபோதிலும், சபையின் சிறப்பான ஊழியங்களுக்கு, நம்மை அழைக்க தேவன் நிச்சயமாகத் தயங்கமாட்டார்! பவுலுக்குச் செய்தது போல, நமக்கும் அவர் அநேகமாக நாம் பிறப்பதற்கு முன்னதாகவே இதைத்திட்டம் செய்திருக்கிறார்!

புறஜாதிகள்
மத்தியில்
பவுல் பிரசங்கித்த
சுவிசேஷம்
கலாத்தியர் 2:1-10

முன்னுரை

அ. கலாத்தியாவில், அவருடைய சுவிசேஷத்தைப் புரட்டுகிற யூத கிறிஸ்தவர்களுக்கு எதிராக, பவுல் அவருடைய சுவிசேஷத்தை, முதலாம் அதிகாரத்தில் ஆதரிக்கிறார். அவருடைய சுவிசேஷமாகிய, "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்பதோடு, அவர்கள், விருத்தசேதனத்தையும், பழைய ஏற்பாட்டு மற்ற கற்பனைகளையும் சிறப்பான நாட்களையும் அனுசரிப்பதையும், சேர்க்க முயற்சி செய்தனர்.

ஆ. பவுல் அவருடைய சுவிசேஷத்தை எந்த மனிதனிடமிருந்தும் பெற்றுக் கொள்ளவில்லை, ஆனால் கிறிஸ்துவாகிய அவரிடமிருந்து தெய்வீக வெளிப்பாட்டின்மூலமாக பெற்றுக்கொண்டதாகப் பவுலும் கூறுகிறார். "எந்த ஒரு மனிதன்" என்றால், அப்போஸ்தலர்களையும், எருசலேமிலிருந்த சபைத் தலைவர்களையும் அவர் குறிப்பிடுகிறார். தமஸ்கு சாலையில் அவர் மனந்திரும்பினதற்குப் பின் மூன்று வருடங்கள் கடந்து செல்லும் வரை, அவர் எருசலேமுக்குச் செல்லவில்லை என்று கூறுவதின்மூலமாக இதை அவர் நிரூபிக்கிறார். அவ்வாறு சென்றதும் பேதுருவுடன் "அறிமுகம் செய்துகொள்வதற்காக" மட்டுமல்லாமல், சுவிசேஷத்தைப் பற்றி அவரோடு ஆலோசிப்பதற்கு அல்ல. எருசலேமில் அவர் இருக்கும்போது, கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபுக்கும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். எருசலேமுக்குச் சென்று வந்தபிறகு, அவர் சிரியா மற்றும் சிலியா (சவுலுடைய சொந்த ஊராகிய தர்சுபட்டணம் இருந்த பிரதேசம்) நாடுகளுக்குச் சென்றார்.

இ. ஆகவே, அவருடைய நிருபத்தின் இந்த பாகத்தை, "பதினாலு வருஷம் சென்றபின்பு, ...மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்", என்ற வாக்கியத்துடன் ஆரம்பிக்கிறார். இது மறுபடியுமாக, அவருடைய சுவிசேஷம் மற்றும் புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்கும்படியாக அனுப்பப்பட்டது ஆகியவை, கர்த்தரிடத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டதே யல்லாமல், எருசலேமிலிருந்த ஒரு நபரிடமிருந்தும் அல்ல என்பதை நிரூபிக்கிறது.

ஈ. எருசலேமுக்கு இந்த இரண்டாம் வருகை தெய்வீக வெளிப்பாட்டின்படியாகும். ஆனால் அதன் நோக்கம் முதல் வருகையிலிருந்து வேறுபட்டது. அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேம் சபைக்கும் பவுல் மற்றும் அவனுடைய சக ஊழியர்கள் ஆகிய இவர்களுக்கு இடையே, "கிறிஸ்துவில்வைக்கும் விசுவாத்தினால் மட்டும் இரட்சிப்பு" என்ற சுவிசேஷம் சம்பந்தமாக ஐக்கியம் இருந்தது என்பது காட்டப்படுகிறது.

1. புறஜாதிகள் மத்தியில் பிரசங்கிக்கப்பட்ட பவுலுடைய சுவிசேஷம் எருசலேம் சபைக்கு வைக்கப்பட்டது. (2:1-2)

அ. வசனம் 1 "பதினாலு வருஷம் சென்றபின்பு,........ மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்." இது, எருசலேமுக்குப் பவுலுடைய இரண்டாவது பிரயாணமாக இருக்கிறது. இது, அநேகமாக அவனுடைய முதல் வருகைக்குப் பதினாலு வருடங்களுக்குப் பின் "பேதுருவைக் கண்டுகொள்வதற்காக" மேற்கொண்டதாக இருக்கவேண்டும். (கலாத்தியர்1:18) இந்த இரண்டாம் வருகையைப்பற்றி மேலும் அதிக விளக்கம் அப்போஸ்தலர் நடபடிகள் 15:1-31 வசனங்களில் காணலாம்.

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் கலாத்தியர் 2:1-10

ஆ. வசனம் 1 "........நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு, பர்னபாவுடனே கூட ....." தீத்துவைப்பற்றி அப்போஸ்தலர் நிருபத்தில் கூறப்பட்ட விளக்கத்தில் (அப்போஸ்தலர்15:2) சொல்லப்படவில்லை. கீழ்க்கண்ட காரணங்களுக்காக அவனைக்கூட அழைத்துச் சென்றிருக்க சாத்தியமுண்டு:

1. "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு" என்ற பவுலுடைய சுவிசேஷத்தின் வல்லமையை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக,

2. இந்த சுவிசேஷம் யூதருக்காக அவ்வாறே புறஜாதிகளுக்கும் என்பதற்கு அத்தாட்சியாக.

3. "விருத்தசேதனம் மற்றும் பழைய ஏற்பாட்டிலுள்ள மற்ற கற்பனைகளை அனுசரிக்கவேண்டும்" என்பது, இரட்சிப்புக்குத் தேவையானவைகள் அல்ல.

இ. தீத்து,

1. பவுலுடைய ஊழியத்தில் புறஜாதிகளில் மனம் திரும்பினவர்களில் ஒருவன்

2. அவருடைய தூரதேச சுவிசேஷ ஊழியத்தில், அவருடைய உடன் ஊழியனாயிருந்தான்.

3. கொரிந்து பட்டணத்திற்கு அவருடைய பிரதிநிதியாக அனுப்பப்பட்டான்:

(அ) அந்த சபையோடு பவுலுடைய தனிப்பட்ட சொந்த சம்பந்தத்தில் ஏற்பட்ட தர்மசங்கடமான சூழ்நிலையை கையாண்டு சமாளிப்பதற்கு உதவினான். (2கொரிந்தியர்7:5-16; 12:18)

(ஆ) எருசலேமின் சகாய நிதி சேகரிப்பதில் கொரிந்து சபை பங்கெடுக்கும் காரியத்தில் உதவி செய்தான்.

ஈ. வசனம் 2 "நான் தேவ அறிவிப்பினாலேபோய்,......" "தேவ அறிவிப்பினாலே" என்றால், 1:12வசனத்தில் பொருள்படுவதுபோல் இங்கேயும் பொருள்படுகிறது. வெளியாக்கப்படுகிறது, ஒரு ஆவிக்குரிய தெய்வீக ஒளிமயமாக்கப்படல், இயேசுகிறிஸ்துவின் சிந்தனை (பரிசுத்த ஆவியானவர் மூலமாக) வார்த்தைகளாக பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவருடைய சுவிசேஷம் மற்றும் ஊழியம் தொடர்பாக, பவுலுக்கு இது முதலாவது அல்லது ஒரே வெளிப்பாடு அல்ல. (கலாத்தியர் 1:12 இத்துடன் அப்போஸ்தலர் 9:5-6 மற்றும் 1 கொரிந்தியர் 2:6-7,10; அப்போஸ்தலர் 13:2; 16:9; 18:9-10; 27:23-24)

உ. வசனம் 2 "புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்" அவருடைய சுவிசேஷசெய்தியின் உண்மைத்தன்மையின் தொடர்பான ஒரு தீர்மானத்தை பவுல் விரும்பவில்லை. அவர்கள் உறுதியாகவும், யாவரும் அறிய கீழ்க்கண்டவாறு கூறும்படியாக அவர் விரும்பினார்!

1. அவர்கள், அத்துடன் இசைந்து இருப்பதாக தெரிவிக்கவேண்டும்.

2. விருத்தசேதனம் மற்றும் பழைய ஏற்பாட்டு மற்ற கற்பனைகளை கைக்கொள்ளுவதிலிருந்து, அது விடுதலை பெற்றிருக்கும். (முற்பிதாக்களின் பாரம்பரியங்கள்- 613; தவிர்க்கவேண்டியவைகள் 365 மற்றும் திட்டமாகச் செய்யவேண்டிய கற்பனைகள், 248)

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் கலாத்தியர் 2:1-10

3. இந்த செய்தியை, அவர் ஏற்கனவே நிலைநாட்டின புறஜாதிகளின் சபைகளுக்குப் பரப்பவேண்டும்.

ஊ. வசனம்2 "எண்ணிக்கையுள்ளவர்களுக்கே, தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்" "எண்ணிக்கையுள்ளவர்கள்" என்பதில் எருசலேமில் இருந்த அப்போஸ்தலர்களும், சபைத்தலைவர்களும் அடங்குவார்கள். இதில் பேதுரு, யோவான், மற்றும் அச்சமயம் எருசலேமில் இருந்த எவரேனும் வேறு அப்போஸ்தலர்கள், யாக்கோபு மற்றும் அநேகமாக சபையில் இருந்த மற்ற மூப்பர்கள் (போதகர்கள்) இத்துடன் யூதாவும் சீலாவும் உள்ளடங்குவார்கள் (அப்போஸ்தலர் 15:22)

எ. முழு சபைக் கூட்டத்திற்கு முன்பாகவும், பவுலும் பர்னபாவும் கூட, அவர்களுடைய தூர இட சுவிசேஷ ஊழியங்களின் சமாச்சாரங்களையும் முயற்சிகளையும் பற்றிய அறிக்கையைக் கொடுத்தார்கள் என்பது நிச்சயம். ஏனெனில் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலுள்ள விளக்கத்தில் இவ்வாறு கூறப்படுகிறது: அவர்கள்..... சபையாராலும், அப்போஸ்தலராலும், மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து..... அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்து.... பர்னபாவும் பவுலும்...... சொல்லக்கேட்டார்கள். (அப்போஸ்தலர் 15:4-5,12)

ஏ. வசனம் 2 "...... ஆயினும் நான் ஓடுகிறதும்" ஓடினதும் வீணாகாதபடிக்கு......" அவருடைய சுவிசேஷத்தில் எந்தவிதமான தவறும் இருந்ததாகப் பவுல் பயப்படவில்லை. அதைக் கிறிஸ்துவிடமிருந்தே தெய்வீக வெளிப்பாட்டின் மூலமாக அவர் பெற்றுக்கொண்டார். (கலாத்தியர்1:12) ஆகிலும், கீழ்க்கண்ட காரியங்களைப் பற்றி அவர் பயப்பட்டார்.

1. அவருடைய வருங்கால ஊழியம்.

2. புறஜாதிகளுக்கு, தூரவெளியிட சுவிசேஷ ஊழியங்களுக்கு என்ன நேரிடப்போகிறது என்பதைக் குறித்து.

3. அவர் ஏற்கனவே நிலைநாட்டின தூரதேச சுவிசேஷ ஊழிய சபையிலுள்ள விசுவாசிகளுக்கு என்ன சம்பவிக்கக் கூடும் என்பதைப்பற்றி.

4. கிறிஸ்தவ மார்க்கம் இரண்டு தனி கிளைகளாகப் பிரிக்கப்படும்: யூத கிறிஸ்தவ மார்க்கம், புறஜாதிகளின் கிறிஸ்தவ மார்க்கம். கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற கொள்கை, அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேமிலிருந்த மற்ற சபைத்தலைவர்களால், தெளிவாகவும், யாவரும் அறிய பொதுவாகவும் எடுத்துக்காட்டப் படாவிட்டால், அதன் விளைவு பயங்கரமான அழிவைக் கொடுப்பதாக இருக்கும். (பிலிப்பியர் 2:16)

ஒ. சபையின் சரித்திர கால முழுவதிலும், சபைத்தலைவர்களின் கூட்டங்களில், அநேகமாக இந்தக் கூட்டமே மிக முக்கியமானதாக இருக்கும். இதில் மிக நிச்சயமாக கிறிஸ்து இருந்தார். ஏனெனில், அவருடைய சபையின் வருங்காலம், இங்கு, தராசுதட்டுகள் எங்களம் தூக்கப்படுகிறது என்பதில்தான் தீர்மானிக்கப்படும். "தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகள்" (தேவவசனங்கள்) மற்றும் "பரிசுத்த ஆவியானவர்" ஆகிய

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் கலாத்தியர் 2:1-10

இவை இரண்டும், எருசலேம் சபையின் மூலமாக செய்த தீர்மானங்களுக்கு (அப்போஸ்தலர்15:15-18,28) பிரதமத்தூண்டுதலாக இருந்தது.

2. புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்துடன் விருத்தசேதனம் சேர்க்கப்படவில்லை. (2:3-5)

அ. வசனம் 3. "ஆனாலும், என்னுடனே கூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக் கொள்ளும்படிக்குக் கட்டாயம் பண்ணப்படவில்லை". "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு", என்ற பவுலுடைய சுவிசேஷத்திற்கு இது மிக சிறப்பான முக்கியத்துவமுடையதாக இருக்கிறது. பேதுரு மற்றும் யோவான், எருசலேமிலுள்ள மற்ற அப்போஸ்தலர்கள், எருசலேம் சபையின் ஆவிக்குரிய தலைவராகிய யாக்கோபு, மற்றும் எருசலேமிலிருந்த மற்ற போதகர்கள் ஆகிய இவர்களெல்லாரும், தீத்து விருத்தசேதனம் பெற வேண்டிய அவசியமில்லை என்று நினைப்பார்களேயானால், பவுலுடைய சுவிசேஷம், யூதருக்கும், புறஜாதியாருக்கும் ஒரே மாதிரியானதே என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது!

ஆ. வசனம் 4. "கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து, நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று". "கள்ளச் சகோதரர்கள்" என்பவர்கள் முற்றிலும் இரட்சிக்கப்பட புறஜாதிகளான விசுவாசிகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையையுடைய மனந்திரும்பின யூதர்களாயிருந்தார்கள். (அப்போஸ்தலர் 15:1-2,5; 1கொரிந்தியர் 11:26)

இ. அது ஒரு யுத்த சேனையாயிருந்ததுபோல "கள்ளச் சகோதரர்களை" அவர் எதிர்த்ததைப் பற்றிப் பேசுகிறார். அவர்கள் துரோகிகளாகி, கிறிஸ்தவ மார்க்கத்தில் உயர்ந்த பதவிகளில் இரகசியமாய் நுழைந்து, புறஜாதிகளான கிறிஸ்தவ விசுவாசிகளை வேவு பார்த்தனர். அவர்களுடைய நோக்கம்:

1. கலாத்திய விசுவாசிகளை சிறைபிடிக்க (அவர்கள் பக்கமாக வெற்றிக்கொண்டு இழுத்துக்கொள்ள)

ஆகவே, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று உரிமையோடு கூறிகொண்ட, "கள்ளச் சகோதரர்கள்" ஆனால், உண்மையில் கிறிஸ்தவர்களாக முற்றிலும் இல்லவே இல்லை. (அல்லது கிருபையிலிருந்து விழுந்து போன கிறிஸ்தவர்கள் - கலாத்தியர் 15:4)

ஈ. "கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை" சுயாதீனம்:

1. மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து நியாயப்பிரமாணத்தை, "அடிமைத்தனத்தின் நுகம்", என்று கலாத்தியர் 5:1 வசனத்தில் பவுல் அழைக்கிறார். (மத்தேயு 11:28-29) அது நம்மைக் குற்றஞ்சாட்டி மரணத்திற்குட்படுத்தியது.

2. உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து நடக்க (ஏனெனில் நாம் பாவ சுபாவமாகிய வல்லமையான சக்தியிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். கலாத்தியர் 5:18,25; ரோமர் 8:1-4)

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 2:1-10

உ. வசனம் 5. "... நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை" "நாங்கள்" என்பது, பர்னபாவையும் தீத்துவையும் குறிப்பிடும். "கள்ளச் சகோதரர்கள், அதிகாரத்துடன் கேட்டுக்கொண்டபோது, சிறிதும் இணங்கி பதிலளிக்கவில்லை. இது, "காலின்கீழ் மிதித்து அடக்கிவிட்டனர்" அவர்கள் "ஒரு அங்குலமும் விட்டுக் கொடுக்கவில்லை" என்று பொருள்படும். "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற அவர்களுடைய சுவிசேஷம் மற்றவர்கள், மல்லுக்கு நின்று அவர்களுடைய கரங்களிலிருந்து பறிபோய்விட அவர்கள் அனுமதிக்கவில்லை!

ஊ. இன்றுள்ள சபைகளிலுள்ள ஆவிக்குரிய தலைவர்களும் விசுவாசிகளும், "கள்ளச்சகோதரர்கள்" மல்லுக்கு நின்று சுத்த சுவிசேஷத்தை அவர்கள் கரங்களிலிருந்தும் பறித்துக்கொள்ள, அனுமதிக்கக்கூடாது. இயற்கைக்கு மாறானதும் அந்நிய கருத்துக்களும் அடங்கிய, எல்லா "கள்ள சுவிசேஷங்களும்", "உண்மையில் சுவிசேஷங்கள் அல்லவே அல்ல" என்று நியாயந்தீர்க்கப்படவேண்டும் (கலாத்தியர் 1:6-7)

3. புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம், சபையின் தூண்களால் (எண்ணப்பட்டவர்களால்) ஏற்றுக் கொள்ளப்பட்டது (2:6-10).

அ. வசனம் 6 "அல்லாமலும் எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள்...அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக் கவையில்லை..." பேதுரு, யோவான், மற்ற அப்போஸ்தலர்களையும், எருசலேமிலிருந்த சபையின் ஆவிக்குரிய தலைவரான யாக்கோபையும் இது குறிப்பிடுகிறது. அவர்கள் அப்போஸ்தலர்களாகவும், எருசலேமிலிருந்த சபையின் தலைவர்களாகவும் இருந்ததினாலும், அவர்கள் இயேசுவோடு கூட இருந்தவர்கள் என்ற காரணத்தாலும், அவர்கள் மிக உயர்வாகக் கருதப்பட்டதாலும், அது எந்த விதத்திலும் பவுலைப் பாதிக்கவில்லை.

ஆ. யூத கிறிஸ்தவர்கள் (கள்ள சகோதரர்கள்) எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுக்குப் பவுல் கீழ்த்தரமானவர் என்று தொடர்ந்து அவரைத் தவறாக அறிமுகப்படுத்தி வந்ததின் காரணமாகப் பவுல் எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களையும் தலைவர்களையும், அநேகமாக உரிமைபாராட்டவில்லை. ஆகிலும், அவர் அவர்களுக்கு கீழ்க்கண்டவற்றை ரூபகப்படுத்தியிருக்கக் கூடும். அவரும்,

1. உயிர்த்தெழுந்த கர்த்தரை முக, முகமாய்க் கண்டார் (ஆதி அப்போஸ்தலர்கள் என்று அறிவிக்கப்பட தேவையான, ஒரு நிபந்தனை - அப்போஸ்தலர் 1:22)

2. அவருடைய சுவிசேஷத்தையும் ஊழியத்தையும், கிறிஸ்துவிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டார்.

3. ஆதி அப்போஸ்தலர்களின் ஊழியங்களில் இருந்ததுபோலவே, ஒரு அப்போஸ்தலராக அவருடைய ஊழியத்திலும், அடையாளங்களும், அதிசயங்களும், அற்புதங்களும் கூட யாவரும் அறிய வெளிப்படுத்தப்பட்டது.

இ. வசனம் 6 "... எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை..." "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு"

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 2:1-10

என்ற பவுலுடைய செய்தியுடன், விருத்த சேதனத்தையும், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் மற்ற கட்டளைகள் அல்லது பிதாக்களின் பாரம்பரியங்கள் முதலியனவற்றை, அப்போஸ்தலர்களும், எருசலேமிலிருந்த மற்ற தலைவர்களும், சேர்த்துக்கொள்ளவில்லை. அவர்கள் "பவுலுடைய சுவிசேஷத்தை" முற்றிலும் ஆமோதித்து முத்திரையிட்டனர் என்றும், அதில் கூட்டி அல்லது குறைத்து எந்தவிதமான மாறுதல்களும் செய்யாமல் ஏற்றுக்கொண்டனர் என்றும், இதிலிருந்து அறியலாம்!

ஈ. வசனம் 7 "அல்லாமலும்..." பவுலுடைய சுவிசேஷத்தோடு விருத்தசேதனத்தையும், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளையும் சேர்ப்பதற்குப் பதிலாக, அப்போஸ்தலர்களும், எருசலேமிலிருந்த தலைவர்களும், பேதுரு (மற்றும் எருசலேமிலிருந்த மற்ற அப்போஸ்தலர்கள்) எவ்வாறு யூதர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டானோ அவ்வாறே, பவுல், புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கிறிஸ்துவால் அழைக்கப்பட்டான் என்று கண்டு கொண்டார்கள்.

உ. பவுல், யூதர்களுக்கும் அவனுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். உண்மையில், அவன் முதன் முறையாக ஒரு பட்டணத்திற்குள் பிரவேசித்தவுடன், எப்போதும் ஜெப ஆலயத்திற்குச் சென்று அங்கு முதலாவது மனந்திரும்புகிறவர்களை காண முயர்சி செய்வான் (அப்போஸ்தலர் 17:1-4) ஆகிலும், அவர் முதலாவதாக, முக்கியமாக புறஜாதிகளுக்கே அப்போஸ்தலராக இருந்தார். (அப்போஸ்தலர் 13:46-47; 18:6; 22:21; ரோமர் 11:13-14).

ஊ. வசனம் 8 "விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர், புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்..." பவுலுடைய அப்போஸ்தல பதவி இங்கு பேதுருவுக்குச் சமமாக இருக்கும்படியாக உறுதியாக்கப்படுகிறது! பேதுரு, பவுல் அல்லது எந்த ஒரு விசுவாசியாக இருந்தாலும், கிறிஸ்துவுடைய சீடர்கள் எல்லாருடைய ஊழியத்திலும் அதே அந்த ஒரே, தேவனே உண்மையில் கிரியை செய்கிறார்:

1. அவருடைய சாட்சிகளாக அவர்களை அழைக்கிறார்.

2. அவர்களைப் பலப்படுத்துகிறார்.

3. இயேசுவின் நாமத்தில், அடையாளங்களையும், அதிசயங்களையும் அற்புதங்களையும் நடப்பிக்க அவர்களுக்கு உதவி செய்கிறார். (அப்போஸ்தலர் 1:8; 9:17-18; மாற்கு 16:20; யோவான் 14:12).

எ. வசனம் 9 "...தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும்...எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து,..." சபை ஆரம்பமாவதற்கு அவர்கள் முக்கியகாரணமாயிருந்தார்கள், என்பதை மறைமுகமாகக் கூற, யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியவர்கள், "தூண்கள் (நிறுத்திவைக்கப்பட்ட கம்பம், பாதுகாக்கும் ஆதாரம்) என்று பட்டம் சூட்டப்பட்டனர். "வலது கை கொடுத்து" என்பது இரண்டு பிரிவினர்களுக்கு இடையேயுள்ள உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்கு அடையாளம்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் கலாத்தியர் 2:1-10

பவுல் மற்றும் பர்னபாவுக்கும், சபையின் "தூண்" களாக எண்ணப்பட்டவர்களுக்கும் இடையே சுவிசேஷ ஊழியத்தில் கூட்டாளிகளாக சம உரிமை கொடுக்கப்பட்டது.

ஏ. வசனம் 9 "எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது..." புறஜாதிகள் மத்தியில் அவர்களுடைய ஊழியத்தின் விளைவுகளின் அடிப்படையில், பவுலுக்கும் பர்னபாவுக்கும் "அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக வலது கை" கொடுக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 15:4) எருசலேமில் நடந்த கூட்டத்தில், பவுல் நிச்சயமாகவே மிக உயர்வாக மதிக்கப்பட்டார், ஏனெனில் இங்கே, "எனக்கு (பவுல்) அளிக்கப்பட்ட கிருபையை (தேவனுடைய தயவை) அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபு, பேதுரு, யோவான்..." என்று சேர்க்கப்பட்டுள்ளது.

ஓ. வசனம் 10 "தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்..." இது அநேகமாக, புறஜாதி சபைகளால், பணவிஷயத்தில் ஏழ்மையான, எருசலேம் சபைக்கு அனுப்பப்பட்ட தன்னார்வ அன்பின் காணிக்கைகளைக் குறிக்கும். (அப்போஸ்தலர் 11:27-30; ரோமர் 15:26-27; 1 கொரிந்தியர் 16:1-4; 2கொரிந்தியர் 8:1-15; 9:6-15) பவுல் எப்போதும் இதைக்குறித்து அக்கறை கொண்டவராக இருந்தார். அவ்வாறாகவே, இன்று நாம் இதைக் குறித்து அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டும். செல்வ செழிப்புள்ள சபைகள், பணசம்பந்தமாக ஏழ்மையான சபைகளுக்கு உதவிசெய்வதை அவர்களுடைய ஊழியத்தின் ஒரு பாகமாக எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டும். (2கொரிந்தியர் 8:1-15).

ஓ. வருங்கால சபைக்கு, சிறப்பாக புறஜாதிகள் சபைக்கு, மிக அதிக முக்கியமான அநேகக் காரியங்களை, எருசலேம் ஆலோசனை சங்கத்தில் பவுல் நிறைவேற்றினார். எருசலேமுக்குச் செல்லும்படியாக, அவர் பெற்றுக்கொண்ட தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள தூண்டின காரியங்கள்:

1. அதிகாரத்திலும் ஊழியத்திலும், எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுக்குச் சமமாகத் தன்னை நிர்மாணித்துக்கொண்டார்.

2. கள்ள யூத கிறிஸ்தவர்கள் மற்றும் அவர்களுடைய சுவிசேஷத்திற்கும், அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேமிலிருந்த தலைவர்கள் மற்றும் அவர்களுடைய சுவிசேஷத்திற்கும் இடையே என்றென்றைக்கும் வேறுபாடும், வித்தியாசமும் இருக்கும்படி செய்தார்.

3. "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற அந்த ஒரே சுவிசேஷம் யூதர் மற்றும் புறஜாதிகளுக்கு பொதுவானதாக என்றென்றைக்கும் இருக்கும்படி நிலைநாட்டினார்.

4. அவருக்கும் மற்றும் அவருடைய சுவிசேஷத்திற்கும், அப்போஸ்தலர்கள் மற்றும் எருசலேமிலிருந்த தலைவர்கள் மற்றும் அவர்களுடைய சுவிசேஷத்திற்கும் இடையே ஐக்கியத்தை உறுதிப்படுத்தினார்.

புறஜாதிகள் மத்தியில் பவுல் பிரசங்கித்த சுவிசேஷம்
கலாத்தியர் 2:1-10

முடிவுரை

அ. எருசலேம் ஆலோசனை சங்கத்தின் முடிவுகள் என்றன்றைக்கும் தெளிவாக இருக்கிறது. “கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு” என்ற சுவிசேஷம், யூதர் மற்றும் புறஜாதிகளுக்குப் பொதுவானது. மற்றும் இந்த சபை சகாப்தம் முழுவதும் இது கூட்டி மற்றும் குறைத்து எந்த மாறுதலும் செய்யாமல் நிலைத்து நிற்கும்.

ஆ. பவுலுடைய சுவிசேஷம்:

1. எருசலேம் ஆலோசனை சங்கத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2. விருத்தசேதனம் சேர்க்கப்படவில்லை. (அல்லது பழைய ஏற்பாட்டின் வேறு எந்த கற்பனையோ அல்லது யூதமுற்பிதாக்களுடைய பாரம்பரியங்களோ சேர்க்கப்படவில்லை).

3. எருசலேமிலிருந்த சபையில் தூண்களாக (யாக்கோபு, பேதுரு, யோவான்) எண்ணப்பட்டவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இ. எருசலேமுக்குச் செல்லவேண்டும் என்று கிறிஸ்து இயேசுவிடமிருந்து பவுல் பெற்றுக்கொண்ட தெய்வீக வெளிப்பாட்டின் காரணம் சடுதியாக தெளிவாக்கப்பப்பட்டது.

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார் கலாத்தியர் 2:11-21

முன்னுரை

அ. எந்த ஒரு அதிகாரப் பத்திரம், அல்லது அப்போஸ்தலர்கள் அல்லது எருசலேமிலிருந்த தலைவர்கள் ஆகியவர்களின் செல்வாக்கு ஆகிய இவைகள் ஒன்றும் இல்லாமல், கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக் கொண்ட நேரடியான வெளிப்பாட்டின் மூலமாகப் பெற்றுக்கொண்ட அவருடைய சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தல ஊழியத்திற்கு ஆதாரவாக அதிகாரம் 1-2 பவுல் வாதாடிய அநேக விவாதங்களில் இதுவே கடைசியானது. இந்த விவாதங்களில், கீழ்க்கண்ட அவருடைய நடவடிக்கைகளும் சேர்த்துக்கொள்ளப்படும்:

1. ஒரு கிறிஸ்தவராக அவருடைய ஆரம்ப கிரியைகள் (1:13-17)

2. கிறிஸ்தவராவதற்கு முன் எருசலேமுக்கு அவருடைய முதல் வருகை (1:18-24)

3. பதினான்கு வருடங்களுக்குப் பின் எருசலேமுக்கு அவருடைய வருகை (2:1-10)

ஆ. அவருடைய கடைசி விவாதம், அவருக்கும் அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கும் இடையே சிரியாவிலுள்ள அந்தியோகியாவில் நடைபெற்ற ஒரு சம்பவம். இதுவே இந்த போதனைக்குரிய பாடப்பொருள்.

1. அந்த சம்பவம் (2:11-13)

அ. வசனம் 11. "மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்த போது, அவன்மேல் குற்றஞ் சுமத்தினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்". "அந்தியோகியா" இது சிரியாவிலுள்ளது, சிரியாவின் தலைமைப்பட்டணமாக இருந்தது. ரோம சாம் இராஜ்ஜியத்தின் மூன்றாவது தலைமைப்பட்டணம். (ரோமாபுரிக்கும் அலெக்சந்திரியா பட்டணத்திற்கும் அடுத்தாற்போல்) பர்னபாவும் பவுலும், இந்த சபையிலிருந்து தான், முதன்முதலாவது தூரதேச சுவிசேஷ ஊழியர்களாக அனுப்பப்பட்டனர். (அப்போஸ்தலர் 13:1-4; 14:26). எருசலேம் மற்றும் எருசலேம் ஆலோசனை சங்கம் ஆகியவற்றிற்கு பவுல் வருகை தந்தபின், பேதுரு அநேகமாக அந்தியோகியாவுக்கு வந்தார்.

ஆ. "எதிர்த்தேன்" என்றால் விரோதமாக நின்றார், போராடினார், என்று இங்கே பொருள்படும். "முகமுகமாய்" என்றால் அவருடைய சமூகத்தில், நேராக அவருக்கு முன், முகத்திற்கு முகம் நேரடியாக, என்று பொருள்படும். முகமுகமாய் எதிர்த்த இந்தக் காரியம் அந்த குறிப்பிட்ட நேரத்தில் அந்தியோகியா சபை ஆலயத்திற்கு வருகை தந்த யூதர் மற்றும் புறஜாதிகளான கிறிஸ்தவர்கள் யாவருக்கும் முன்பாக பொதுவாக நடைபெற்றது. (வசனம் 14) "குற்றஞ்சுமந்ததினால்" என்றால் ஒரு நபருடைய நடத்தையில் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடிப்பது, ஒருவன் செய்த காரியத்தில் குற்றம் காணுவது, ஒருவன்மீது அவனுடைய கிரியைகளுக்காகக் குற்றஞ்சாட்டி, நியாயந்தீர்ப்பு செய்வது என்று பொருள்படும்.

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார்
கலாத்தியர் 2:11-21

இ. வசனம் 12-13. "எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்கு முன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான் ....." பேதுரு யாவருக்கு முன்பாகவும் குற்றஞ்சாட்டப்பட்டதற்குக் காரணமாயிருந்த சம்பவம் இங்கே விவரிக்கப்பட்டுள்ளது:

1. யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்கு முன்னே சில காரணங்களுக்காக, எருசலேமிலிருந்த சபையிலிருந்து (அதற்கு யாக்கோபு ஆவிக்குரிய தலைவர்) யூத கிறிஸ்தவர்கள் அடங்கிய குழு ஒன்று அந்தியோகியாவுக்கு வந்தது. அவர்கள், யூத கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பண்ணவேண்டும் மற்றும் யூதருடைய உணவு கட்டுப்பாட்டைப் பின்பற்றாத, புறஜாதியாரான விசுவாசிகளுடன் உணவு உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் இயல்பாகவே அவர்கள் போதிப்பார்கள்.

2. அவன் (பேதுரு) புறஜாதியாருடனே சாப்பிட்டான். யூத கிறிஸ்தவர்களின் வருகைக்கு முன், பேதுரு, புறஜாதியாரான விசுவாசிகளுடன் உட்கார்ந்து சாப்பிடுவான். அவர்கள் என்ன புசிக்கிறார்களோ அதைச் சாப்பிடுவான் என்பதும் இத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்!

3. ஆனால் அவர்களுடைய வருகைக்குப் பின் அவன் பின் வாங்கத் துவங்கினான். அவன் பயந்ததினால் புறஜாதிகளிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டான். யூத கிறிஸ்தவர்கள் (விருத்தசேதன பிரிவினர்) இருந்ததின் நிமித்தமாகப் பேதுரு, புறஜாதிகளான விசுவாசிகளோடு உணவு அருந்துவதை விட்டு விலகி, யூத கிறிஸ்தவர்களுடன் மாத்திரம் சாப்பிட்டான். அவர்களுக்கு அவன் "பயந்ததினால்" இதைச் செய்தான். அவன் அவர்கள் என்ன நினைப்பார்களோ என்று திகிலடைந்தான். அத்துடன், புறஜாதிகளான கிறிஸ்தவர்களைவிட அவன் யூதகிறிஸ்தவர்களை அதிகம் மதித்தான்.

4. "மற்ற யூதரும் அவனுடனே கூட மாயம் பண்ணினார்கள் ..... பர்னபாவும் இழுப்புண்டான்". அந்தியோகியாவிலிருந்த மீதமான யூத கிறிஸ்தவர்களும் தூரதேச சுவிசேஷ ஊழியத்தில் பவுலுடைய உடன் ஊழியனான பர்னபாவும், (அவனும் கூட ஒரு யூதன்) பேதுருவுடைய திடீர் திருப்பத்தினால், புறஜாதிகளான விசுவாசிகளுடன் உணவு அருந்துவதை தவிர்த்தனர். "இழுப்புண்டான்" என்றால், அவர்களுடன் சேர்ந்து விட்டுவிட்டான், பேதுருவுடைய நடத்தைக்கு இணங்கிக் கொடுத்தான், என்று இங்கே பொருள்படும்.

ஈ. கர்த்தரிடமிருந்து பெற்ற அவருடைய வெளிப்பாட்டிற்குப் பின், எருசலேமில் இரண்டு முறை கொடுத்த அனுபவ சாட்சிக்குப் பின், பவுலுடைய மாய்மாலம், (ஒன்றைப் பேசுவதும் விசுவாசிப்பதுமாக இருந்து கொண்டு, நேர்மாறான மாதிரியாக நடந்து கொள்வது) பெரும்பாலும் விளங்கிக் கொள்ளக் கூடாததாக இருக்கிறது. (அப்போஸ்தலர் 10:9-16, 28; 11:1-18; 15:6-11) இது கீழ்க்கண்டவற்றை வெளிப்படுத்துகிறது.

1. கடந்த கால தப்பான அபிப்பிராயங்களை விசுவாசிகள் இடைவிடாமல் "மரணத்திற்குட்படுத்த வேண்டியது" அவசியம்.

2. கிறிஸ்தவ நண்பர்களின் வற்புறுத்தலினால், கடந்த கால தப்பான அபிப்பிராயங்களுக்கு ஏற்றவிதமாக வாழ விசுவாசிகள் சோதிக்கப்படுகிறார்கள்.

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார் கலாத்தியர் 2:11-21

3. "மிக உயர்ந்தரமான கிறிஸ்தவர்கள் அல்லது அப்போஸ்தலர்கள்", என்று நாம் கருதுபவர்கள், நண்பர்களின் வற்புறுத்தலின் காரணமாகக் கடந்தகால அபிப்பிராயங்களுக்கு ஒத்ததாக வாழ்வதை நாம் பார்க்கும்போது, ஆச்சரியப்படக்கூடாது!

உ. இருந்தபோதிலும், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அதைக் கருதாமல், யாவருக்கும் முன்பாகவும், இந்த மனிதர்களை நாம் கடிந்துகொள்ளவேண்டும். (1தீமோத்தேயு 5:19-21) பேதுரு, பவுல் கடிந்து கொண்டதை திட்டமாக ஏற்றுக்கொண்டார். ஏனெனில் பிற்காலத்தில், "நம்முடைய பிரியமான சகோதரன்" என்று பவுலைக் குறிப்பிடுகிறார். (2பேதுரு 3:15)

2. கடிந்துகொள்வது (2:14)

அ. "இப்படி, அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி, சரியாய் நடவாததை நான் கண்டபோது" அது எப்படி காணப்படும் என்பதைக் கருதாமல் சுவிசேஷத்தின் சத்தியமே, பவுல், பேதுருவுடன் முகமுகமாய் எதிர்த்து நின்றதற்கு முதன்மையான காரணமாயிருந்தது (வசனம் 5) யூதர் மற்றும் புறஜாதியர் ஒரேவிதமாக இரட்சிக்கப்படுகின்றனர். மற்றும், "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே" தொடர்ந்து இரட்சிக்கப்படுவார்கள். (ரோமர் 1:17; 3:21-22)

ஆ. பேதுருவுடைய நடத்தை, இந்தக் கொள்கையை மீறுவதாக இருக்கிறது.

இது "அவருடைய சுவிசேஷத்தை" தனிப்பட்ட முறையில் தாக்குவதாக பவுல் கண்டார். இரட்சிப்பு மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கையில், விருத்தசேதனமும், பழைய ஏற்பாட்டு மற்ற கட்டளைகளும் கூட இச்சந்தர்ப்பத்தில் (உணவு கட்டுப்பாடு) சேர்க்கப்படும் என்று, யூத கிறிஸ்தவர்கள் இருந்ததினால், பேதுரு மறைமுகமாக, அவருடைய நடத்தையின் மூலமாகக் காட்டுகிறார். இதில் மிக மோசமான காரியம் என்ன என்றால், அந்தியோகியாவில் இருந்த மற்ற யூத கிறிஸ்தவர்களையும், பவுலுடைய கூட்டாளியாகிய பர்னபாமீதும் செல்வாக்கை செலுத்தி அம்மாதிரியாக நடந்து கொள்ள தன் பக்கமாக இழுத்துக்கொண்டார் என்பதே! (பவுலைக் குறித்து சிறிதும் கவலைப்படவில்லை)

இ. "..... எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கி ....." யாவருக்கும் முன்பாக பவுல், பேதுருவைக் கடிந்து கொள்ளும்போது, உண்மையில் இரண்டு காரியங்களைக் கூறுகிறார்:

1. "யூதனாயிருக்கிற நீர் யூதர் முறையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க ....." பேதுரு யூதனாகப் பிறந்து வளர்க்கப்பட்டார். இருந்தபோதிலும், எருசலேமிலிருந்து (யாக்கோபிடமிருந்து) யூத கிறிஸ்தவர்கள் வருவதற்கு முன், யூதர் பழக்க வழக்கங்களை அனுசரிக்காமல், புறஜாதியார் போல வாழ்ந்தார். அந்தியோகியாவில் இருக்கும் போது, யூதர் கட்டளைகளின்படி உணவு கட்டுபாட்டை புறக்கணித்ததை, இது அநேகமாக குறிப்பிடுகிறது.

2. "..... புற ஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம் பண்ணலாம்?" ஆகிலும் எருசலேமிலிருந்து அந்தக் குழு வந்து சேர்ந்த போது, பேதுரு அவருடைய நடத்தையின் மூலமாக, புறஜாதியாரான விசுவாசிகளும்,

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார் கலாத்தியர் 2:11-21

யூதருடைய உணவு கட்டுப்பாட்டையும், மற்ற கற்பனைகளையும் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று மறைமுகமாகக் கூறுகிறார். விருத்தசேதனத்திற்குக் கீழ்படியவேண்டும் என்று, இங்கே குறிப்பாகச் சொல்லப்படுகிறது.

ஈ. புறஜாதியார் மற்றும் யூதர்கள் ஆகிய இவ்விரண்டு பிரிவைச் சார்ந்த விசுவாசிகளும், இந்த செய்தியை பெற்றுக் கொண்டார்கள். பேதுரு மாய்மாலமாக இருந்தார். "கிறிஸ்துவின் உண்மை சுவிசேஷத்தை" அவர் அறிவிக்கப் போகிறார் என்றால், அவருடைய நடத்தைக்காக மனந்திரும்பவேண்டியது அவசியம். இது, எருசலேமிலிருந்து வந்த குழுவிற்கும், அந்தியோகியாவிலிருந்த யூத கிறிஸ்தவர்களுக்கும், மற்றும் சிறப்பாக பர்னபாவுக்கும் பொருந்தும் உண்மையாக இருக்கிறது!

3. மிகக் கடினமான பிரச்சனை (2:15-21)

அ. வசனம் 15. "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து ...." "சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும்" என்ற பவுலுடைய குறிப்பில், தன்னையும், பேதுரு, பர்னபாவையும் அந்தியோகியாவிலிருந்த மற்ற யூதர்களையும் சேர்த்துக்கொள்ளுகிறார். "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும்", என்று பவுல் கூறும்போது வெடுவெடுப்பாகக் கேலி பேசுகிறவராயிருக்கிறார்.

யூத விசுவாசிகளின் மாய்மலம் மற்றும் புறஜாதிவிசுவாசிகளுடன் உணவு அருந்தாமலும், ஐக்கியத்தில்சேர்த்துக்கொள்ளாமலும் இருப்பதினால், எல்லாரிலும் தாங்கள் மிக உயர்வானவர்கள் என்ற மனப்பான்மையை யாவரும்பார்க்கும்படி வெளிப்படுத்தியதைக் குறித்து அவர் மிக அதிகமாக எரிச்சலடைந்தார்!

ஆ. "புறஜாதியாரில் பிறந்த பாவிகள்" என்ற சொற்தொடர், யூதர்களுக்கு விசேஷமான அர்த்தத்தைக் கொடுப்பதாக இருந்தது. இது, "புறஜாதி நாய்கள் அருவெறுப்பான, அசுத்தமான நபர்கள்,அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாததினால்,ஒரு யூதனால் தொடப்பட அல்லதுசம்பந்தம்வைத்துக்கொள்ளக் கூடாதவர்கள்.இச்சந்தர்ப்பத்தில், அசுத்தமானவை என்றுஅறிவிக்கப்பட்ட உணவுகளை உண்ணக்கூடாதுஎன்றுகட்டளையிடும் நியாயப்பிரமாணத்தின் அந்தப் பிரிவைக் குறிக்கும்.

இ. பிறப்பில் யூதனாயிருப்பது மத சம்பந்தமான சலுகைகளைக் கொடுக்கும் (ரோமர் 3:1-2; 9:4-5) ஆகிலும், இந்த சலுகைகள் தேவனுக்கு முன்பாக நீதிமான் என்ற நிலையை அடையபோதுமானதல்ல. நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதற்கு அப்பால், "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்பது யூதர் மற்றும் புறஜாதிகளுக்கும் பொதுவானது (ரோமர் 3:21,28; அப்போஸ்தலர் 13:39; கலாத்தியர் 3:11; எபேசியர் 2:9) எருசலேமிலிருந்து வந்த யூதவிசுவாசிகளுக்கு இது தெரியும் (அப்போஸ்தலர் 15:9,28-29) அவ்வாறே பேதுரு மற்றும் பர்னபாவிற்கும் தெரியும்! அவர்கள் அவர்களுடைய சுய நினைவுக்கு வரவேண்டியது அவசியம். யூதர் மற்றும் புறஜாதிகளுக்கு இடையேயுள்ள குரோதம் சுவிசேஷத்தின் மூலமாக நீக்கப்பட்டது. (எபேசியர்2:11-19).

ஈ. வசனம் 16, "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேஎந்தமனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே."மறுபடியும், இந்தக்குறிப்பு,யூதர்மற்றும்புறஜாதிகள் ஆகிய இருவரையும் பற்றியதாக இருக்கிறது.

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார் கலாத்தியர் 2:11-21

"நீதிமானாக்கப்படுவது" என்ற சொல், நீதி மன்றத்திலிருந்து, கடன் வாங்கப்பட்டது. இது, நீதிமான் குற்றமற்றவன் என்று அறிவிக்கப்படுவது, என்று பொருள்படும். "தேவனிடத்தில் குற்றமுள்ளவனாயிருந்து" (நியாயந்தீர்க்கப்பட்டவனாக) "அவரோடு சரிசெய்யப்பட்டவனாகிறான்" (சன்மார்க்கமாக குற்றமற்றவனாக) இதைப் பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளை (அல்லது, வேறுகிரியைகள் அல்லது செயல்கள் அல்லது சடங்காச்சாரங்கள் அல்லது பலிசெலுத்துவது) நிறைவேற்றுவதின் மூலமாக ஒருவன் பெற்றுக்கொள்ள முடியாது. கிறிஸ்துவில் வைக்கும் "விசுவாசத்தால்" மட்டுமே ஒருவன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுபவனாக நிற்க முடியும். (நம்பிக்கை வைப்பது-அடைக்கலம் தேடுவது, கிருபைக்காகவும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காகவும், கிறிஸ்துவிடம் ஓடுவது)

உ. வசனம் 17. "கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே" அவனுடைய சுவிசேஷத்திற்கு எதிராக சாதாரணமாகக் கூறப்படும் ஆட்சேபனைக்கு பவுல் மறுமொழி கொடுக்கிறார்: "நியாயப்பிரமாணத்தை, நீதிமானாக்கப்படுவதற்கு, முற்றிலுமாக அவசியமில்லை என்று நீக்கிவிடுவோமானால், அது சன்மார்க்கக் கட்டுபாடற்ற, ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகளை மீறிய தேவபயமற்ற வாழ்க்கையை ஊக்குவிக்கும். இது ஒரு மனிதனை "பாவியான புறஜாதியான்" ஆக்குகிறது.

பாவத்தில் வாழும் விசுவாசிகளைக் கிறிஸ்து ஏற்றுக்கொள்ளுகிறார் (ஆதரிக்கிறார்) என்ற உணர்வையும் இது கொடுக்கிறது." இந்தக் குற்றசாட்டிற்குப் பவுலுடைய மறுமொழி இவ்வாறு இருக்கிறது: "இது அவ்வாறு காணப்படலாம், ஆனால் அது முற்றிலும் உண்மையற்றது! தேவன் தடைசெய்வாராக! நான் விளக்கிகூறட்டும்"

ஊ. வசனம் 18. "நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்." "இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், தேவனுக்கு முன்பாக நீதிமானாக நிற்க (நியாயம்தீர்க்கப்பட்டு) தகுதியுள்ளவர்களாக அடிப்படையாக இருப்பது நியாயப்பிரமாணம் என்பதை அழித்துப்போட்டார். தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதற்கு, அவர் திரும்ப, "நியாயப்பிராணத்தை அனுசரிப்பதே" வழியாக இருக்கிறதென்று அதைச் சார்ந்து செல்வாரானால் (மறுபடியும் கட்டுவது) அவர் கற்பனையை மீறுகிறவர் என்று நிரூபிக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், அவர் கற்பனையை மீறுகிறவரென்று நிரூபிக்கப்படுவார். (பாவியான புறஜாதியான்) இதுவே முதன்முதலாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்குரிய முக்கியமான, சரியான காரணமாயிருந்தது.-நியாயப்பிரமாணம் இருப்பதற்குக் காரணம். (ரோமர் 3:20; 4:15; 7:7, 9-10,13)

எ. வசனம் 19. "தேவனுக்கென்று பிழைக்கும்படி, நான் நியாயப்பிரமாணத்தினாலே, நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே" அவர் மரணத்திற்கு நியாயந்தீர்க்கப்பட்ட பாவி என்று பவுலுக்கு நிச்சயப்படுத்தியது. (தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு, நரகத்தில் தள்ளப்படுவது) ஆனால், அது அவருடைய பாவ சுபாவத்திலிருந்து விடுவிக்கக் கூடாததாக இருக்கிறது.

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார்
கலாத்தியர் 2:11-21

ஆகவே இவ்வழியின் மூலமாக நீதிமானாக்கப்பட முயற்சிசெய்வதை, அவர் விட்டுவிட்டார்! கிறிஸ்துவின் சிலுவை மற்றும் உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் மட்டுமே, அவருடைய பாவசுபாவத்திலிருந்து பவுல் விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்காக நீதியுள்ள வாழ்க்கை வாழக்கூடியவரானார். (ரோமர் 7:21-25; 8:1-4).

ஏ. வசனம் 20. "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்....." கிறிஸ்து எவ்வாறு, சிலுவையில் அறையப்பட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டாரோ, அவ்வாறே, பவுலும் பாவத்துக்கு மரித்துவிட்டார். கிறிஸ்து எவ்வாறு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரோ, அவ்வாறே பவுலும், கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கை வாழுகிறார். (ரோமர் 6:1-14; கொலோசேயர் 2:12-14; மற்றும் கலாத்தியர் 6:15; 2கொரிந்தியர் 5:17).

ஓ. இன்னும் அதிகமாகக் கூறுவோமானால், இப்பொழுது, கிறிஸ்து ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும், பரிசுத்த ஆவியானவர் மூலமாக வாசம்செய்கிறார். (யோவான் 14:17; ரோமர் 8:9; 1 கொரிந்தியர் 6:19; 12:13) கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகள், இப்பொழுது பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் நீதியுள்ள கட்டளைகளை நிறைவேற்றுகிறார்கள். (ரோமர் 8:1-4; கலாத்தியர் 5:16,24-25)

இதுவே எரேமியா தீர்க்கதரிசியினால், தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட சரியான, நீதியுள்ள வாழ்க்கையாகிய புதிய பாதை! (எரேமியா 31:31-34)

ஓ. வசனம் 20. "....இப்பொழுது நான் மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ....தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." பவுல் இதையும் சேர்த்துக் கூறுகிறார்: "....நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே" (வசனம் 21)

ஐ. வசனம் 21. "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குவதில்லை...." "தேவனுடைய கிருபையை விருதாவாக்குவது" என்றால், திரும்பிபின்னால் சென்று, பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளைக் கைக்கொள்ளுவதின் மூலமாக, தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட முயற்சி செய்வது. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக விடுதலையைக் கண்டுகொண்ட பிறகு, அவ்வாறு செய்வது அபத்தமானதும் கேலிக் கிடமானதுமாயிருக்கும்!

முடிவுரை

அ. அந்தியோகியாவில், பேதுருவுடன் நடந்த சம்பவத்தை, பவுல் நன்மையுண்டாகப் பயன்படுத்தினார். அவனுடைய நோக்கம் இரண்டு பக்கங்களையுடையது:

1. பேதுருவும் மற்ற யூதர்களும், அந்தியோகியாவில் தங்கள் நடத்தையை மாற்றிக்கொண்டதை திருத்தும்படியாக.

2. "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற அவருடைய சுவிசேஷத்தை ஆதரிக்கும்படியாக,

ஆ. நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதற்கு வழி என்று திரும்பிவிட்டார்கள், அல்லது கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு என்ற

அந்தியோகியாவில் பவுல், பேதுருவைக் கடிந்துகொண்டார் கலாத்தியர் 2:11-21

தேவனுடைய திட்டத்தில் ஒரு பாகம் என்று சேர்த்துக்கொண்டவர்கள் கீழ்க்கண்டவாறு இருப்பார்கள்:

1. அவர்களுடைய விசுவாசத்தைப் புறக்கணித்து விட்டார்கள்.

2. அவர்கள் ஒருபோதும் முதன்முதலாகக் கிறிஸ்துவை அறியவில்லை.

இ. ஊழியங்கள், நற்கிரியைகள், தன்நம்பிக்கை, தன்சொந்த சாதனை, சடங்காச்சாரங்களையும், நியாயப்பிரமாண கட்டளைகளையும் அனுசரித்தல் ஆகியவைகளுக்கு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு எந்த விதமான தொடர்பும் இல்லை! அவைகள், பவுலுக்கு இருந்தது போல முடிவில், முற்றிலும் கீழ்க்கண்டவற்றிற்குப் பயனற்றதாக இருக்கும்.

1. பாவ சுபாவத்தைக் கட்டுப்படுத்த.

2. நீதியுள்ள வாழ்க்கை வாழ

3. தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக நிற்க (நியாயம் தீர்க்கப்பட்டு) தகுதியை பெற்றுக்கொள்ள (எபேசியர் 2:8-9)

விசுவாசம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்திருப்பதினால் வரும் பலன்
கலாத்தியர் 3:1-14

முன்னுரை

அ. "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு" என்ற அவருடைய சுவிசேஷத்திற்காக, 1-2 அதிகாரங்களில் பவுல் வாதாடினார். இது கீழ்க்கண்ட நாட்களில் நடந்தது:

1. கிறிஸ்தவராக அவருடைய ஆரம்பநாட்களில் (1:13-17)

2. கிறிஸ்தவராக மாறினபின் எருசலேமுக்கு முதல்முறையாக வருகைதந்தபோது. (1:18-24)

3. பதினான்கு வருடங்களுக்குப்பின் வருகைதந்தபோது.

4. பேதுருவுடன் முகமுகமாய் எதிர்த்தபோது (2:11-21)

ஆ. "விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு" என்ற அவனுடைய சுவிஷேத்திற்காக, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களின் அடிப்படையில், பவுலுடைய வேதசாஸ்திர விவாதம், இந்த வேத பாகத்திலிருந்து ஆரம்பமாகிறது. இது, 5:15 வசனத்தில் முடிவடைகிறது.

1. விசுவாசத்தை சார்ந்திருப்பவர்கள் ஆவியைப்பெற்றுக்கொள்ளுவார்கள் (3:1-9)

அ. வசனம் 1. "புத்தியில்லாத கலாத்தியரே.... உங்களை மயக்கினவன் யார்?" பவுல், கலாத்தியர்களை 1:3 வசனத்தில் முதலாவது வாழ்த்தியதற்கும், இந்த வாழ்த்துதலுக்கும் இடையே முற்றிலும் நேர்மாறான வேறுபாடு காணப்படுகிறது. தொடர்ந்து வரப்போகிற காரியத்திற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை இது உருவாக்கினது. "புத்தியில்லாத" என்றால் அறிவு இல்லாத, ஆவிக்குரிய ஞானம் இல்லாத, மனித உணர்ச்சிகளின் ஏவுதலால் மட்டும் வழிநடத்தப்படுவது, என்று இங்கே பொருள்படும். "மயக்கினவன்" என்றால், "மற்றொரு சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உங்களைத் தங்களுடைய பொய்யான வசீகரசக்தியாளாலும், மந்திரத்தால் மயக்கியும் ஏமாற்றியது யார்? உங்களை துன்மார்க்கமான கண்களால் (வசியசக்தி வாய்ந்த) தவறாக வழிநடத்தியது யார்?" என்று பொருள்படும்.

ஆ. வசனம் 1 "...இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே" "உங்கள் கண்களுக்குமுன்," இது, கலாத்தியா பிரதேசத்தில் பவுல் இருக்கும்போது அவரிடமிருந்து சுவிஷே செய்தியை நேரடியாகக்கலாத்தியர்பெற்றுக்கொண்டதைக் குறிக்கும் (அப்போஸ்தலர் 16:6; 18:23). "பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே" ஒரு பொதுவான அறிவிப்புப் பலகையின் மீது ஒருவரால் ஒட்டப்பட்ட விளம்பர வர்ணப்படம்போல அது அவ்வளவு தெளிவாகக் காணப்பட்டது. (யோவான் 19:19) தேவையற்றவைகளால் அது தெளிவற்றதாக்கப் படவில்லை. அது, கிறிஸ்துவும்(மேசியா) அறையப்பட்டவராகிய அவர், மாத்திரமே. (மரித்தோரிலிருந்து எழுந்தவர்) (1 கொரிந்தியர் 1:23;2:2; கலாத்தியர் 6:14; மற்றும், அப்போஸ்தலர் 1:22; 4:33; 17:18, 24:21)

விசுவாசம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்திருப்பதினால் வரும் பலன் கலாத்தியர் 3:1-14

இ. வசனம் 2,5 "....எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்....உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர், அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?" "விசுவாசக் கேள்வியினாலேயோ," இது "இயேசு கிறிஸ்துவையும், சிலுவையில் அறையப்பட்ட அவரையும் பற்றிய பவுலுடைய செய்தியை," குறிக்கும். கலாத்தியர்கள், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டதும், அவர்கள் மத்தியில் தேவன் அற்புதங்களை நடப்பித்ததும், அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைக் கைக்கொண்டதினாலா அல்லது வேறொன்றும் செய்யாமல், அவர்கள் கேள்விப்பட்ட அறையப்பட்ட கிறிஸ்துவை விசுவாசித்ததினால் மாத்திரம் மட்டுமா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதற்கும் (தேவனால் கொடுக்கப்பட்டது) தேவன் அவர்கள் மத்தியில் அற்புதங்களை செய்தார் என்பதற்கும் அடையாளமாகக் கீழ்க்கண்டவைகள் குறிப்பிடப்படுகிறது:

1. விசுவாசிகள் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டார்கள். (இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியினால்) அது கற்றுக்கொள்ளாத மொழிபேசுவதாகிய, ஆரம்ப சரீரபிரகாரமான வெளிப்படையான அடையாளத்துடன் சேர்ந்து இருந்தது. லூக்கா 24:49; அப்போஸ்தலர்1:8; 2:1-4;2:33,38-39; 8:15;9:17;10:44;19:2,6)

2. இந்த அனுபவத்தின் விளைவாக, விசுவாசிகள் மூலமாக, ஆவியினுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்கள் (அற்புதங்கள்) தொடர்ந்து யாவருக்கும் முன்பாக வெளிப்படுத்தப்பட்டதும் கூட இத்துடன் (முதல் குறிப்புடன்) சேர்த்துக்கொள்ளப்படும்:

(அ) சபையில் (1கொரிந்தியர்12:7-11,28; ரோமர்12:6-8)

(ஆ) சபைக்கு வெளியே அவிசுவாசிகளுக்கு சுவிசேஷ செய்திகொடுத்து, ஊழியம் செய்துகொண்டிருக்கும்போது, (மாற்கு 16:20; யோவான் 14:12).

நாம் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு அதை விசுவாசித்த பிறகு, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும், நம்மத்தியில் தேவன் அற்புதங்களை நடப்பிக்கவேண்டுமென்றும், ஆவியின் வரங்களை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கவேண்டும்!

ஈ. கிறிஸ்துவில் அவனுடைய விசுவாசத்தை கீழ்க்கண்டவைகளுக்காக வைக்கும் ஒவ்வொரு மனிதனுக்குள் வாசம்பண்ணும்பரிசுத்த ஆவியானவரால்இவையாவும்வெளிப்படுத்தப்படுகிறது:

1. அவனுடைய பாவங்களை மன்னிக்கும்படியாக,

2. உலக முழுவதின் மேலும் வரப்போகும் கோபாக்கினையிலிருந்து அவனைக் காப்பாற்றும்படியாக (கிறிஸ்து கல்வாரி சிலுவையில் அறையப்பட்டபோது நிறைவேற்றப்பட்டது. யோவான் 3:3-8; 14:17; 20:22; ரோமர் 8:9; கலாத்தியர் 4:6; 1 கொரிந்தியர் 6:19; 12:13; 2 கொரிந்தியர் 13:5, மற்றும் 1 தெசலோனிக்கேயர் 1:10, 5:9)

உ. ஆகவே இந்தக் காரியங்களின் உண்மை என்னவென்றால், தேவன் எந்த ஒருவருக்கும், அவர்கள் செய்த வேலை அல்லது பழைய ஏற்பாட்டுக் கற்பனைகளை அனுசரிப்பது அல்லது வேறு கட்டளைகள் அல்லது சடங்காசாரங்கள் அல்லது பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைக் கடைப்பிடிப்பதின் காரணத்திற்காக எதுவும் கொடுப்பதில்லை.

விசுவாசம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்திருப்பதினால் வரும் பலன் கலாத்தியர் 3:1-14

(எபேசியர் 2:8-9) இக்காரணத்தினால், அவருடைய முதல் வருகையின்போது, பவுல், கலாத்தியர்களுக்கு இக்காரியங்களில் எதுவும் கூறவில்லை. அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், உலகமுழுவதின்மேலும் வரப்போகும்தேவகோபாக்கினையிலிருந்து அவர்களைக்காப்பாற்றுவதற்கும்,இயேசுகிறிஸ்துவின்மீது அவர்களுடையவிசுவாசத்தைவைக்கிறவர்களுக்கு மட்டும், தேவனுடைய ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படுகிறது. (2தீமோத்தேயு 3:12)

ஊ. வசனம் 6-9, "அப்படியே ஆபிரகாம்....? பவுல் அவனுடைய வழக்கத்தின்படியே, அவன் போதிக்கிற சத்தியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு கூற பழைய ஏற்பாட்டிற்கு செல்லுகிறார். தேவன் புறஜாதியாரை விசுவாசத்தினால் (மட்டும்) நீதிமானாக்குகிறார், என்பதற்கு முற்பிதாவாகிய ஆபிரகாம் ஓர் உன்னத எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

எ. ஆபிரகாம், தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதற்கு அடிப்படை என்ன? அவன், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன் வாழ்ந்ததினால், இதற்கு பதில் விசுவாசத்தினால் மட்டுமே என்பது நிச்சயம்: "அவன் (சாதாரணமாக) கர்த்தரை விசுவாசித்தான். அதை, அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதியாகமம் 15:6) ஆகவே, இரட்சிக்கப்பட, கிறிஸ்துவில் (மட்டும்) விசுவாசம் வைக்கிறவர்கள்:

1. ஆபிரகாமின் பிள்ளைகளாகிறார்கள். (வசனம்7)

2. விசுவாத்தின் (மட்டும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைத் தவிர்த்து-வசனம்9, மற்றும் ஆதியாகமம்12:3 பார்க்கவும்) தகப்பனாகிய ஆபிரகாமுடன் ஆசீர்வதிக்கப்படுகிறான்.

ஏ. ஆபிரகாம் விசுவாத்தினால் நீதிமானாக்கப்பட்டான் என்பதினால், கலாத்தியர்கள் ஆவியைப் பெற்றுக்கொண்டதும், அவர்கள் மத்தியில் அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டதும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினால் மட்டுமே என்று நிரூபிக்கப்படுகிறது! "இரட்சிப்பு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே," என்ற பவுலுடைய சுவிசேஷத்தை முன்கூட்டியே அறிவிப்பதற்கு, இது உண்மையிலேயே தேவனுடைய வழியாக இருக்கிறது. இது, எருசலேம் சபைக்கு முன்பாக பேதுருவின் பிரசங்கத்தின் முடிவுரைக்கும் ஒத்ததாக இருக்கிறது. (அப்போஸ்தலர் 11:15-18,15:6-11).

2. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்திருப்பவர்கள், சாபத்தின் கீழ் இருக்கிறார்கள். (3:10-14)

அ. வசனம் 10. "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்....." நியாயப்பிரமாணம், தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்குப் பதிலாகக் (கிறிஸ்துவில் வைக்கும் விசுவாத்தால் கிடைப்பதுபோல) சாபத்தைக் கொண்டுவருகிறது. "சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்" என்றால், ஒருவர்மீது, பொல்லாப்பு அல்லது சாபம் வரும்படியாக ஒரு முறையீடு கொடுக்கப்பட்டுள்ளது, ஒரு நபருக்குப் பொல்லாப்பு நேரிடும்படியாக மனு அனுப்பப்பட்டுள்ளது, ஒருவரை சாபத்திற்குட்படுத்தும்படி ஒப்புக்கொடுப்பது அல்லது பிரித்து எடுத்து வைத்திருப்பது, என்று பொருள்படும்

விசுவாசம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்திருப்பதினால் வரும் பலன்
கலாத்தியர் 3:1-14

ஆ. பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தை, அனுசரிப்பதின் மூலமாக ஒரு பாகத்தை அல்லது முழுவதுமாக தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட முயற்சிக்கிற யாவர் மீதும் வரப்போகும், தேவகோபாக்கினையை இது குறிப்பிடுகிறது. (யோவான் 3:36; வெளிப்படுத்தின விசேஷம் 20:13-15 மற்றும் ஆதியாகமம் 3:14-19; 4:11-12; மல்கியா 2:1-2)

இ. வசனம் 10-11. "------ நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ, அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே". இது மேற்கோளாக, உபாகமம் 27:27 வசனத்திலிருந்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இது நமக்கு அநேகக் காரியங்களை வெளிப்படுத்துகிறது:

1. நியாயப்பிரமாணம் பரிபூரணத்தை அதிகாரப்பூர்வமாகக் கேட்கிறது.

2. நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதாகக் கருதினால் அது, அதனுடைய எல்லா பகுதிகளிலும் முற்றிலுமாக அனுசரிக்கப்படவேண்டும்.

3. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதில் எதிலாகிலும் தவறினால், அந்த மீறுதல் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அத்துடன் சாபம் தொடரும்.

4. எல்லோரும் நியாயப்பிரமாணத்தை பரிபூரணமாகக்கைக்கொள்வதில் தவறிவிட்டார்கள். ஆகவேயாவரும்சாபத்திற்குக்கீழ்ப்பட்டிருக்கிறார்கள்!

இக்காரணத்தினால்தான் பவுல் தொடர்ந்து இவ்வாறு கூறிக்கொண்டே இருக்கிறார்: "நியாயப்பிரமாணத்தின் மூலமாக, ஒருவரும் நிச்சயமாக நீதிமானாக்கப்பட (நேர்மையானவனாக அல்லது குற்றமற்றவனாக - நீதியுள்ளவர்களோடு வைக்கப்பட) முடியாது. "விசுவாசத்தினால் (மட்டும்) நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:4 இத்துடன் ரோமர் 1:17, மற்றும் ரோமர் 3:9-22)

ஈ. வசனம் 12. "நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்" இது பழைய ஏற்பாட்டு வேத வசனத்தை நிரூபிக்கும் மற்றொரு மூலவாக்கியம் (லேவியராகமம் 18:5) இது உபாகமம் 27:26 வசனத்தைப் போலவே அதே முடிவுக்கு வருகிறது:

1. நியாயப்பிரமாணம் அதன் சுய தன்மையிலுள்ளது போலவே, விசுவாசத்தைத் தவிர்க்கிறது.

2. அதற்குப் பதிலாக, அதனுடைய எல்லா அளவுகளையும் அனுசரித்து ஜீவிக்கவேண்டும் என்று நியாயப்பிரமாணம் அதிகாரத்துடன் கேட்கிறது.

3. ஆகிலும், அவைகளை ஒருவரும் பரிபூரணமாகக் கைக்கொள்ள முடியாது.

4. ஆகவே, அதன்படி வாழவிரும்புகிற யாவரையும் நியாயப்பிரமாணம் சாபத்திற்குக்கீழ் கொண்டுவருகிறது.

உ. வசனம் 13. "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்". "மீட்டுக்கொண்டார்" என்றால், அடிமைத்தனத்திலிருந்து, மீட்கும் கிரயம் செலுத்தி, திரும்ப வாங்கிக் கொண்டார்;

விசுவாசம் மற்றும் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்திருப்பதினால் வரும் பலன்
கலாத்தியர் 3:1-14

தேவனுடைய சாபத்தின் கீழ் இருக்கும் ஒருவனை, விலைகொடுத்து மறுபடியும் வாங்கிக்கொண்டார், என்று பொருள்படும் (1 பேதுரு 1:18-19; அப்போஸ்தலர் நடபடிகள் 20:28) கிறிஸ்து, தம்மைத்தாமே கல்வாரி சிலுவையில் பலியாகச் செலுத்தினதின் மூலமாக இதைச் செய்தார். - நம்முடைய இடத்தில் சாபமாகி (உபாகமம் 21:23)

அவருடைய சாபம் மானிடர்களிலிருந்து விலக்கப்படும்படியாக, பிதாவாகிய தேவனுக்கு, இந்தக் கிரயம் இன்றியமையாத தேவையாக இருந்தது'.

ஊ. வசனம் 14. கிறிஸ்து இக்காரியங்கள் எல்லாவற்றையும் செய்வதற்குக் காரணம் இருண்டு பக்கமாக உள்ளது:

1. யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருவரும், அவரில் வைக்கும், அவர்களுடைய விசுவாசத்தினால், ஆபிரகாமுடனேகூட ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

2. எனவே, யூதர் மற்றும் புறஜாதியார் ஆகிய இருவரும், விசுவாசத்தால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியை (தேவன், அவர்கள் மத்தியில் அற்புதங்களை நடப்பிக்க) பெற்றுக்கொள்வார்கள். "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்குத் தோத்திரம்!! (2 கொரிந்தியர் 9:15)

முடிவுரை

அ. ஒவ்வொரு நபரும், யூதன் மற்றும் புறஜாதியான் ஒன்றுபோல செய்ய வேண்டிய தீர்மானம் ஒன்று இருக்கிறது: தேவனுக்கு முன்பாக நீதிமானாவதற்கு, (நேர்மையானவனாக மற்றும் குற்றமற்றவனாவதற்கு) விசுவாசத்தின் மூலமாகவா, அல்லது நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதின் மூலமாகவா, (கிரியை செய்வதின் மூலம்) எதன் மூலமாக நீ முயற்சி செய்வாய்?

ஆ. தீர்மானம் செய்வதற்குமுன், உன்னுடைய தெரிந்தெடுத்தலின் விளைவுகளை நீ அறியவேண்டும்:

1. கிரியைகளின் மூலமாக, தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக முயற்சிசெய்பவர்கள், தேவனுடைய சாபத்தின்கீழ் கொண்டுவரப்படுவார்கள்.

2. இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும், தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக முயற்சி செய்கிறவர்கள்,

(அ) முற்பிதாவாகிய ஆபிரகாமைப் போல, நீதிமான் என்று அறிவிக்கப்படுவார்கள்.

(ஆ) எல்லாம் அவருடைய முழுமையுடன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார்கள் மற்றும் உங்களுடைய மத்தியில் தேவன் அற்புதங்களை செய்வார்.

(இ) இயேசு கிறிஸ்து மூலமாக நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்கப்படுவார்கள்.

நியாயப்பிரமாணத்தின் நோக்கம்
கலாத்தியர் 3:15-25

முன்னுரை

அ. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதிலிருந்து விலகி, விசுவாசத்தால் மட்டும் நீதிமான்களாகிற (நியாயம் தீர்க்கப்பட்டு நீதிமான்களாக்கப்பட்டவர்கள்) தேவனுடைய மக்களுக்கு, ஆபிரகாமை ஓர் எடுத்துக்காட்டாக பவுல் பயன்படுத்துகிறார். இதே காரியத்தை நிரூபிப்பதற்காக, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு சுமார் 430 வருடங்களுக்கு முன், ஆபிரகாமுடன் செய்த நிலைநாட்டப்பட்ட தேவனுடைய உடன்படிக்கையை, இப்பொழுது பவுல் பயன்படுத்துகிறார்.

ஆ. அவருடைய விவாதம் கீழ்க்கண்டவாறு தொடர்ந்து செல்கிறது:

1. விசுவாசத்தின் அடிப்படையில், ஆபிரகாமுடன் செய்த தேவனுடைய உடன்படிக்கை, சீனாய் மலையில் பெற்ற பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம், அதற்குப் பின்னால் கிடைத்தது.

2. இந்த உடன்படிக்கையும், அதில் அடங்கிய வாக்குத்தத்தங்களும், அதற்குப் பின் 430 வருடங்களுக்குப் பின் அறிமுகப்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணத்தால் ஒதுக்கிவைக்க முடியாது.

3. ஆகவே, "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு என்ற என்னுடைய சுவிசேஷம்" இன்னும் நிலைத்திருக்கிறது. தேவனுக்குமுன் நீதிமானாக்கப்படுவதற்கு வழியாக, இது மற்றொன்றால் இடமாற்றம் செய்யப்பட முடியாது அல்லது இத்துடன் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் சேர்த்துக்கொள்ளப்படவும் முடியாது!

இ. கிறிஸ்துவிடம் மனிதர்களை வழிநடத்துவதே நியாயப்பிரமாணத்தின் உண்மையான, முதன்மையான நோக்கமாக இருந்தது. தேவனுக்கு முன்பாக ஒருவன் நீதிமானாக்கப்பட ஒரு ஏதுவாக இதன் நோக்கம் ஒருபோதும் இருந்ததில்லை.

1. ஆபிரகாம் மூலமாக நிலைநாட்டப்பட்ட தேவனுடைய உடன்படிக்கையை நியாயப்பிரமாணம் புறம்பே தள்ளிவைக்கவில்லை. (15-18)

அ. வசனம் 15. "சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன்.---" ஒருவன் மரித்தபின், நிறைவேற்றுவதற்காக எழுதிவைக்கப்பட்ட கடைசி மரண சாசனம் அல்லது சொத்து உரிமை ஏற்பாடு (ஒரு ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை) என்பதாகிய, அநுதின மானிட தொடர்புகளிலிருந்து, ஒரு உதாரணம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆ. வசனம் 15. "----மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதனோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை". ஒரு கடைசி மரண சாசனம் மற்றும் உடன்படிக்கை, சரியானபடி கையெழுத்து இடப்பட்டு முத்திரை குத்தப்பட்டும் இருக்கிற நிலையில், அந்த மனிதர் மரித்துவிட்டால் ஒருவரும் அதை ரத்துசெய்யவோ அல்லது அதிலுள்ள வார்த்தைகளை மாற்றவோ முடியாது. அவ்வாறாகவே, ஆபிரகாமுடன் அவர் நிர்மாணித்த தேவனுடைய உடன்படிக்கையை,

நியாயப்பிரமாணத்தின் நோக்கம்
கலாத்தியர் 3:15-25

1. ரத்து செய்ய முடியாது. ("தள்ளிவைக்க" - அதற்குப் பதிலாக மற்றொன்றைவைக்க - பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை)

2. மாற்ற முடியாது. (அத்துடன் "கூட்டிக்கொள்ள" - பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை.)

இ. வசனம் 16. "ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன......" ஆபிரகாமுக்குத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களில் கீழ்க்கண்டவைகள் உள்ளடங்கும்:

1. பாலஸ்தீன தேசம் (ஆதியாகமம் 12:7; 13:15, 17:8. 24:7, 26:4, 28:13)

2. எண்ணிக்கைக்கு அடங்காத சந்ததிகள் (ஆதியாகமம் 15:5; 22:17)

3. எல்லா தேசங்களும், (இதில் புறஜாதியாரின் தேசங்களும் உள் அடங்கும்) ஆபிரகாம் மூலமாக ஆசீர்வதிக்கப்படும். (ஆதியாகமம் 12:3; 18:18; 22:18; 26:4; 28:14)

ஈ. தற்பொழுதுள்ள அவருடைய விசுவாசத்தில், ஆபிரகாம் மூலமாக, "எல்லா தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தில் மட்டும் கருத்துடையவராக இருக்கிறார். இந்த ஆசீர்வாதங்கள் (பின்னால் சுதந்தரிக்கப்படுபவைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. வசனம் 18) இந்த ஆசீர்வாதங்களுடன் கீழ்க்கண்டவைகளும் சேர்க்கப்படும் என்று பவுல் ஏற்கெனவே காட்டியுள்ளார்.

1. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவது.

2. பரிசுத்த ஆவியானவரின் வரம். (இது அவருடைய மக்கள் மத்தியில், அவர்கள் மூலமாக, தேவன் அற்புதங்களை நடப்பிப்பதினால் வெளிப்படுகிறது) (கலாத்தியர் 3:2, 5-9; மற்றும் ஆதியாகமம் 15:6)

உ. இந்த வாக்குத்தத்தங்கள் (இந்த சுதந்திரம்) ஆபிரகாம் மூலமாக, ஆபிரகாமுடைய சந்ததிகளுக்கு வருவது மட்டுமல்லாமல், அவைகள் ஆபிரகாமினுடைய "வித்து" அல்லது சந்தானம் (இந்தக் குறிப்பிட்டக் காரியத்தில் பவுல் "வித்து" என்று ஒருமையில் அதாவது "ஒன்று" என்று பொருள்பட விளக்குகிறார் - ஆதியாகமம் 12:7; 13:15; 24:7) மூலமாகவும் அவனுடைய சந்ததியாருக்கு வரும். பவுல் இந்த ஒருவர் ("வித்து") இயேசு கிறிஸ்து என்று அடையாளங் காட்டுகிறார். ஆகவே, ஆபிரகாமின் சந்ததிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்திரம், முடிவாக இயேசு கிறிஸ்து மூலமாக, ஆபிரகாமுடைய சந்ததிகளுக்கு வரும்!

ஊ. வசனம் 17. "ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில் கிறிஸ்துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று முப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது" ஆபிரகாமுக்குச் செய்த இந்த உடன்படிக்கை சரியானபடி கையெழுத்து இடப்பட்டு, முத்திரைபோடப்பட்டுள்ளது. ஆகவே இந்த உடன்படிக்கையை பிற்காலத்தில் வந்த எதுவொன்றும் (430 வருடங்களுக்குப் பின் வந்த நியாயப்பிரமாணம்) இந்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடவோ அல்லது மாற்றவோ முடியாது! (யாத்திராகமம் 12:40-41) இதில் நமக்கும், பவுலுக்கும், அதிக முக்கியமான கருத்து என்னவென்றால், இது நிறைவேறுவதால், அத்துடன் இணைக்கப்பட்ட கீழ்க்கண்ட வாக்குத்தத்தங்களும் அவ்வாறே மாற்றவோ, தள்ளிப்போடவோ முடியாது:

நியாயப்பிரமாணத்தின் நோக்கம்
கலாத்தியர் 3:15-25

1. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் நீதிமானாக்கப்படுவது.

2. பரிசுத்த ஆவியானவரின் வரம் (மற்றும் அற்புதங்கள் வெளிப்படுத்தப்படுவது)

எ. வசனம் 18. "அன்றியும், சுதந்திரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச் செய்தாரே", "அந்த சுதந்திரம்", என்பது ஆபிரகாமுடைய சந்ததிகள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள். இந்த சுதந்திரம் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டது:

1. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன் அநேக தலைமுறைகளுக்கு முன் ஒரு வாக்குத்தத்தத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்டது.

2. அதைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஆபிரகாம் எந்த ஒரு காரியமும் செய்யாமல் (கற்பனைகளைக் கைக்கொள்ளுவது) தேவனுடைய கிருபையினால் பெற்றுக்கொண்டான் (தகுதியின்றி, கொடுக்கப்படும் அவருடைய தயவு) ஆகவே, இது எந்த நிலையிலும் பழைய ஏற்பாட்டு மோசேயின் நியாயப்பிரமாணத்தை சார்ந்து இருக்காது!

2. விசுவாசத்தின் மூலமாக நீதிமான்களாக்கப்படும்படியாகக் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட நியாயப் பிரமாணம் நிர்மாணிக்கப் பட்டது. (3:19-25)

அ. வசனம் 19. "அப்படியானால் நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும், அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது" பவுல் இரண்டு காரணங்களைக் கொடுக்கிறார்:

1. அது "அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு" - இதில் உண்மையில் இரண்டு காரியங்கள் இணைந்துள்ளது:

(அ) அவர்கள் பாவம் செய்து மீறினவர்கள் என்பதை (மேலும் முழுமையாக) மனிதர்கள் அறிந்துகொள்ள (ரோமர் 3:20, 4:15, 7:7-8,13)

(ஆ) மனிதர்களை மேலும் அதிக அளவு ஆழமாகப் பாவம் செய்ய தூண்டுவதற்கு அல்லது ஊக்கப்படுத்துவதற்காக, (அதிகமாக பாவம் செய்ய - ரோமர் 5:20; மற்றும் 1 கொரிந்தியர் 15:56)

2. "வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும்" ஆபிரகாமுடைய "வித்து" அல்லது "சந்தானம்" ஆகிய கிறிஸ்துவின் மூலமாக, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள், முடிவாக எல்லாதேசங்களின் மக்களாலும் பெற்றுக் கொள்ளப்படும், என்பதை இது குறிப்பிடுகிறது.

ஆ. வசனம் 19. "அது (நியாயப்பிரமாணம்) ---- தேவ தூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது." இந்த வசனம், நியாயப்பிரமாணத்தைப் பற்றி இரண்டு காரியங்களை வெளிப்படுத்துகிறது:

1. அது தற்காலிகமாக இருந்தது. - "வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி (இயேசு) வருமளவும்". (வசனம் 24)

2. அது கீழ்த்தரமானது - ஏனெனில் நிறைவேற்றப்படுவதற்கு, அது தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது".

நியாயப்பிரமாணத்தின் நோக்கம்
கலாத்தியர் 3:15-25

"மத்தியஸ்தன்" என்பது நிச்சயமாக மோசேயைக் குறிக்கும் (லேவியராகமம் 26:46; எண்ணாகமம் 4:37; மற்றும் உபாகமம் 5:5) நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதில் நல்ல தேவதூதர்களின் பங்கு பற்றிய குறிப்பு புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாடு ஆகிய இரண்டிலும் கூறப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் நடபடிகள் 7:53; எபிரெயர் 2:2 மற்றும் உபாகமம் 33:2; சங்கீதம் 68:17) ஆகிலும் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், தேவனிடமிருந்து, அவனுக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டது!

இ. வசனம் 20. "மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர்". "தேவனோ ஒருவர்" என்பது, உபாகமம் 6:4 வசனத்திலிருந்து மேற்கோளாக எடுக்கப்பட்டது. (மற்றும் ரோமர் 3:30) ஆபிரகாமுக்கு உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களைக் கொடுப்பதில் ஒரே ஒரு நபர்தான் (தேவன்) சம்பந்தப்படுகிறார் என்பதைக் காட்ட இது மேற்கோளாக எடுத்துக் கூறப்படுகிறது. ஆனால் மோசேயினால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் இரண்டு பிரிவினர்களும் அதாவது, தேவன் மற்றும் இஸ்ரவேலர்களும், மோசேயை மத்தியஸ்தனாக வைத்து, பரஸ்பரமாக ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுப்பது அதில் சம்பந்தப்படுகிறது! ஆபிரகாமுக்குக் கொடுத்த, தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களைவிட, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் கீழ்த்தரமானது என்ற கருத்தை, மேலும் உறுதிப்படுத்த, இந்த வாக்கியம் கூறப்படுகிறது.

ஈ. வசனம் 21. "அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததனால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே". நியாயப்பிரமாணம், ஜீவனை (ஆவிக்குரிய) அளிக்கும்படி கொடுக்கப்பட்டிருக்குமானால், நீதி (நீதிமானாக்கப்பட) நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பதை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

உ. வசனம் 22-24. "---- வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது". இப்பொழுது பவுல் நியாயப்பிரமாணம் ஆவிக்குரிய ஜீவனை அளிக்க கூடாததாக இருந்தபோதிலும், அது ஆபிரகாம் மூலமாகத் தேவனிடமிருந்து பெற்ற வாக்குத்தத்தங்களுக்கு எதிரானது அல்ல என்பதைக் காட்டத் துவங்குகிறார். அதற்குத் திட்டவட்டமான நோக்கங்கள் உண்டு:

1. வசனம் 22. "வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப்போட்டது. (சிறைபிடிக்கப்பட்டு) - நியாயப்பிரமாணத்தை மீறின உலகோர்யாவரையும், எழுத்தில் இருந்து நியாயப்பிரமாணம் சிறையில் தள்ளிவிட்டது. அவைகளை அவர்கள் பெற்றுக்கொண்டபோது பாவம், சிறைச்சாலைக்காரன் என்பதைக் கண்டுகொண்டார்கள். (வசனம் 19, ரோமர் 3:9-20 வசனங்கள்)

2. வசனம் 22. "--- இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி ----" சிறைச்சாலையில் புத்தி தெளிந்தவர்கள், நம்பிக்கையற்ற அவர்களுடைய நிலையை அறிந்து, கிறிஸ்துவில் வைக்கும் (ஆபிரகாமின் வித்து அல்லது சந்தானம்) விசுவாசத்தின் மூலமாக ஆபிரகாமுடைய வாக்குத்தத்ததைப்பெற (நீதிமானாக்கப்படுவது மற்றும் பரிசுத்த ஆவியின் வரம்) நாடுகின்றனர்.

நியாயப்பிரமாணத்தின் நோக்கம்
கலாத்தியர் 3:15-25

3. வசனம் 23. “ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம்.” 23வது வசனத்தில் பயன்படுத்தப்பட்ட எடுத்துக்காட்டு, வசனம் 22ல் பயன்படுத்தப்பட்டதற்கு ஒத்ததாக இருக்கிறது. “நியாயப்பிரமாணம்” இப்பொழுது “பாவம்” என்பதற்குப்பதிலாக சிறைச்சாலைக்காரன் என்று கூறப்பட்டதே வித்தியாசமாக இருக்கிறது. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்படும் சத்தியம் வெளிப்படுவதற்கு முன், எல்லா மனிதர்களும் (யூதர் மற்றும் புறஜாதியார்) நியாயப்பிரமாணத்தின் சிறைச்சாலைக்கு அனுப்பட்டனர்.

4. வசனம் 24. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருக்கிறது. விடுதலைபெற எந்த நம்பிக்கையும் இல்லாத இந்த சிறையிருப்பு, மனிதர்களை இயேசுகிறிஸ்துவின் மூலமாக நீதிமான்களாக்கப்படும் நிலையை தேடும்படியாகச் செய்கிறது. இதுவே நியாயப்பிரமாணத்தின் முடிவான நோக்கம் மற்றும் இது வசனம் 19இல் பவுல் எழுப்பின கேள்விக்கு பதிலளிக்கிறது.

ஊ. வசனம் 25. “விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே.” “உபாத்திக்குக் கீழானவர்களல்லவே” இங்கே, நியாயப்பிரமாணம் ஒரு குழந்தையின் பாதுகாப்பாளன் அல்லது குழந்தையைக் கவனிக்கும் வேலையாளாக அறிமுகப்படுத்தப்படுகிறது. செல்வந்தர்களான கிரேக்கர்கள் மற்றும் ரோமர்கள் அவர்களுடைய குடும்பத்திலுள்ள பிள்ளைகளில் ஒன்றை பொறுப்பேற்றுக் கவனிக்கும்படியாக ஒரு அடிமையை வேலைக்கு அமர்த்துவதை இது குறிக்கிறது. அந்த குழந்தை ஆறு வயதிலிருந்து பதினாறு வயதுவரை, அது எங்கு சென்றாலும் அவனுடைய நடத்தையை மேற்பார்வையிட்டு, பள்ளிக் கூடத்திற்குக் கூட்டிச்சென்று பின் திரும்ப அழைத்துக்கொண்டு வருவதற்கும் பொருப்பாக இருக்கிறான். எனவே அந்தக் குழந்தை அவன் கவனத்தின் கீழ் இருக்கிறது. ஆனால் அவன் அந்தக் குழந்தைக்குப் போதிப்பதில்லை!

எ. பதினாறு வயதில், அந்தப் பிள்ளை, அடிமையின் மேற்பார்வையின் கீழ் இருந்து எடுக்கப்படுவது போல, கிறிஸ்துவில்வைக்கும் விசுவாசத்தின் மூலமாக நீதிமான்களாக்கப்படுகிறவர்களும், நியாயப்பிரமாணத்தின் மேற்பார்வையின் கீழ் (சிறைச்சாலைக்காரன் பாகமாக கிரியை செய்வதின்கீழ்) இனி ஒருபோதும் இருக்கமாட்டார்கள். இது மற்றொரு கேள்விக்கு வழிநடத்துகிறது. நாம் இனி ஒருபோதும் நியாயப்பிரமாணத்தின் மேற்பார்வையின் கீழ் இருக்கமாட்டோம் என்றால், இப்பொழுது நாம் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்ட நிலையில், நம்முடைய மேற்பார்வையாளர் யார்? இந்தக் காரியம், அதிகாரம் 5:16-25 வசனங்களில் பிரசங்கிக்கப்படும். “ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல கலாத்தியர் 5:18 மற்றும் 4:6 வசனம்)

நியாயப்பிரமாணத்தின் நோக்கம்
கலாத்தியர் 3:15-25

முடிவுரை

அ. ஆபிரகாம் மூலமாக நிர்மாணிக்கப்பட்ட தேவனுடைய உடன்படிக்கையையும் அதில் அடங்கிய வாக்குத்தத்தங்களையும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் தள்ளிவைக்கவில்லை. அந்த வாக்குத்தத்தத்தில் கீழ்க்கண்டவைகள் காணப்படுகிறது:

1. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவது (தேவனுக்கு முன்பாக)

2. பரிசுத்த ஆவியானவரின் வரம் (விசுவாசிகள் மத்தியிலும், விசுவாசிகள் மூலமாகவும் அற்புதங்கள் வெளிப்படுத்தப்படும் என்பதும் உள்ளடங்கும்)

ஆ. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்குக் காரணம்,

1. நாம் எல்லோரும் நியாயப்பிரமாணத்தை மீறினவர்கள் என்பதை நமக்குக் காட்ட (யூதர் மற்றும் புறஜாதிகள் ஆகிய இருவரும்)

2. விசுவாசத்தின் மூலமாக நாம் நீதிமான்களாக்கப்பட நம்மைக் கிறிஸ்துவண்டை வழிநடத்துவதற்காக.

இ. இப்பொழுது கேள்வி இதுவாக இருக்கிறது: நியாயப்பிரமாண சடங்காச்சாரங்கள், அல்லது பழக்கவழக்கங்கள் ஆகியவைகளை அனுசரிப்பது அல்லது பலிசெலுத்துவது, அல்லது உன்னுடைய சொந்த முயற்சிகள் ஆகிய இவைகளின் மூலமாக தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட நீ முயற்சி செய்திருக்கிறாயா? அல்லது செய்து கொண்டிருக்கிறாயா? இது உன்னுடைய வழியாக இருக்குமானால், உன்னுடைய புத்தி தெளியவேண்டும். மற்றும் இந்த "கிரியைகள்" உன்னைச் சிறைப்படுத்தி, அவைகளுடைய சிறையிலிருந்து உன்னை விடுவிக்காது. ஆனால் அவைகள், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்படுவதற்கு உன்னை நம்பிக்கையோடு இழுத்துச் செல்லும்!

தேவனுடைய குமாரர்களும் சுதந்தரவாளிகளும் கலாத்தியர் 3:26-4.7

முன்னுரை

அ. நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்து இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தை வைக்கச் செல்லுகிற மனிதர்களுக்கு அதனால் கிடைக்கும் பலன்கள் என்ன? இந்த வேத பாகத்தில், பவுல் இரண்டு காரியங்களை அட்டவணைப்படுத்துகிறார்:

1. அவர்கள் தேவனுடைய குமாரர்களும், சுதந்தரவாளிகளுமாகிறார்கள்.

2. தேவன், அவருடைய குமாரனின் ஆவியை அவர்களுக்குள் அனுப்புகிறார்.

1. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிற யாவரையும், தேவன் குமாரர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களைச் சுதந்தரவாளிகளாக்குகிறார் (3:26-29)

அ. வசனம் 26. "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே." "நீங்கள்" மற்றும் "எல்லாரும்" ஆகிய இரண்டும் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இருவரும் அவருடைய மனதின் நினைவில் உள்ளனர் என்பதைக் காட்டுகிறது. நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை அனுசரிப்பதைத் தவிர்த்து, இயேசு கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் வைப்பதே (இரட்சிப்புக்கு கிறிஸ்துவைச் சார்ந்திருப்பது) தேவனுடைய குமாரனாவதற்குரிய ஒரே தேவையாக இருக்கிறது. (ரோமர் 3:21,28 அப்போஸ்தலர் 13:39; எபேசியர் 2:9; மற்றும் கலாத்தியர் 2:16; 3:11)

ஆ. "தேவனுடைய புத்திரர்," என்றால் நாம் அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக, அவருடைய பிள்ளைகளாகிறோம். (யோவான் 1:12; ரோமர் 8:16; 1 யோவான் 3:1-2) கிறிஸ்துவில் மட்டும் வைக்கும் நம்முடைய விசுவாசத்தின் மூலமாக (அவர் மீது சார்ந்திருப்பது) நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். (நேர்மையானவர்களென்றும் குற்றமற்றவர்களென்றும் அறிவிக்கப்படுகிறோம். அவருடன் கொண்டிருந்த நியாயமற்ற தொடர்பிலிருந்து, நேர்மையான தொடர்பிற்குள் வந்திருக்கிறோம்)

இ. வசனம் 27-28 "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்." புதிய பிறப்பில், உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக, விசுவாசிகள் கிறிஸ்துவுடன் ஐக்கியப்படுவதை, இது குறிப்பிடுகிறது. (யோவான் 3:3-8; 1 கொரிந்தியர் 12:13; மற்றும் 1 கொரிந்தியர் 6:19; யோவான் 14:17; ரோமர் 8:9) ஒருவருடைய வம்சம், கலாச்சாரம், அல்லது தேசம், பரம்பரை மதம், சமூகநிலை அல்லது பாலினம் ஆகிய இவற்றில் எதைச் சேர்ந்தவர்கள் என்பதை கருதாமல், விசுவாசிகளெல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். (எபேசியர் 4:5; யோவான் 17:21)

ஈ. "கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்றால், ஆடையை ஒருவர் உடுத்திக்கொள்வதுபோல, கிறிஸ்துவை அணிந்து கொள்வது;

தேவனுடைய குமாரர்களும் சுதந்தரவாளிகளும் கலாத்தியர் 3:26-4.7

ஒருவர் வஸ்திரத்தால் தங்களைச் சுற்றி மூடிக்கொள்வதுபோல கிறிஸ்துவால் உன்னைச் சுற்றி மறைத்துக் கொள்வது என்று பொருள்படும். இது, விசுவாசிகள் கிறிஸ்துவோடு சேர்ந்து உலகத்தில் (அல்லது நாடகமேடையாகிய உலகத்தின் மீது, ஒரு நாடகசாலை சார்ந்த சொல்) தங்களைக் காட்டிக்கொள்ளுவார்கள், மற்றும் இனிமேல், உலகத்தாராக இன்னமும் இருப்பவர்களுடன் சேர்ந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளமாட்டார்கள், (அல்லது பாவமுள்ள வழிகளிலே பங்குகொள்ளமாட்டார்கள்) என்பதைக் குறிக்கும் (ரோமர் 13:14; மற்றும் ரோமர் 6:3-14; எபேசியர் 4:22-24; கொலோசெயர் 3:9-10; சகரியா 3:3-5)

உ. ஆகவே, நீரில் ஞானஸ்நானம் பெறுவது, ஒரு அடையாளம் மற்றும் பொதுவான சாட்சி,

1. கிறிஸ்துவுடன், அவரோடேகூட ஒரே தன்மையாக இருக்கும் இந்தப் புதிய அனுபவம் மற்றும் கிறிஸ்துவுடன் ஒருமனப்பாடு.

2. நம்முடைய வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கும், சன்மார்க்க மாற்றங்கள்.

ஊ. வசனம் 29. "நீங்கள் கிறிஸ்துவுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும்----" அவனுடைய விசுவாசத்தினால் மட்டுமே, தேவனுக்கு முன்பாக நீதிமானாகக் கருதப்பட்ட அபிரகாமுடைய "சந்தானம்" அல்லது "வித்து" ஆக நம்மை ஆக்குவதற்கு, விசுவாசத்தால் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டால் மட்டும் போதுமானதாக இருக்கிறது. (கலாத்தியர் 3:6-7)

ஊ. வசனம் 29. "---- வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிற, (விசுவாசத்தின் மூலமாக மாத்திரம் நீதிமான்களென்று அறிவிக்கப்பட்டவர்கள்) யூதர் மற்றும் புறஜாதியார் ஒன்றுபோல எல்லா விசுவாசிகளும், ஆபிரகாமுக்குக் கொடுத்த தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கும் சுதந்தரராயிருக்கிறார்கள். ("பூமியிலுள்ள வம்சங்களிளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்----" - ஆதியாகமம் 12:3)

எ. "அந்த வாக்குத்தத்தம்" என்பது பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் மற்றும் இதன் காரணமாக விசுவாசிகள் மத்தியிலும், விசுவாசிகள் மூலமாகவும் வெளிப்படுத்தப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்கள்! (கலாத்தியர் 3:14; 3:2,5,9; மற்றும் எபேசியர் 1:13-14)

2. இயேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ள எல்லாருடைய இருதயங்களுக்குள்ளும் தேவன் அவருடைய குமாரனுடைய ஆவியை அனுப்பியிருக்கிறார். (4:1-7)

அ. வசனம் 1. "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாயிருக்குங்காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை". பவுலுடைய நாட்களிலே செல்வந்தர்களான ரோமர் குடும்பத்தில், குமாரனும் சுதந்தரவாளியுமாக இருப்பவன் தகுந்த வயது வரும்வரை (பொருப்புள்ளவனாகும் மட்டும்) ஒரு அடிமையைப்போல நடத்தப்படுவான். அவனுக்குச் சுதந்திரமிராது மற்றும் அவன் பாதுகாவலன் அல்லது பொருப்பாளியானவனின் கவனத்தின் கீழ்வைக்கப்படுவான்.

தேவனுடைய குமாரர்களும் சுதந்தரவாளிகளும் கலாத்தியர் 3:26-4.7

அவன் "தகுந்த வயதையடைவது" என்பது அநேகமாக பதினாறுவயது. இது முடிவாக அவனுடைய தகப்பனால் தீர்மானிக்கப்படும். இந்த நேரத்தில், அந்தப் பிள்ளை, அவனுடைய குமாரன் மற்றும் சுதந்தரவாளியாக, அவனுடைய தகப்பனால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படும்.

ஆ. நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்த ஒருவன் இயேசுகிறிஸ்துவில்லைக்கும் விசுவாசத்தின் மூலமாக விடுக்கப்பட்டபின் அவனுக்கு என்ன நடைபெறுகிறது என்பதை பவுல் இம்மாதிரியாக விவரிக்கிறார். அவன்,

1. நியாயப்பிரமாணமாகிய பாதுகாவலன் கீழ் இனிமேல் ஒருபோதும் இருக்கவேண்டாம்.

2. தேவனுடைய குடும்பத்திற்குள், குமாரனாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறான்.

3. தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வதங்களுக்கு சுதந்தரவாளியாக இருக்கிறான்.

இ. வசனம் 2-3. "தகப்பன் குறித்த காலம் வரைக்கும் அவன் காரியக்காரருக்கும், வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான். அப்படியே நாமும் சிறு பிள்ளைகளாயிருந்த காலத்தில், இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்." பவுலுடைய காலத்தில் ஐசுவரியவான் குடும்பத்தின் சுதந்தரவாளி, எவ்வாறு அடிமைபோல் நடத்தப்பட்டும், தகுந்த வயது வரும்வரை தகப்பனால் தீர்மானிக்கும்வரை (கலாத்தியர் 3:25) பாதுகாவலன் அல்லது பொருப்பாளியின் கவனத்தின் கீழ் இருக்கிறானோ அவ்வாறாகவே நாமும், நம்முடைய மனந்திரும்புதலுக்குமுன் (4:9) நியாயப்பிரமாணத்திற்கும், மற்ற புறஜாதிகளின் சட்டரீதியான விக்கிரக வழிபாடுகளோடு சம்பந்தப்பட்ட சடங்காச்சாரங்களுக்கும் அடிமைப்பட்டிருந்தோம். ("தகுந்தவயது அடையாத" பிள்ளைகளைப்போல) நாம், "உலகத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அடிமைகளாயிருந்தோம்" என்று பவுல் கூறும்போது, இப்பொருள்பட சொல்லுகிறார். அவர் இதை, தேவபக்திக்கடுத்த காரியங்களில் வளர்ச்சியடைவதில் ஆரம்ப நிலையிலிருப்பதாக (அடிப்படை அல்லது முதல் அடி - நாம் நம்முடைய ஆ.ஆ.இ முதலியன கற்றுக்கொள்ளும்போது இருந்தது போல) காண்கிறார்.

ஈ. வசனம் 4-5. "நாம் புத்திர சுவீகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்." கிறிஸ்துவில்லைக்கும் விசுவாசத்தின் மூலமாக வந்த நம்முடைய மீட்பு (நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்த வாழ்க்கை திரும்ப வாங்கப்பட்டது) தகுந்த நம்முடைய வயது வருவதாக (ஆவிக்குரிய வளர்ச்சியில் முதிர்ச்சிநிலையை அடைவது) இங்கே நோக்கப்படுகிறது. தேவனுடைய குடும்பத்தில் ஒரு குமாரனாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அத்துடன் முறையாகக் கிடைக்கும், பரம்பரை சொத்துக்குரிய உரிமைகள்; சலுகைகள் மற்றும் பொருப்புகள் ஆகியவைகளுக்கு நம்மை தகுதியுடையவர்களாக்குகிறது. (எபேசியர் 2:19; மற்றும் 1யோவான் 3:1)

தேவனுடைய குமாரர்களும் சுதந்தரவாளிகளும்
கலாத்தியர் 3:26-4.7

உ. இப்பொழுது இவையாவும் சாத்தியமாகும் ஏனெனில், தேவன், இதற்கு நேரம் வந்துவிட்டது என்று தீர்மானித்தபோது, (ஒரு ஐசுவரியவானாகிய ரோமர் குடும்பத்தில் உள்ள ஒரு குமாரனுடைய தகப்பன்போல) ஒரு கன்னிகையின்மீது நிழலிட்டு, அவருடைய தேவத்தன்மையோடு, மனிதத்தன்மையை இணைத்து கிறிஸ்துவை உருவாக்கினார். நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்ட எல்லாக்காரியங்களையும், அவர்களால் செய்யக்கூடாததினால், தேவனுடைய சாபத்தின் கீழ் இருந்தவர்களை மீட்கும்படியாக, சிலுவையில் அறையப்பட்டதினால், நியாயப்பிரமாணத்தின்படி கிறிஸ்து சாபமானார். (பிலிப்பியர் 2:7; கலாத்தியர் 3:10-13; மற்றும் ரோமர் 8:3)

ஊ. வசனம் 6. "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், ----- தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்." "நீங்கள்" என்பது, யூதர் மற்றும் புறஜாதியார் ஆகிய விசுவாசிகள் இருவரையும் உள்ளடக்கும். இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக, நாம் தேவனுடைய குமாரராகிறபடியால், (குமாரராவதின் பலனாக - நம்முடைய குமாரத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு சாட்சியாக) தேவன், இயேசு கிறிஸ்துவாகிய அவருடைய குமாரனுடைய ஆவியை, நம்முடைய இருதயங்களுக்குள் அனுப்பினார். (பரம்பரைசொத்து போல் - ரோமர் 8:17)

எ. "தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்." இது, விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதைப்பற்றிய மற்றொரு குறிப்பு. (கலாத்தியர் 3:2,5) பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறுவதைக் குறிப்பிடும்போது, இயேசுவும்கூட, லூக்கா சுவிசேஷத்தில், "என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன் ----" (லூக்கா 24:49; மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள் 1:4-5) என்று கூறுகிறார்.

ஏ. ஆகவே, பெந்தேகோஸ்தே அனுபவத்தின் நிறைவேறுதலாக, தேவன் பரிசுத்த ஆவியை அனுப்ப, குமாரத்துவம் ஒரு முன்தேவையாக இருக்கிறது! மற்றும் தேவனைக் கிட்டிச்சேர (மற்றும் நெருங்கிய தொடர்புகொள்ள) ஆவியானவர் மூலமாக மட்டும் சாத்தியமாகும். (எபேசியர் 2:18) பரிசுத்த ஆவியானவர், நமக்குள்ளிருந்து, "அப்பா, (ஆர்மீனிமொழியில் "ஆ தகப்பனே") பிதாவே, என்று நாம் எப்போதும் கூப்பிடும்படியாக ஊக்கப்படுத்துகிறார். (வியாபாரிகள் சந்தை கூடும் இடங்களில் சப்தமிடுவதுபோல, பலத்த குரலில் கூப்பிடவேண்டும்). (ரோமர் 8:15)

ஒ. வசனம் 7. "ஆகையால், இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்." இயேசு கிறிஸ்துவில்வைக்கும் விசுவாசத்தின் மூலமாக ஒரு நபர், தேவனுடைய குமாரனும், சுதந்தரவாளியுமாகிறான் என்பதை, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம்பெறும் அனுபவம், உறுதிப்படுத்துகிறது. அத்துடன் அவன் இனிமேல் ஒருபோதும் நியாயப் பிரமாணத்திற்கு அடிமையாயிருக்கமாட்டான். (தேவபக்திக்குரிய வளர்ச்சியில் ஒரு முதிர்ச்சியற்ற நிலை)

தேவனுடைய குமாரர்களும் சுதந்தரவாளிகளும்
கலாத்தியர் 3:26-4.7

முடிவுரை

அ. "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் ----". (ஆதியாகமம் 12:3) என்று ஆபிரகாமுக்குத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி, விசுவாசிகள் யாவரும், கிறிஸ்துவில் மட்டும் அவர்களுடைய விசுவாசத்தை வைக்கிறபடியினால், தேவனுடைய குமாரர்களும், சுதந்தரவாளிகளுமாகிறார்கள்.

ஆ. இன்று, இந்த உலகத்தில் ஒரு நபர் மரித்தபின், மரணசாசனம் மற்றும் சொத்துரிமை ஏற்பாடு வாசிக்கப்படும்போது, இருக்கக்கூடிய எல்லா சுதந்தரவாளிகளும், அவர்களுக்காகக் குறித்துவைக்கப்பட்ட அவர்கள் உரிமைகளை, அவர்கள் பெற்றுக்கொள்வதை நிச்சயப்படுத்திக்கொள்ளும்படி ஆவலோடு சூழ்ந்து நிற்பார்கள்.

அவ்வாறாகவே, இந்தப் போதனையைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு விசுவாசியும், கீழ்க்கண்டவைகளை அவர்கள் பெற்றுக்கொள்கிறார்களா என்பதை நிச்சயப்படுத்த, ஆவலோடு சூழ்ந்துவர வேண்டும்.

1. பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம்.

2. இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை அவர்கள் மூலம் தேவன் வெளிப்படுத்தியிருக்கிறாரா? அவர்கள் அதற்கு உரிமையுடையவர்கள்! அது, தேவன் ஆபிரகாமுக்கு அவர்களுடைய ஆவிக்குரிய தகப்பன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் மூலமாக, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது!

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

முன்னுரை

அ. இந்த வேதபாகத்தில், பவுல் கலாத்திய விசுவாசிகளுக்கு விக்கிரக ஆராதனை செய்யும் மதத்திலிருந்த அவர்களுடைய கடந்தகால வாழ்க்கையைப்பற்றி ஞாபகப்படுத்துகிறார். தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப் படுவதற்கு, கொள்கைகளைச் சட்ட ரீதியாக பின்பற்றும் வழிபாடுகளை, ஒரு முறையாகப் பின்பற்ற திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில் இருக்கும் அவர்களைக் குறித்து, அவருக்குண்டான ஆச்சரியத்தை எடுத்துக் கூறுகிறார்.

ஆ. இம்மாதிரியான வாழ்க்கை முறைக்கு அவர்கள் திரும்புவார்களானால், அவர்கள்:

1. ஒரு விதமான அடிமைத்தனத்திற்குத் திருப்பப்பட்டிருக்கிறார்கள்.

2. அவர்களுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்திருப்பார்கள்.

3. தவறான காரியங்களுக்காக வைராக்கியம் பாராட்டுவார்கள்.

மற்றும், அவர்கள் மத்தியில் பவுலுடைய ஊழியம் பயனற்றதாக நிரூபிக்கப்படுவது பவுலை மிகவும் பாதிக்கும் முக்கியமான காரியமாக இருக்கும்!

1. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள், அடிமைத்தனத்திற்குத் திரும்பிவிட்டனர். (4:8-11)

அ. வசனம் 8. "நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்." "அடிமை" என்றால் கட்டுகளிலிருப்பது, வேலை செய்வது என்று இங்கே பொருள்படும். கிறிஸ்தவ மதத்திற்கு, அவர்கள் மனந்திரும்பிவருவதற்குமுன், புறஜாதிகளென்று பிரிக்கப்பட்ட பிரிவிலிருந்த கலாத்தியர்களிடம் பவுல் முதலாவது பேசுகிறார். பிதாவாகிய தேவனிடம், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகத் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய தொடர்புக்கு முன்,

1. அவர்களில் ஒருவரும் பிதாவாகிய தேவனை சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அறியவில்லை. (1 தெசலோனிக்கேயர் 4:5)

2. அவர்களில் பெரும்பாலானவர்கள் புறமதத்தினர்களின் விக்கிரகங்களைச் சேவித்து, அடிமைத்தனத்தில் இருந்தார்கள். (1கொரிந்தியர் 12:2) "சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு", என்பது, சாத்தானுடைய தூண்டுதலின் காரணமாக, மனிதர்கள் அவைகளை ஆராதித்து, அவைகளுக்குப் பலிகளைச் செலுத்தினபோதிலும், இந்த விக்கிரகங்கள் ஒரு பொருளல்ல அல்லது தேவர்களும் இல்லை (உண்மையான தேவர்கள் அல்ல) 1 கொரிந்தியர் 10:19-21; மற்றும் 1 கொரிந்தியர் 8:4)

ஆ. வசனம் 9. "இப்பொழுதோ, நீங்கள் தேவனை அறிந்திருக்க - அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும், வெறுமையானதுமான

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

அவ்வழிபாடுகளுக்குத்திரும்பி ----" தேவனை "அறிந்திருக்க" அல்லது "தேவனாலே அறியப்பட்டிருக்க" (தேவன் அவருடைய கிருபையினாலே, மனிதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார் - மனிதன், அவனுடைய சொந்த முயற்சிகளினாலே அவரைக் கண்டுபிடிக்க முடியாது) என்றால், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகமட்டும் அவருடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளமுடியும்.

இ. "பலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு" என்பது, ஒருவர் வாழ்வதற்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தும், எந்த ஒருவிதமான சட்டரீதியான கொள்கைகளையுடைய வழிபாட்டு முறையை இது குறிக்கிறது (யூதர்களுடைய நியாயப்பிரமாணம் மற்றும் விக்கிரகங்கள் அல்லது பிசாசுகளை ஆராதிப்பதும் இதில் அடங்கும் - 4:3) சட்டரீதியான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மதம், (மாம்சத்தில் முயற்சி செய்வது, மற்றும் கிரியைசெய்வது, கற்பனைகளைக் கைக்கொள்வது, சடங்காச்சாரங்களை நிறைவேற்றுவது, பலிகளைச் செலுத்துவது, குறிப்பிட்ட சில நாட்களை ஆசரிப்பது) கீழ்க்கண்ட கருத்துகளையுடையது:

1. பலவீனமானது ஏனெனில் அது வல்லமையற்றது. அது,

(அ) பாவம் என்ன என்று விளக்கும்.

(ஆ) அவன் பாவம் செய்யும்போது அவனுக்கு அதைக் காட்டும்.

(இ) பாவம்செய்த மனிதனுக்கு, அவன் குற்றவாளி என்று காட்டும்.

(ஈ) பாவம் செய்யாதபடி தடுக்கவும் முடியாது, அவனுக்குப் பாவமன்னிப்பைத் தரவும் முடியாது.

2. "வெறுமையானதும்", ஏனெனில் அது திவாலான நிலையிலிருக்கிறது மற்றும் பரம்பரைச் சொத்தாக எதுவும் கொடுக்க இயலாதது. (நீதிமானாக்க - நீதிமான் என்று அறிவிக்க, மற்றும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய வரத்தைப் பெற்றுக்கொள்ளவும், தேவன் அவர்கள் மத்தியில் அற்புதங்களை நடப்பிப்பதும் முடியாது - 3:5,29; 4:6)

ஈ. வசனம் 9. "---- மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?" "அவைகளுக்கு" என்பது "பலவீனமானதும்", "வெறுமையானதுமான" சட்டரீதியான கொள்கைகளைக்குறிக்கும். கலாத்தியர்கள், பலனற்றதும், வெறுமையானதுமான, சட்டரீதியான வழிபாடுகளுக்கு அடிமைகளாகவும், கட்டப்பட்டவர்களாகவும் இருக்க, திரும்பிச் செல்ல விரும்பினார்களா?

உ. வசனம் 10. "நாட்களையும், மாதங்களையும் காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே?" ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் மற்றொரு வாக்கியம்! கலாத்திய விசுவாசிகள், நீதிமான்களாக்கப்படுவதற்கு, சட்டரீதியான கொள்கைகளை ஒரு முறையாக அனுசரித்துக் கொண்டிருந்த நிலையில் வளர்ந்து கொண்டிருந்ததோடல்லாமல், பழைய ஏற்பாட்டு யூதநாட்காட்டியில் உள்ளடக்கப்பட்டிருக்கும்,

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

சிறப்பு நாட்களையும், மாதங்களையும், காலங்களையும் மற்றும் வருடங்களையும், அனுசரித்து வந்தனர்.

1. "சிறப்பு நாட்கள்" - ஓய்வு நாட்கள் மற்றும், பாவநிவிர்த்தி செய்யும் நாள். (கொலோசெயர் 2:16; லேவியராகமம் 16:29-34)

2. "மாதங்கள்" - அமாவாசை நாள் அனுசரிப்பது. (எண்ணாகமம் 28:11-15; ஏசாயா 1:13-14)

3. "காலங்கள்" - காலங்களுக்கடுத்த நடவடிக்கைகள்; ஒரு நாளுக்குமேல் தொடர்ந்து நடைபெறும். உதாரணம் பஸ்கா, கூடாரப்பண்டிகை, முதலியன. (யாத்திராகமம் 12:18; லேவியராகமம் 23:10)

4. "வருடங்கள்" - ஓய்வு வருடங்கள் (லேவியராகமம் 25:8) மற்றும் யூபிலி வருடங்கள் (லேவியராகமம் 25:11) முதலியன.

ஊ. "பார்க்கிறீர்களே" என்றால், கலாத்தியர்கள் இந்த சிறப்பு காலங்கள் வருவதைக் கணக்குப்பார்த்து, அவைகளுடைய வருகைக்காகக் காத்திருந்து, தேவனுக்கு முன்பாக நீதிமானக்கப்படுவதை ஆதாயமாகப் பெற்றுக்கொள்வதற்குரிய மத சடங்காச்சாரமாக அவைகளை அனுசரித்து வந்தனர், என்று இங்கே பொருள்படும்.

எ. வசனம் 11. "நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்". "உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன்" என்றால் உங்களை நினைத்து அச்சமுற்று, திகிலடைகிறேன், என்று பொருள்படும். "நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது, வீணாய்ப்போயிற்றோ", என்பது, கலாத்திய விசுவாசிகளுக்காக பவுல், தம்மையே வருத்திக் கடினமாக வேலைசெய்து, ஊழியம் செய்ததைக் குறிக்கும்:

1. சுவிசேஷத்தை அவர்களுக்குப் பிரசங்கித்ததின் மூலமாக.

2. அவர்களுக்காக ஜெபித்தது.

3. விசுவாசத்தில் அவர்களுக்குப் பயிற்சியளித்தது.

2. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தில் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தைவிட்டு விலகியவர்கள் அவர்களுடைய சந்தோஷத்தை இழந்துபோவார்கள். (4:12-16)

அ. வசனம் 12. "சகோதரரே, என்னைப்போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நான் உங்களை போலுமானேனே ----" "வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றால் கெஞ்சிக்கேட்கிறேன், அல்லது ஊக்கத்துடன் பலமாக விண்ணப்பம் செய்வது, என்று பொருள்படும். ஒரு தகப்பன், அவனுடைய மகனிடம், ஒருவருடன் ஒருவருக்கு, அவர்களிடையேயுள்ள நெருங்கிய தொடர்பை முறித்துப்போடவேண்டாம் என்று மிகவும் வருந்திக் கேட்டுக்கொள்வதற்கு ஒத்ததாக வேண்டிக்கொள்வது.

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

கலாத்திய விசுவாசிகளை "சகோதரர்" என்று பவுல் குறிப்பிடுவது, போதகராக அவருடைய கவலையையும், சூழ்நிலையைக் கருதாமல், அவர் காட்டும் சகோதர அன்பையும் காட்டுகிறது.

ஆ. "என்னைப்போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நான் உங்களைப்போலுமானேன் ----" இது அநேகமாக, இவ்வாறு பொருள்படுமாறு கூறப்பட்டிருக்கலாம்: "என்னுடைய இருதயம் உங்கள் சார்பாக விரிவாகத்திறந்திருக்கிறது, உங்களுடையது என்பால் விரிவாகத் திறந்திருக்கட்டும்." அல்லது, "கடந்த காலத்தில், ஒருவரிலொருவர் வைத்திருந்த அதே சிநேகித அன்பையும், திட நம்பிக்கையையும், தொடர்ந்து நாம் அனுபவிக்க, நான் விரும்புகிறேன்".

இ. "என்னைப் போலாகுங்கள்" என்பதை சிலர் இவ்விதமாக வியாக்கியானம் செய்கின்றனர்: "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் என்னுடைய இரட்சிப்பு என்று என் விசுவாசத்திலும் சட்டரீதியான மதத்திலிருந்து நான் விடுதலையாயிருப்பது ஆகியவைகளில், என்னைப்போலாகுங்கள். "நான் உங்களைப்போலுமானேனே," என்றால், நீங்கள் என்னுடைய சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கும்படியாக, நான் உங்களுடன் சேர்ந்து புறஜாதியானாக என்னைக் காட்டிக்கொண்டேன்," என்று பொருள்படும். (1 கொரிந்தியர் 9:20-22)

ஈ. வசனம் 12. "---- எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை." "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு" என்ற அவருடைய சுவிசேஷத்தை விட்டு அவர்கள் விலகிச்சென்றிருக்கலாம், ஆனால் தனிப்பட்ட முறையில் பவுலுக்கு அவர்கள் எந்தவிதமான தீங்கும் இழைத்ததில்லை! இது 13-14 வசனங்களில் நமக்கு விவரித்துக் கூறப்படுகிறது.

உ. வசனம் 13. "உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்." அவர் வியாதிப்பட்டு, மருத்துவ உதவி அவசியமாயிருந்தபடியினால், அவன் கலாத்தியாவுக்குச் சென்றதின் ஒரே முதல் காரணம். "சரீர பலவீனம்" என்பது சரீரத்தில் ஏற்படும் ஒரு சுகவீனம் என்று பொருள்படும். கொரிந்தியருக்கு எழுதின அவருடைய இரண்டாம் நிருபத்தில், "மாம்சத்தில் ஒரு முள்" என்று பவுல் கூறுவதுடன் (2 கொரிந்தியர் 12:7-10) இந்த வியாதியை அநேக அறிஞர்கள் ஒன்றுபடுத்தி கருத்து வெளியிட்டுள்ளனர். இது சரீரத்திலுள்ள ஒரு பலவீனமாக இருக்குமானால், அது அநேகமாக ஒரு வழியில் பவுலுடைய கண்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடும். (கலாத்தியர் 4:15; 6:11) ஆகிலும், அது மலேரியா என்று சிலர் கருதுகின்றனர்.

ஊ. வசனம் 14. "அப்படியிருந்தும், என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும் --- ஏற்றுக்கொண்டீர்கள்" "அசட்டை செய்வது மற்றும் அரோசிப்பது" என்றால், ஒருவரை அற்பமாக நடத்தி, முற்றிலும் அவர்களை மதிக்காமல் இருப்பது அல்லது அவர்களைப் புறக்கணிப்பது என்று (துப்பி விரட்டுவது) பொருள்படும்.

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

ஊ. வசனம் 14. "---- தேவதூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்." கலாத்தியர்கள் உண்மையாக பவுலிடம் மிகுந்த மரியாதை காட்டினார்கள் மற்றும் பவுலையும், அவருடைய சுவிசேஷத்தையும் திறந்த மனதுடனும் மகிழ்ச்சியுடனும், முதல் முறை அவர்களைச் சந்தித்தபோது ஏற்றுக்கொண்டனர். பவுலும் பர்னபாவும் முடமானவனைச் சுகமாக்கினதிற்குப்பின், லீஸ்திராவிலுள்ள மக்கள் அவர்களிடம் நடந்து கொண்டதற்கு மிகவும் ஒத்ததாக இது இருக்கிறது. (அப்போஸ்தலர் நடபடிகள் 14:8-13)

எ. வசனம் 15. "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக்கொடுக்கக் கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள், ----" முதல் முறையாக அவர்களைச் சந்தித்தபோது, கலாத்தியர்கள், பவுலுக்காகத் தனிப்பட்ட முறையில் மிகப்பெரிய தியாகம்செய்ய ஆயத்தமாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய விலைபேறப்பட்ட உடைமைகளையும் மனவுவந்து கொடுக்க தயாராக இருந்தனர். ஆகிலும் இது, மாறிவிட்டதாகக் காணப்படுகிறது. இக்காரணத்தினால் அவர்களுடைய மகிழ்ச்சியை இழந்துவிட்டனர்.

அவருடைய சந்திப்பினால் அவர்கள் "ஆசீர்வதிக்கப்பட்டதாக", அவர்களால் இனிமேல் உணரமுடியவில்லை. அவருடைய சந்திப்பு அவர்களுக்கு நற்பேறு கொண்டுவரும் என்று அவர்களால் இனிமேல் நினைக்க முடியவில்லை.

ஏ. வசனம் 16. "நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ? சட்டரீதியான மதவழிபாடுகளுக்கு அவர்கள் திரும்பிவிட்டதைப்பற்றிய "சத்தியம்" இக்காரணத்தினால் அவர்கள் இனி ஒருபோதும் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக முடியாது. அவர்களுடைய இரட்சிப்பை இழந்துவிட்டனர். (கலாத்தியர் 5:2-4) "சத்துருவானேனோ" என்பது, கலாத்தியர்கள் இப்பொழுது பவுலை ஒரு "விரோதியாகக்" (சாத்தான்போல) கருதினார்கள், என்று இங்கே பொருள்படும். அவர்கள் பகையுணர்வோடு அவரிடம் நடந்துகொண்டார்கள்.

3. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள், தவறான நோக்கங்களுக்காக வைராக்கியம் பாராட்டுவார்கள். (4:17-20)

அ. வசனம் 17. "நீங்கள் அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டும்பொருட்டு உங்களைப் புறம்பாக்க விரும்புகிறார்கள்." "வைராக்கியம்" என்பது ஒருவரிடம் ஆழமான அன்பு உணர்வுடன் இருப்பது, அவர்களிடம் கருணையோடு இருப்பது, என்று இங்கே பொருள்படும். "அவர்களை" என்பது யூதசமயபத்தரைக் (யூத கிறிஸ்தவர்கள்) குறிக்கும். அவர்களுடைய நோக்கங்கள் மேன்மையற்றது. அவர்கள் கீழ்க்கண்டவற்றை விரும்புகின்றனர்.

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

1. கலாத்தியாவிலுள்ள விசுவாசிகளின் கூட்டத்தாரிடமிருந்து, தங்களுக்கு ஆதரவாளர்களை (கற்றுக்கொள்ளுகிறவர்களை, பின்பற்றுகிறவர்களை) ஆதாயம் செய்துகொள்ள விரும்பினார்.

2. அவர்கள்பால் துபவுள்ளவர்களாகும்படியாக. (அவர்களிடம் அன்புணர்வுடன் இருக்க)

3. அவர்களுடைய சட்டரீதியான வழிமுறைகளை பின்பற்றுகிறவர்களாக்கும்படியாக (கற்றுக்கொள்ளும்படியாக)

4. பவுலுடன் (அவர்களுடைய ஆவிக்குரிய தலைவர்) அவர்களுக்கு இருந்த ஐக்கியத்தை துண்டிக்க.

ஆ. சபைகளுக்குள் தாங்கள் நுழைந்து செல்லவழியுண்டாக்கிக்கொள்ளும் எல்லாக் கள்ளப்போதகர்களின் நடத்தையும் இம்மாதிரியாகவே இருக்கும். இவர்கள், விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து விசுவாசிகளைப் பிரித்தெடுத்து, (விசேஷமாக பெலவீனமானவர்களையும் புதிதாகப் பிறந்தவர்களையும்) அவர்களுடைய ஆவிக்குரிய தலைவர்களுக்கு எதிராகப் பொய்யாய்க் குற்றஞ்சாட்டி, அவர்களுக்கு விரோதமாகத் திரும்பும்படியாகச் செய்து,

இந்தத் தனிப்படுத்தப்பட்ட மனந்திரும்பினவர்களிடம் மிகுந்த அன்பு பாராட்டி, அவர்கள் மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் இருக்கும்படியாக செய்கிறார்கள்!

இ. வசனம் 18. "நல் விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான். அதை நான் உங்களிடத்தில் இருக்கும்போது மாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்ட வேண்டும்." நோக்கம் நன்மையானதாக இருக்குமானால், ஒருவரிடம் துபவாகவும், அன்புடனும் இருப்பது நல்லது. அவர் அவர்களுடன் இருக்கும்போது, கலாத்தியர் மற்றும் பவுல் ஆகிய இவர்களிடையேயுள்ள தொடர்பு சரியாக அவ்விதமாகவே இருந்தது. ஆகிலும், அங்கிருந்து சென்றபின்பு, இது மாறிவிட்டது. கலாத்தியர்கள் யூத கிறிஸ்தவர்கள் சார்பாகத் துபவாகவும், பவுலுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் எதிரானவர்களாகவும் மாறிவிட்டனர்.

ஈ. வசனம் 19. "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்." கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தைப்பற்றிய சுவிசேஷத்தை மிகுந்த வேதனை மற்றும் உபத்திரவங்களின் மூலமாக பவுல், கலாத்தியர்களுக்குக் கொண்டு வந்தார். (அப்போஸ்தலர் நடபடிகள் 13:45,50; கலாத்தியர் 14:2,5-7,19) அவர்கள் கிறிஸ்துவுக்கு மறுபடியும் உரிமையுடையவர்களாகும் வரை, அவர் அவ்வாறாகவே, ஆவியில் தாங்கொண்ணா துயருற்று, வேதனை அடைவார்:

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாகும் வரை.

2. அவர்களுடைய சட்டரீதியான மதவழிபாடுகளிலிருந்து திரும்பும் வரை.

3. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் நீதிமான்களாக்கப்படுவது என்பதை மறுபடியும் நாடும் வரை.

கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தை விட்டு விலகிச் சென்றவர்கள்

கலாத்தியர் 4:8-20

உ. வசனம் 19. "கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும்," ஒருவர், அவர்களுடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவில் வைத்த பிறகு, பரிசுத்த ஆவியானவருடைய பரிசுத்தமாக்கும் கிரியை நடைபெறுவதை இது குறிக்கும். (2 கொரிந்தியர் 3:18; கொலோசெயர் 3:10) கலாத்தியர்கள் கிறிஸ்துவிடம் திரும்பி, கிறிஸ்தவர்களுக்குரிய முதிர்ச்சி நிலையை அடையும் மட்டும், பவுல், போதகருக்குரித்தான, வேதனையை அனுபவிப்பார்!

ஊ. வசனம் 20. "உங்களைக் குறித்து நான் சந்தேகப்படுகிறபடியால், நான் இப்பொழுது உங்களிடத்தில் வந்திருந்து, வேறுவகையாகப் பேசவிரும்புகிறேன். கலாத்தியாவில், அவரால் மனமாற்றம் பெற்றவர்களுக்கு, என்ன சம்பவித்தது என்பதைப்பற்றிப் பவுல் முற்றிலும் விளங்கிக்கொள்ளக் கூடாதவராயிருந்தார் என்று இது பொருள்படும். ஆனால், அச்சமயத்தில், அவர்களிடம் சென்று என்னவென்று கண்டுபிடிக்கக் கூடாதவராயிருந்தார். ஆகிலும், அவர்களிடம், அவர் மறுபடியும் போகும்போது, அவர்கள், அவரிடம் தயவுள்ளவர்களாயிருப்பார்களென்று அவர் நம்பினார். ஆகவே, இந்த நிருபத்தில் வெளிப்படுத்தப்பட்டதற்கு வேறுவகையாக பேச அது அவரை அனுமதிக்கும்!

முடிவுரை

அ. "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு" என்ற சுவிசேஷத்திலிருந்து விலகிச் சென்றவர்கள்,

1. அடிமைத்தனத்திற்குத் திரும்புகின்றனர்.

2. அவர்களுடைய மகிழ்ச்சியை இழந்துவிடுகின்றனர், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்று இனி ஒருபோதும் உணரமுடியாது.

3. தவறான நோக்கங்களுக்காக வைராக்கியம் பாராட்டுவார்கள்.

மற்றும் அவர்கள் கிருபையிலிருந்து விழுந்துவிட்டார்கள். தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதையும் இழந்துவிட்டார்கள். (ரோமர் 1:17) அவர்கள் இனிமேல் தேவனுடைய குடும்பத்தின் ஒரு அங்கமாக இருக்கமாட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களை விட்டு விலகிச் சென்றுவிட்டார்.

ஆ. ஆகிலும், கிறிஸ்துவிடம் அவர்களை முதன்முதலாக வழிநடத்தினவரின் நம்பிக்கையின்படி அவர்கள்,

1. தெளிந்த புத்தியடைவார்கள்.

2. கள்ளப்போதகர்களைப் பின்பற்றுவதை விட்டு விடுவார்கள்.

3. அவரிடம் மறுபடியும் தயவுள்ளவர்களாவார்கள்

4. புதிய பிறப்பின் அனுபவத்தை, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் தேடுவார்கள்!

ஆகாரும், சாராளும் மற்றும் அவர்களுடைய குமாரர்களும்

கலாத்தியர் 4:21-31

முன்னுரை

அ. அவருடைய நிருபத்தில் இந்த இடத்தில் "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு" என்பதைப் பற்றிய அவருடைய விவாதத்தை, மறுபடியும் உறுதிப்படுத்த, பவுல் ஆதியாகமத்திலுள்ள, ஆகார், சாராள் மற்றும் அவர்களுடைய குமாரரான இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு ஆகியவர்களின் வரலாற்றின் மூலமாக ஒட்டுவுவமையாக விளக்கி, விவரிக்கிறார்.

ஆ. பவுல் முதலாவதாக அந்தக் கதைக்கு முன்னுரை கூறுகிறார். அதன்பின் படிப்படியாக ஒட்டுவுவமையை விவரிக்கிறார். முடிவாக, அந்த ஒட்டுவுவமையோடு, கலாத்தியர்களை ஒப்பிட்டுக் கூறுகிறார். ஆகிலும், அந்த ஒட்டுவுவமையும், அதை செயல்படுத்துவதும், சட்டரீதியான வழிமுறைகளின் மூலமாகத் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக முயற்சி செய்யும் எந்த ஒரு நபருக்கும் அல்லது பிரிவினருக்கும் பொருத்தமாக இருக்கும்.

1. வேதாகம வரலாறு (4:21-23).

அ. வசனம் 21. "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்." "நியாயப்பிரமாணம்" என்பது, அநேகமாக எல்லா பரிசுத்த வேதவசனங்களையும் இங்கே குறிப்பிடுகிறது. "நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா?" என்பது ஆகார், சாராள் மற்றும் அவர்களுடைய குமாரர்களின் வேதாகம சரித்திரத்தை சிறப்பாகக் குறிப்பிடுகிறது. (ஆதியாகமம் 16; 17:15-22; 21:1-21). "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள்," என்பது யூத கிறிஸ்தவ மதத்தினர்களால் வசீகரிக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டு அதை அனுசரித்துவரும், கலாத்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது.

ஆ. வசனம் 22-23. ...என்று எழுதியிருக்கிறது...? பவுலுடைய நோக்கத்தின் அடிப்படையில், பழைய ஏற்பாட்டு வரலாறு, இம்மாதிரியாக சுருக்கி எழுதப்படலாம்:

1. ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள்-இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு.

2. ஒருவன் அடிமைப் பெண்ணிற்குப் (ஆகார்) பிறந்தவன். (ஆதியாகமம் 16:1-16) - இஸ்மவேல்

3. மற்றொருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் (சாராள்) பிறந்தவன் - ஈசாக்கு.

4. அடிமையானவளிடத்தில் (ஆகார்) பிறந்த அவனுடைய குமாரன், சாதாரண முறையில் பிறந்தான்-இது, தம்பதிகளுக்குப் பிள்ளைகள் இருப்பதுபோல, அவன் இயற்கையான முறையில் கருத்தரிக்கப்பட்டு பிறந்தான்.

5. ஆனால், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் அவனுடைய குமாரன், ஒரு வாக்குத்தத்தத்தின் பலனாகப் பிறந்தவன் - ஆகிலும் ஈசாக்கினுடைய பிறப்பு ஒரு அற்புதம். பிள்ளைகள் பிறப்பதற்கு ஆபிரகாம் மற்றும் சாராளுடைய சரீரத்தில் குழந்தையைப் பிறப்பிக்கும் சக்தி இழந்த நிலைமைக்கு அப்பால் (அவன் 100 வயது மற்றும் அவள் 90 வயது-ஆதியாகமம் 17:17) இருக்கும்போது,

ஆகாரும், சாராளும் மற்றும் அவர்களுடைய குமாரர்களும்

கலாத்தியர் 4:21-31

ஒரு வாக்குத்தத்தம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலமாக, இது சாத்தியமாயிற்று. (ஆதியாகமம் 17:19; 18;9-15; கலாத்தியர் 4:29)

2. ஒப்புவமையின் விளக்கம் 4:24-27

அ. வசனம் 24-27 "இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள் (மற்றொரு பொருளைத்தரும்); அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம். இந்த இரண்டு ஏற்பாடுகளும் நமக்கு விவரிக்கப்படுகிறது:

1. ஆகார் - இந்த ஏற்பாடு சீனாய் மலையில் உண்டானது. அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது. (யாத்திராகமம் 19:2; 20:1-17) ஆகாரும் அவளுடைய குமாரன் இஸ்மவேலும், தற்போதுள்ள எருசலேம் பட்டணத்திற்கு ஒப்பாக இருக்கிறார்கள். எருசலேமும் (ஆகார்) அவளுடைய குமாரர்களும், (அங்குள்ள யூத கிறிஸ்தவர்கள்) சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

2. சாராள்-அவளும், அவளுடைய குமாரனான ஈசாக்கும், மேலான எருசலேமுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். இந்த எருசலேமும், அவளுடைய குமாரர்களும் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்றிருக்கிறார்கள்.

"விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு" என்ற அவனுடைய சுவிசேஷத்தின் மூலமாக, மிகப்பெரிய கூட்டமானவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்பதைக் காட்ட, பவுல் ஏசாயவிலிருந்து மேற்கோள் எடுத்துக்காட்டி விளக்குகிறார். (மலடியான சாராளுக்கு ஒப்பாகக் காட்டுவதின் மூலமாக-ஏசாயா 54:1) இது பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின் "வெறுமையாய் இருந்த" எருசலேமுக்கு, மிக ஏராளமான எண்ணிக்கைக்கு அடங்காத யூதர்கள் திரும்பிவருவதைப்போல் இருக்கும்.

ஆ. வசனம் 26. "...மேலான எருசலேமோ..." எல்லா விசுவாசிகளையும் குடிமக்களாகக் கொண்ட தற்சமயம் கிறிஸ்து ஆளுகைசெய்யும், இப்போதுள்ள தேவனுடைய பட்டணத்தை இது குறிப்பிடுகிறது. (எபிரெயர் 12:22-24).

இ. "... அந்த ஸ்திரீகள், இரண்டு ஏற்பாடுகளாம் ..." இந்த ஒப்புவமையை விளங்கிக் கொள்ள, அந்த இரண்டு ஏற்பாடுகளையும், தனிப்பிரிவுகளாக வைப்பதே மிகச் சிறந்த முறையென்று வேத வல்லுநர்கள் ஆலோசனை கூறுகிறார்கள்:

ஆகார், அடிமைப்பெண்......

சாராள், சுயாதீனமுள்ளபெண்

இஸ்மவேல், இயற்கையான பிறப்பு......

ஈசாக்கு, இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறப்பு

பழைய ஏற்பாடு (சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை அனுசரிப்பது......)

புதிய ஏற்பாடு (கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் மட்டும், நியாயப்பிரமாணத்தைத் தவிர்த்து).

ஆகாரும், சாராளும் மற்றும் அவர்களுடைய குமாரர்களும்

கலாத்தியர் 4:21-31

பூலோகத்திலுள்ள எருசலேமின் குடிகள்...

வானலோகத்திலுள்ள எருசலேமின் குடிகள்

யூத மதம்........

கிறிஸ்தவ மதம்.....

அடிமைத்தனம்..........

சுயாதீனம்

ஈ. ஆகவே, இந்த இரண்டு பெண்களும், அவர்களுடைய குமாரர்களும், இரண்டு வித்தியாசமான மத ஏற்பாடுகளைக் குறிக்கிறார்கள். பழைய ஏற்பாட்டின் மூலமாக நீதிமான்களாக முயற்சி செய்பவர்கள் கட்டுகளுக்கும் அடிமைத்தனத்திற்கும் வழிநடத்தப்படுவார்கள். புதிய ஏற்பாட்டின் மூலமாக நீதிமான்களாவது, ஆவிக்குரிய சுயாதீனத்தைக் கொண்டுவரும் இதன் அடிப்படையில், பவுல், இவ்வாறு கேட்கிறார்; "எதை நீங்கள் தெரிந்து கொள்ளுகிறீர்கள்? நீங்கள் தெரிந்தெடுத்ததுடையதின் விளைவை நீங்கள் அறிவீர்களா?

3. இந்த ஒப்புவமையை செய்முறைப்படுத்தல் (4:28-31)

அ. வசனம் 28 "சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்." எவ்வாறு ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் வாக்குத்தத்தத்தின் பலனாக ஈசாக்கு இருந்தானோ, அவ்வாறே கலாத்தியாவிலுள்ள விசுவாசிகளும் (அவர்களுடைய விசுவாசத்தை முற்றிலும் விட்டுவிடாதவர்கள்) இந்த அதே வாக்குத்தத்தத்தின் மூலமாக குமாரர்களும், சுதந்தரவாளிகளுமாயிருக்கிறார்கள். (கலாத்தியர் 3:29; ரோமர் 9:8) இது, இந்நாளிலுள்ள விசுவாசிகளுக்கும் உண்மையாக இருக்கிறது!

ஆ. வசனம் 29."ஆகிலும், மாம்சத்தின்படி பிறந்தவன், ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல,..." இயற்கை முறைப்படி பிறந்த இஸ்மவேல், ஈசாக்கை துன்பப்படுத்தினான், இவனுடைய பிறப்பு:

1. இயற்கைக்கு அப்பாற்பட்டது (பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால்)

2. அவர் எதற்காக வாக்குத்தத்தம் செய்தாரோ அதை நிறைவேற்றுவார் என்று ஆபிரகாமும் சாராளும் தேவனை விசுவாசித்ததை அடிப்படையாகக் கொண்டது.

இ. இது, சந்தேகமின்றி, இவற்றிற்கிடையே ஒப்புவமையில் எதிர்மாறாக இருக்கிறது:

1. கிரியைகளின் மூலமாக நீதிமான்களாக முயற்சி செய்பவர்கள். (சாதாரண அல்லது இயற்கை முறையின் மூலமாக-ரோமர் 4:1-5)

2. கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் (நம்பிக்கை வைத்ததினால்)-வைத்ததின் காரணமாக, பரிசுத்த ஆவியின் வல்லமையினால், "மறுபடியும் பிறந்த" விசுவாசிகள். (தேவனுடைய வாக்குத்தத்தம்-யோவான் 3:3-8; ஆபகூக் 2:4)

ஈ. ஆதியாகமத்தில் கூறப்பட்ட வரலாற்றில், (ஆதியாகமம் 21:8-9) அவனுடைய தாயாகிய சாராளுடைய மார்பிலிருந்து பால் குடிப்பதை அப்பொழுதுதான் மறந்திருந்த குழந்தையாகிய ஈசாக்கை,

ஆகாரும், சாராளும் மற்றும் அவர்களுடைய குமாரர்களும்

கலாத்தியர் 4:21-31

(இரண்டு அல்லது மூன்று வயதில், சங்கீதம் 83:5-6) இஸ்மவேல், "பரியாசம் பண்ணினான்." (இகழ்ச்சியாகச் சிரிப்பது, கேலி செய்வது).

உ. வசனம் 29. "...இப்பொழுதும் நடந்துவருகிறது" வேதாகம சரித்திரத்தில், எவ்வாறு இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம் செய்தானோ, அவ்வாறாகவே, ஆகாருடைய பிள்ளைகளாகிய யூதமத கிறிஸ்தவர்கள், பவுல் நிர்மாணித்த சபைகளிலுள்ள புறஜாதிகளான விசுவாசிகளை பரியாசம் செய்கின்றனர். (இகழ்ச்சியாக சிரிப்பது, கேலி செய்வது) (அப்போஸ்தலர் 13:50; 14:2-5, 19; 1 தெசலோனிக்கேயர் 2:14-16)

ஊ. வசனம் 30 "அதைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது? அடிமையானவளின் மகன், சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை. ஆகையால் அடிமையானவனையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு." ஆதியாகமத்தில் விவரிக்கப்பட்ட பாகத்தில், இஸ்மவேலைக் குறித்து சாராள் இதில் சொல்லப்பட்டபடியே சிறிதும் மாறாமல் கூறுகிறாள். (ஆதியாகமம் 21:10) இந்த ஒப்புவமையின் மூலமாக, கலாத்தியர், சபையிலுள்ள விசுவாசிகள் யூதமத கிறிஸ்தவர்களை புறம்பே தள்ளவேண்டும் என்று பவுல் கூறுகிறார்!

எ. இதற்குரிய காரணம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது! எவ்வாறு இஸ்மவேல், ஈசாக்குடன் சேர்ந்து அவனுக்குச் சொந்தமான சுதந்திரத்தில் பங்குகொள்ள முடியாதோ, அவ்வாறே யூதமத கிறிஸ்தவர்களும் (சட்டரீதியான மத சடங்காச்சாரங்களை அவர்களைப் பின்பற்றி கைக்கொள்ளுகிறார்கள்) ஆபிரகாமுடைய ஆசீர்வாதங்களில் பங்கு கொள்ளமுடியாது, ஏனெனில் அவர்கள் அவனுடைய குமாரர்கள் அல்ல:

1. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக மட்டும் நீதிமான்களாக்கப்படுவது.

2. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவது மற்றும், இவ்வாறு நீதிமான்களாக்கப்படுகிறவர்களின் மத்தியில் வெளிப்படுத்தப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள்! (கலாத்தியர் 13:2,5,14)

3. மற்றும் இவர்கள் வானலோக எருசலேமின் குடிமக்கள் அல்ல! இயேசு இவ்வாறு கூறினார்: "அவர்கள் ஆபிரகாமின் குமாரர்களாக இல்லாதிருப்பார்களானால், அவர்கள் பிசாசின் பிள்ளைகளாக இருக்கிறார்கள்." (யோவான் 8:31-47) ஆகவே அவர்களையும், அவர்களுடைய பொய்ப்போதனைகளையும் விட்டு விலகுங்கள்.

ஏ. வசனம் 31 "இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்." இது, 4:21-30 வசனங்களில் கூறப்பட்ட விளக்கத்திற்குரிய சுருக்கத் தொகுப்பாக இருக்கிறது. கிறிஸ்துவில் மட்டும் வைக்கும் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுவதில், தொடர்ந்து நிலைத்திருப்பவர்கள், (ஒப்புவமைப்படிக் கூறுவோமானால்) சுயாதீனமுள்ளவளாகிய சாராளுடைய பிள்ளைகளாக இருப்போம்.

ஆகாரும், சாராளும் மற்றும் அவர்களுடைய குமாரர்களும்

கலாத்தியர் 4:21-31

முடிவுரை

அ. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்குத் தங்களை கட்டுப்படுத்திக் கொண்டவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுண்டவர்களும் அடிமைப்படுத்தப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். அவர்கள் ஆகாரின் பிள்ளைகள். இந்த மனிதர்களைப் பற்றி வருந்தத்தக்க காரியம் என்னவென்றால், இவர்கள், நியாயப்பிரமாணத்தின் நீதியான கட்டளைகளை முற்றிலுமாக ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. இக்காரணத்தினால், இவர்கள் தேவனுக்கு முன்பாக ஒருபோதும் நீதிமான்களாக முடியாது. ஆகவே, பாவம் மற்றும் எதிர்த்து நின்றதின் விளைவுகளை அனுபவிப்பார்கள்.

ஆ. அடுத்த பக்கம் பார்ப்போமானால், "கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் மட்டும் இரட்சிப்பு" என்ற புதிய உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டவர்கள், ஆவிக்குரிய சுயாதீனத்தைக் கண்டடைகிறார்கள். இவர்கள் சாராளுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய அதிசயமான காரியம் என்னவென்றால், இவர்கள் ஆபிரகாமின் குமாரர்களும், சுதந்தரவாளிகளுமாகிறார்கள். (ஈசாக்கைப் போல) மற்றும், இப்பொழுது, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மற்றும் அற்புதங்கள் முதலிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், முடிவில் பரலோக எருசலேமில் நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்

கலாத்தியர் 5:1-15

முன்னுரை

அ. பவுல், அவருடைய நிருபத்தில், இந்தக் குறிப்புவரை, கீழ்க்கண்ட கருத்துக்களை தீவிரமாக ஆதரிக்கிறார்:

1. அவருடைய அப்போஸ்தல சீடத்துவம் மற்றும் அவருடைய சுவிசேஷத்தின் மூலாதாரம், (1:11-2:21)

2. மற்றும் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் நீதிமானாக்கப்படல். (3:1-4:31)

ஆ. ஐந்தாம் அதிகாரத்தில், கூடுதலாக வேறு இரண்டு முக்கிய கருத்துப் பொருள்களை மையத்தைச்சுற்றி அவருடைய விவாதம் தொடர்கிறது.

1. கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்.

2. உள்ளாக வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலினால் ஜீவித்தல்.

இ. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு என்ற அவருடைய சுவிசேஷத்தை தகுந்தபடி பவுல் ஆதரிக்கப்போகிறார் என்றால், இவைகள் முற்றிலும் அவசியமாக இருக்கும். ஏனெனில் நியாயப் பிரமாணத்தால் இனிமேல் வழிநடத்தப்படாதவர்கள், எந்த விதமான சன்மார்க்கக் கட்டுப்பாடு அல்லது வழிகாட்டி இல்லாமல் விடப்பட்டவர்கள் போல் காணப்படுகிறது.

1. சட்டரீதிக்குட்பட்ட மதச் சடங்காச்சாரங்கள் மூலமாக நீதிமான்களாக்கப்பட முயற்சிப்பதினால் கிறிஸ்துவிலுள்ள சுதந்திரத்தை இழக்க நேரிடும். (5:1-6)

அ. வசனம் 1 "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்". "சுயாதீன நிலைமையிலே" என்பது சுவிசேஷத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் சன்மார்க்க சுயாதீனம் மற்றும் விடுதலையைக் குறிக்கும். "சுயாதீனம்" என்றால் விடுதலையாக்கப்படுவது, சன்மார்க்க கட்டளைகளைத் தவிர்த்து விடுவது, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் எதிர்பார்ப்புகள் மற்றும் அவைகளை அனுசரிப்பதிலிருந்து விடுதலை. இந்த நிருபத்தின், 3-5 அதிகாரங்களின் சுருக்கமே, இதின் அடிப்படை மற்றும் சட்டரீதியான மதவழிபாடுகளுக்கு அடியில் நம்மை மறுபடியும் வைக்க முயற்சிக்கிற யாவருக்கும் இது பதிலாக இருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

ஆ. வசனம் 1 "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல்...நிலைகொண்டிருங்கள்." "நிலைகொண்டிருங்கள்" என்றால், ஓரிடத்தில் அசையாமல் இருங்கள், இடம்பெயராமல் அப்படியே நில்லுங்கள் என்று பொருள்படும். விசுவாசிகள் அவர்களுடைய "கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதில் மட்டும் நீதிமான்களாக முடியும்" என்பதில், அசையாமல் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம், அல்லது மற்ற துறவறக் கொள்கைகள், அல்லது சட்டரீதியான சமய வழிபாடுகள், அல்லது விக்கிரக ஆராதனை ஆகிய இவைகளின் "அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்பட்டு", மறுபடியும் தங்களைத் தாங்களே பாரப்படுத்திக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்

கலாத்தியர் 5:1-15

(நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தின் நுகத்தின் கீழ்) நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று இயேசு கூறும்போது, இதே கருத்தை மறைமுகமாகக் குறிப்பிட்டுக் கூறுகிறார் (மத்தேயு 11:29-30; அப்போஸ்தலர் 15:10)

இ. வசனம் 2. "இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்". "பவுலாகிய என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்", என்று இன்று நாம் சொல்லுவோம். "ஒரு பிரயோஜனமுமிராது" என்றால் ஒன்றுமில்லை, ஒரு காரியம்கூட இல்லை, எதுவும் இல்லை என்று பொருள்படும். விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதினாலும், சட்டரீதியான வழிபாடுகள் அல்லது சடங்காச்சாரங்கள் செய்வதினாலும், தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக முயற்சிப்பவர்களுக்குக் கிறிஸ்து முற்றிலும் உதவி செய்ய முடியாது.

ஈ. வசனம் 3. "மேலும் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்". இது இரண்டாம் வசனத்தை மறுபடியும் உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் ஒரு புறஜாதியான கிறிஸ்தவன், விருத்தசேதனத்தை தெரிந்தெடுப்பதினால் ஏற்றுக் கொள்வதும், மத சடங்காச்சாரமாகச் செய்வதும், நியாயப்பிரமாணத்தை முழுமையாக, அவன் ஏற்றுக் கொள்வதை குறிப்பாக காட்டுகிறது. விருத்தசேதனம் முதன் முதலாக அனுசரிக்கப்படும் காரியமாக நோக்கப்படுகிறது.

உ. இந்த அணுகுமுறை, எல்லா பொய்யான மத வழிபாடுகளையும் ஒத்ததாக இருக்கிறது. அவர்களுடைய சட்டரீதியான சடங்காச்சாரங்கள் அல்லது கட்டளைகளில் ஏதாவது ஒன்றையாவது நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று அவர்கள் முயற்சிக்கிறார்கள் (இங்கு விருத்தசேதனம்). அவர்களை உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக ஆதாயம் செய்த பிறகு, அவர்களுடைய சடங்காச்சாரங்கள் மற்றும் அனுசரிக்க வேண்டிய காரியங்களை, நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று அறிமுகம் செய்கிறார்கள் (4:10)

ஊ. வசனம் 4. "நியாயப்பிரமாணத்தால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்". "பிரிந்து" என்பது கிறிஸ்துவுடன் கொண்டிருந்த உங்களுடைய விசுவாசத்தொடர்பு, பூரணமாக உங்களுக்குப் பயனற்றதாகிவிட்டது; தேவனுக்கு முன்பாக நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டது, முற்றிலுமாக நீக்கப்பட்டு, அழிக்கப்பட்டது; அது மறைந்து ஒழிந்து போயிற்று; அது இழக்கப்பட்டுவிட்டது என்று பொருள்படும்.

எ. மற்றும் "கிருபையினின்று விழுந்தீர்கள்", என்றால் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதை உங்களுடைய சொந்த தெரிந்து கொள்ளுதல் மூலமாக, ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டீர்கள்; நீங்கள் வழியை தவறிவிட்டீர்கள் என்று பொருள்படும். இது ஒரு முடிவு வளையத்திற்குள் இருக்கும் நோக்கத்துடன் இந்த வாக்கியம் இருக்கிறது! (2:21) "...யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்". (யோசுவா 24:15) என்ற அழைப்பின் காலம் கடந்து சென்று விட்டது. கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக,

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்

கலாத்தியர் 5:1-15

நியாயப்பிரமாணத்தைப் பின்பற்ற, கலாத்தியாவிலுள்ள விசுவாசிகள் தெரிந்து கொண்டனர். இதன் விளைவு நாசத்தில் முடியும். (யோவான் 15:4-6; 2பேதுரு 2:20-22). ஒருநபர் இரு வழிகளைக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் தகாதவர்களாயிருக்கிறார்கள்!

ஏ. வசனம் 5. "நாங்களோ நீதி கிடைக்குமென்று, ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால், நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்". பவுலுடைய சுவிசேஷத்தின் மையமாக விளங்கும் மூன்று வார்த்தைகள் எல்லாம் இந்த வசனத்தில் இருக்கிறது: விசுவாசம் (பரிசுத்த) ஆவி, நீதி (நியாயந்தீர்க்கப்படுவது) (விசுவாசிகளாகிய) நாம்:

1. விசுவாசத்தால் - மாம்சத்தின் கிரியைகளுக்கு நேர்மாறாக; நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறோம்.

2. ஆவியைக் கொண்டு.... நம்பிக்கையோடே காத்திருக்கிறோம் - நாம் அதற்காகக் கிரியைகளை நடப்பிப்பதில்லை; நாம் அதற்காக காத்திருக்கிறோம். உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் வல்லமையினாலும், பலத்தாலும் நாம் காத்திருக்க (கிறிஸ்துவின் வருகை மற்றும் நாம் நீதிமான்களென்று தீர்க்கப்பட) முடிகிறது. இந்த நம்பிக்கை புத்துயிர் பெற்று நிலைத்திருக்கும்படி அவர் காத்துக் கொள்ளுகிறார்.

3. நீதி - இதற்காகவே நாம் நம்பிக்கையோடு விசுவாசத்துடன் காத்திருக்கிறோம். சபையை மேகங்களுக்கு மேலாக மகிமையோடே எடுத்துக் கொள்ள கிறிஸ்து தோன்றும் போது நாம் நீதிமான்களென்று தீர்க்கப்படுவதை இது குறிப்பிடுகிறது (ரோமர் 2:12-16)

4. "நம்பிக்கையோடே" - இது நிறைவேற்றப்படும் என்று நாம் நிச்சயமாயிருக்கிறோம். ஆனால் அதை இன்னும் பூரணமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. (எபிரெயர் 11:1) தற்போது கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுவதில் தொடர்ந்து நிலைத்திருப்பவர்கள், கிறிஸ்து தோன்றும்போது, தீர்ப்பளிக்கப்பட்டு, நீதிமான்களென்று அறிவிக்கப்படுவது நிச்சயம்.

ஐ. வசனம் 6. "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்". தேவனுடைய சித்தத்தின்படி செய்கிற ஒருவனுக்கு விருத்தசேதனமோ, விருத்தசேதன மில்லாமையோ எதுவொன்றும் செய்வதற்கில்லை. (கிறிஸ்துவுக்குள் இருப்பது - கலாத்தியர் 6:15; 1கொரிந்தியர் 7:19; மற்றும் கொலோசெயர் 3:11). அது உபயோக மற்றதும், எந்த ஒரு பலனையும் உண்டாக்குவதற்குக் கூடாததுமாயிருக்கிறது. அது ஒன்றுக்கும் உதாவது!

ஓ. ஆகிலும் எண்ணப்படவேண்டியது (முக்கியமாகக் கருதவேண்டியது) என்னவென்றால்,

1. விசுவாசம் - (சார்ந்திருத்தல்) தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது.

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்
கலாத்தியர் 5:1-15

2. அன்பினால் கிரியைசெய்கிற - விசுவாசத்தின் கனி அன்பு, அன்பின் கிரியைகள், சுரிசனை மற்றும் தியாகம் ஆகியவைகள், கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்களின் குணநலப் பண்புகளாக இருக்கிறது. இவைகள் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் வெளிப்படும் பண்புகளாயிருக்கிறது (1தெசலோனிக்கேயர் 1:3; யாக்கோபு 2:22)

2. பொய் போதகங்களுக்கு செவிசாய்ப்பது கிறிஸ்துவுக்குள் இருக்கும் சுயாதீனத்தை ஆபத்துக்குள்ளாக்கும் (5:7-12)

அ. வசனம் 7. "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்?". பவுல் அநேக சந்தர்ப்பங்களில், கிறிஸ்தவ வாழ்க்கையை விளையாட்டுப் போட்டிக்கு ஒப்பிட்டு விவரிக்கிறார் (1கொரிந்தியர் 9:24-27; கலாத்தியர் 2:2; பிலிப்பியர் 3:13-14; 2தீமோத்தேயு 4:7) இந்தச் சந்தர்ப்பத்தில் கலாத்தியர்கள் பந்தய ஓட்டத்தை ஆரம்பித்ததுமட்டும் அல்லாமல், நன்றாகவும் ஓடியதாக அவர் விளக்குகிறார். ஆனால் யாரோ ஒருவர் (பொய் போதகர்கள் - யூதமத கிறிஸ்தவர்கள்). அவர்கள் குறுக்கே பாய்ந்து (அவர்கள் இடறி விழும்படி செய்தனர்). அவர்கள் பந்தயத்தில் வெற்றி பெறுவதிலிருந்தும், பரிசைபெற்றுக் கொள்வதிலிருந்தும் (நித்திய ஜீவன்) இடறப்பட்டு தடுத்துவிட்டனர்.

ஆ. "சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக" என்பது "கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் வைப்பதால் இரட்சிப்பு" என்ற உண்மையான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்திருப்பது (தொடர்ந்து அதின்மீது சார்ந்திருப்பது நம்பிக்கை வைப்பது).

இ. வசனம் 8. "இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல". விசுவாசத்தால் உண்டான சுவிசேஷத்தைத் தள்ளிவிடும்படி வற்புறுத்தப்பட்டு, சட்டரீதியான மத சடங்காச்சார வழிபாடுகளுக்குத் திரும்பும்படியாக, கலாத்திய விசுவாசிகளை முதலில் அழைத்தவராகிய தேவனிடமிருந்து வரவில்லை (கலாத்தியர் 1:6; 1தெசலோனிக்கேயர் 2:12; 1பேதுரு 1:15; ரோமர் 8:28; 1கொரிந்தியர் 1:9) அவர்கள் பகைஞர்களின் சக்திகளாகிய சாத்தானால் வற்புறுத்தப்பட்டார்கள் (கலாத்தியர் 1:7; 1தீமோத்தேயு 4:1; யோவான் 8:44)

ஈ. வசனம் 9. "புளிப்புள்ள கொஞ்ச மாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப் பண்ணும்". எருசலேமிலிருந்து வந்த பொய் போதகர்களின் செல்வாக்கு எதிர்த்து சவால்விடப்படாவிட்டால், எல்லா கலாத்திய விசுவாசிகளும், நீதிமான்களாக்கப்படுவதற்கு, சட்டரீதியான மதவழிபாடுகளுக்குத் திரும்பிச் செல்லுமாறு, படிப்படியாக வசீகரிக்கப்படுவார்கள் (1கொரிந்தியர் 5:6; மத்தேயு 16:6,12).

உ. வசனம் 10. "உங்களைக் கலக்குகிறவன்....தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்" வசனம் 10, பவுல் உண்மையில் இரண்டு காரியங்களைக் கூறுகிறார்:

1. கலாத்தியர்கள், அவர்களுடைய தெளிந்த புத்திக்கு வந்து, அவர்களுக்கு பொல்லாத வழிகளைக் காண்பார்கள் என்று அவர் உறுதியாயிருந்தார்.

2. எருசலேமிலிருந்து வந்த யூத கிறிஸ்தவர்கள், அவர்களுடைய வஞ்சகமான மற்றும் பொய்யான போதனைகளுக்காக,

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்
கலாத்தியர் 5:1-15

தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்படுவதின் மூலமாக, முடிவில் அதற்கான கிரயத்தைச் செலுத்துவார்கள் (ரோமர் 12:19).

ஊ. வசனம் 11. "சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்?.... பவுலின்மேல் கொண்டுவரப்பட்ட சில குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறுவதுபோல் மட்டுமே இந்தக் கருத்திற்கு விளக்கம் கூறமுடியும். யூத கிறிஸ்தவர்கள் கலாத்தியர்களிடம், "பவுல், விருத்தசேதனத்தைப் பற்றி இன்னமும் பிரசங்கித்து வருகிறார்", என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவருடைய மனந்திரும்புதலுக்குமுன், பவுல் ஒரு தீவிரமான பரிசேயனாக இருந்து, விருத்தசேதனத்தைக் குறித்தும், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை எல்லாம் அனுசரிக்க வேண்டும் என்றும், மிகுந்த ஆர்வத்துடன் பிரசங்கம் செய்திருக்கக் கூடும். ஆனால் அவருடைய தமஸ்கு சாலை அனுபவத்திற்குப் பின் (அப்போஸ்தலர் 9:3-6; கலாத்தியர் 1:10-12). அவ்வாறு இல்லை. இக்காரணத்தினால் ஊருக்கு ஊர் அவரைப் பின் தொடர்ந்த எருசலேமிலிருந்து வந்த யூத கிறிஸ்தவர்களால், அவர் இடைவிடாமல் துன்புறுத்தப்பட்டு வந்தார். (அப்போஸ்தலர் 13:50; 14:2-5,19; 1தெசலோனிக்கேயர் 2:14-16; கலாத்தியர் 2:4; 2கொரிந்தியர் 11:26)

எ. வசனம் 11. "....அப்படியானால் சிலுவையைப் பற்றி வரும் இடறல் ஒழிந்திருக்குமே". "இடறல்" என்றால், வருந்துவதற்கு அல்லது கோபப்படுவதற்குக் காரணமாக இருக்கும் காரியம், என்று பொருள்படும். யூத கிறிஸ்தவர்கள், "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு" என்ற பவுலுடைய சுவிசேஷத்தை மிகவும் வெறுத்து, அதைக்குறித்து எரிச்சலடைந்தார்கள். இரட்சிக்கப்பட, பழைய ஏற்பாட்டிலுள்ள யூதர்களின் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை அனுசரிப்பதையும், (விசேஷமாக விருத்தசேதனம்) சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அதிகாரத்துடன் கேட்டார்கள். பவுல், இன்னமும் விருத்தசேதனத்தைப் பிரசங்கிப்பவனாக இருந்தால், இந்த இடறல் ஒழிந்து போயிருக்கும் (இல்லாமல் இருந்திருக்கும், அது இனிமேலும் கிரியை செய்திருக்க முடியாது) மற்றும் பவுலும் அவர்களால் அதன்பிறகு உபத்திரவப்பட்டிருக்க முடியாது.

ஏ. வசனம் 12. " உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்". "கலக்குகிறவர்கள்" என்பது, எருசலேமிலிருந்து வந்த கள்ள சகோதரர்களும், யூத கிறிஸ்தவர்களும் "தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்" என்றால் அவர்கள் தங்களை விருத்தசேதனம் செய்து கொள்வது மட்டுமல்லாமல், முழுவதுமாக சேசமறுபட்டு, தங்களைத் தாங்களே அலிகளாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார் என்று பொருள்படும். யூதமதத்தில், இப்படிப்பட்ட காரியம் ஒரு நபரை, ஜெப ஆலயத்தின் சபை அங்கத்தினனாவதிலிருந்து தடைசெய்யும் (உபாகமம் 23:1)

ஐ. இன்று, ஆவிக்குரிய தலைவர்களும், மற்ற விசுவாசிகளும், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு என்ற சுவிசேஷத்தைப் பற்றி, பவுல் எவ்வளவு அக்கறையோடு இருந்தாரோ அவ்வளவுக்கு இருந்திருப்பார்களானால்,

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்

கலாத்தியர் 5:1-15

கள்ளப்போதகர்களைத் தீவிரமாக எதிர்த்து, விசுவாசிகளின் சபையிலிருந்து அவர்கள் விலக்கப்படுவதற்கு கவனத்துடன் கண்காணித்திருப்பார்கள்! ஒரு முழு கூட்டம் சிறிதளவு புளித்தமாவினால் தாக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது!

3. கிறிஸ்துவில் இருக்கும் சுயாதீனத்தை, பாவம் செய்வதற்கு அனுமதியளிக்கும் சீட்டுபோல் பயன்படுத்தக் கூடாது 5:13-15

அ. வசனம் 13. "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல்...." மறுபடியும், "சுயாதீனத்திற்கு" என்பது சன்மார்க்க காரியங்களில் சுயாதீனம் மற்றும் விடுதலை (நியாயப்பிரமாணத்திலிருந்து) இதை சுவிசேஷத்தை விசுவாசிப்பதின் மூலமாக நாம் பெற்றுக் கொள்கிறோம். (5:1). ஆகிலும் இந்த சுயாதீனம், மாம்ச இச்சைகளை (சன்மார்க்கத்தில் பலவீனமான மனிதசுபாவம் - ரோமர் 6:1-2; 1பேதுரு 2:16) அனுபவிப்பதற்காக (திருப்தி செய்வதற்காக) பயன்படுத்தக் கூடாது. (ஆரம்பம் செய்யக் காரணமான காரியமாக, ஒருதீரச் செயலைச் செய்முறைப்படுத்துவதற்கு அடிப்படைக் காரணமாக ஒரு நல்ல தருணமாக).

ஆ. 13. "....அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" "அன்பினாலே" என்றால் பாசத்துடன் இருப்பதை வெளிப்படுத்துவது, மற்றவர்கள் மீது இரக்கத்துடன் உதவிசெய்வது (தர்மம் செய்வது)என்று இங்கு பொருள்படும். "ஊழியஞ்செய்வது" என்றால் அடிமையைப் போல தொண்டுசெய்வது என்று பொருள்படும். பாவ சுபாவத்தின் இச்சைகளை திருப்தி செய்வதற்கு (பாவ சுபாவத்திற்கு அடிமைகளாயிராமல்) அல்ல, அன்பினால் ஏவப்பட்டு, ஒருவருக்கொருவர் அடிமைகளைப் போல வேலை செய்ய வேண்டும். "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (கலாத்தியர் 5:16) என்று அவர் கூறும்போது பவுல் இதே கருத்தை வெளிப்படுத்துகிறார்.

இ. வசனம் 14. நியாயப்பிரமாணம் முழுவதும் ஒரே ஒரு கட்டளையில் சுருக்கமாக இருக்கிறது: "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக;....". இதே கருத்து இயேசுவானவரால் அவருடைய போதனைகளில் கூறப்பட்டிருக்கிறது (மத்தேயு 22:39; இத்துடன் லேவியராகமம் 19:18; மத்தேயு 7:12; லூக்கா 10:25-28).

ஈ. வசனம் 15. "நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால், அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்". கலாத்தியாவில் சபைக்குள் நடந்த சண்டை ஒரு சமயம் கீழ்க்கண்ட இரண்டு காரியங்களினால் நேரிட்டிருக்கக் கூடும்:

1. எந்தச் சுவிசேஷத்தைப் பின்பற்றுவது என்பதில் விசுவாசிகளுக்கிடையே போராட்டம். பவுலுடைய சுவிசேஷம் அல்லது பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை (விசேஷமாக விருத்தசேதனம்) அனுசரிக்க வேண்டும் என்று அதிகாரத்துடன் கட்டளையிட்ட யூதமத கிறிஸ்தவர்களின் போதனைகள்.

கிறிஸ்துவில் இருக்கும் சுதந்திரம்

கலாத்தியர் 5:1-15

2. சட்ட ரீதியான மத சடங்காச்சார வழிபாடுகளின் மூலமாக நீதிமான்களென்று தீர்க்கப்படுவார்கள் என்ற கூற்றிலிருந்து சாதாரணமாக எழும்பின போராட்டம். சட்ட ரீதியான சமய வழிபாடுகளின் மூலமாக, தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதற்கு முயற்சிசெய்வது, சுயநீதியையும், போட்டியையும் உருவாக்கும். இது அடுத்தபடியாக மனிதர்கள் மற்றவர்களைக் குற்றம் கூறுவதிலும் அழிப்பதிலும் முடிவடையும். காரணமின்றி, கலாத்திய விசுவாசிகள், காட்டு மிருகக் கூட்டம் ஒன்றை மற்றொன்று பட்சிப்பதுபோலாகிவிட்டனர்!

முடிவுரை

அ. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டும் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாகும் விசுவாசிகள், சன்மார்க்கக் கட்டளைகளிலிருந்தும், பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின் கட்டளைகளிலிருந்தும் விடுவிக்கப்படுகின்றனர்.

ஆ. ஆகிலும் இந்த சுயாதீனம்,

1. சட்டரீதியான வழிபாடுகளின் மூலமாக நீதிமான்களாக முயற்சிக்கும் போது இழக்கப்பட ஏதுவுண்டு.

2. கள்ளப்போதகர்களுக்கும், போதனைகளுக்கும் செவிசாய்க்கும்போது ஆபத்தான நிலையை அடைவார்கள்.

3. இதை பாவம் செய்வதற்கு ஒரு அனுமதி சீட்டு போல் பயன்படுத்தக் கூடாது (பாவ சுபாவத்தின் இச்சைகளை திருப்திபடுத்த).

உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் ஜீவித்தல் கலாத்தியர் 5:16-26

முன்னுரை

அ. கலாத்தியாவிலுள்ள அநேக விசுவாசிகள், அந்தப் பட்டணத்திற்கு பவுலுடைய ஊழியத்தில் அவனைப் பின்தொடர்ந்து வந்த யூத கிறிஸ்தவர்களால் (யூதமதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மனந்திரும்பியவர்கள்) கலக்கமடைந்தனர்.

இரட்சிக்கப்பட, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதுடன், மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள எல்லா கட்டளைகளையும் கைக்கொள்ளப்படுவதும் (விசேஷமாக விருத்தசேதனம்) சேர்க்கப்படவேண்டும் என்று அதிகாரத்துடன் உரிமை கொண்டாடினார்கள்.

பழைய ஏற்பாட்டிலுள்ள நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைக் கைக்கொள்ளுவதைத் தவிர்த்து, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு என்று பவுல் விவாதித்தார்.

ஆ. இதன் பலனாக, பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் காலம் ஒரு முடிவுக்கு வந்து விட்டது என்று போதித்தார். இப்பொழுது கிறிஸ்தவர்கள் உள்ளாக வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்களைப் பின்பற்ற வேண்டும். எனவே இவர்கள் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள். ஆனால் இது ஒரு பிரச்சனைக்கு வழிநடத்தியது. சிலர் பாவ சுபாவத்தின் இச்சைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்ற, மறுபடியும் தங்களுக்கு இது சுதந்திரம் கொடுத்துவிட்டதாக நினைத்தனர். இந்தத் தவறையும், அவ்வாறே திருத்தவேண்டியது அவசியம் என்று இப்பொழுது பவுல் கண்டு கொண்டார் (கலாத்தியர் 5:13).

1. உள்ளாகவாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலின் படி ஜீவிக்கிறவர்கள், பாவசுபாவத்தின் இச்சைகளை திருப்திபடுத்தமாட்டார்கள் (5:16-18)

அ. வசனம் 16. "பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால் ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்" உள்ளாக வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர், உன்னை என்ன செய்யும்படி தூண்டுகிறாரோ, எதைச் செய்ய பெலன் கொடுக்கிறாரோ, அவைகளையே வழக்கமாகத் தொடர்ந்து செய்யுங்கள். இதுவே பாவசுபாவத்தின் இச்சைகளுக்கு மேலாக ஜீவிப்பதற்கு திறவுகோலாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதற்கும், நேசிப்பதற்கும் இதுதான் திறவுகோல். ஒருவரையொருவர் கடித்து, பட்சித்து அழிப்பதிலிருந்து நம்மைத் தப்புவிப்பதற்கும் இதுவே வழியாக இருக்கிறது (5:15)

ஆ. "....நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனை...அனுப்பி....ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" (ரோமர் 8:2-4). ஆகவே நாம் ஆவியைப் பின்பற்றினால் ஒருவரையொருவர் நேசித்து, ஒருவரையொருவர் துக்கப்படுத்துவதை நிறுத்தி, தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழுவோம்!

இ. வசனம் 17. "மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது....இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது". நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன் பரம்பரையாக ஆதாமிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட பாவசுபாவம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது.

உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் ஜீவித்தல்
கலாத்தியர் 5:16-26

ஆனால் பிறகு பரிசுத்த ஆவியானவர், நாம் செய்ய விரும்புகிற காரியங்களுக்கு நேர்மாறானவைகளைச் (எதிரான) செய்யும்படி அதிகாரத்துடன் கட்டளையிடுகிறார்.

ஈ. ஆகவே நமக்குள் இடைவிடாத போராட்டம் மூர்க்கமாக நடந்து கொண்டிருக்கிறது. இது நம்முடைய பாவசுபாவம் நாம் செய்யும்படி விரும்புகிறதற்கும், என்ன செய்ய வேண்டும் என்று நாம் அறிந்ததற்கும் இடையே நடைபெறுகிறது. ஆனால் பாவ சுபாவம் எப்பொழுதும் வெற்றி பெறுகிறது. அது நம்மை செய்யும்படி கூறுகிறதை நாம் எப்பொழுதும் செய்கிறோம் (ரோமர் 7:15-23).

உ. வசனம் 18. "ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல". இரட்சிக்கப்படுவதற்கு முன்பு, நாம் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் இருந்தோம். நாம் பாவம் செய்து கொண்டிருந்தோம் என்றும், பாவத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், ஆவிக்குரிய மரணத்தை நாம் அனுபவிப்போம் என்றும் அது நமக்குக் கூறுகிறது. ஆனால் நம்முடைய பாவசுபாவத்திலிருந்து நம்மை விடுதலை செய்ய பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு வல்லமை இல்லை. ஆகிலும் நாம் இயேசுவில் விசுவாசம் வைத்த மாத்திரத்தில் நாம் இனிமேல் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்களல்ல.

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்ய வந்து, நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்ய துவங்குகிறார் (ரோமர் 8:9; 1கொரிந்தியர் 12:13; யோவான் 14:17-18) மற்றும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைப் போல் இல்லாமல் அவர் நம்மை என்ன செய்யவேண்டுமென்று கூறுகிறாரோ அதைச் செய்வதற்கு வேண்டிய வல்லமையையும் நமக்குக் கொடுக்கிறார் (தீத்து 2:11-12; ரோமர் 8:4)

ஊ. இது மேற்பார்வையிடுவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் மற்றொரு நபரிடம் அல்லது வேறு யாராவது ஒருவரிடம் மாறுதல் செய்தது போல் இது இருக்கிறது. "பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணம்", நம்மைப் பரிசுத்த ஆவியானவரிடம் கொடுத்து, "நீர் இவனை எடுத்துக் கொள்ளும். அநேக வருடங்கள் நான் இவனிடம் கிரியை செய்திருக்கிறேன்; நான் செய்யும்படி அவனிடம் கூறியவைகளை அவன் ஒருபோதும் ஒருமுறை கூட செய்ததில்லை", என்று கூறுகிறது! (ரோமர் 7:15, 18-19). ஒரு மோசமான பிள்ளையை ஒரு ஆசிரியர் ஒரு புதிய ஆசிரியரிடம் ஒப்படைப்பது போல் இது இருக்கிறது! ஆனால் அந்த புதிய ஆசிரியர் அவனைப் பெற்றுக் கொண்ட பின் அவன், ஒரு புதிய மேலானவனாக மாறுகிறான். (கலாத்தியர் 23:24-25)

எ. "அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைபிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல....நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி...." (எரேமியா 31:31,33) என்று எரேமியா கூறும் போது, நாம் பரிசுத்த ஆவியானவரால் நிர்வகிக்கப்பட்டு அவருடைய வல்லமையினால் பெலப்படுத்தப்பட்டு ஜீவிப்பதையே சுட்டிக் காட்டுகிறார். நாம் இனிமேல் நியாயப்பிரமாணத்தின் அதிகாரத்தின் கீழ் இல்லை. பரிசுத்த ஆவியானவரே இப்பொழுது நம்முடைய ஆசிரியர்!

உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் ஜீவித்தல் கலாத்தியர் 5:16-26

ஏ. பரிசுத்த ஆவியானவரே நமக்குள்ளாக இருந்து, நம்மை மேற்பார்வையிட்டு, பயிற்றுவித்து, நாம் செய்யும்படி அவர் என்ன கூறுகிறாரோ அதைச் செய்வதற்கு, நம்மை அவருடைய வல்லமையினால் பலப்படுத்துகிறார். ஆகவே, நாம் இனிமேல், நம்முடைய பாவசுபாவத்தின் விருப்பங்களை திருப்திசெய்ய மாட்டோம். *(ரோமர் 7:24-25; 8:6-9)* நாம் இனிமேல், ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்து, அழிக்கமாட்டோம்.

2. உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்களின்படி ஜீவிக்கிறவர்கள், ஆவியின் கனியை வெளிப்படுத்துவார்கள். (5:19-23)

அ. வசனம் 19-21. "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன ----." அவர்களுடைய பாவ சுபாவத்தால் ஆளுகை செய்யப்படுகிறர்களைக் கண்டுகொள்வது மிக எளிதாக இருக்கும். அவர்கள்,

1. பாலின துன்மார்க்கப் பாவத்தைச் செய்வார்கள்.

2. இயற்கைக்கு மாறான பாலின இச்சைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த ஆவலுடையவர்களாயிருப்பார்கள்.

3. விக்கிரக ஆராதனை செய்வார்கள்.

4. மந்திரக்கலைகள், மாயாஜாலம் மற்றும் மாயவசீகரசக்தி ஆகியவைகளில் ஈடுபடுவார்கள்.

5. இருதயத்தில் பகையுணர்வுடன் இருப்பார்கள்.

6. எரிச்சலுள்ளவர்களாகவும், மற்றவர்கள் மீது பொறாமைப்படுகிறவர்களாகவும் இருப்பார்கள்.

7. தன்னயமுடையவர்களாயிருப்பர்.

8. கோபாவேசம் கொள்ளுகிறவர்களாக இருப்பார்கள். சுயநலமாக, பேராசையுடன் அரசாங்க உயர்பதவிகளையும், தலைமை இடங்களையும் தேடுவார்கள்.

9. பிரிவினைகளையும், சண்டைகளையும் கலகங்களையும் உண்டாக்குவார்கள்.

10. குடித்து, காட்டுமிராண்டித்தனமாக களியாட்டுகளுடன் விருந்துண்பார்கள்.

ஆ. அவர்களுடைய பாவசுபாவத்தினால் ஆளுகை செய்யப்படுகிறவர்களைக் கண்டுகொள்ள மேலும் இதுபோன்ற வேறு பல துன்மார்க்கக் கிரியைகளின் அட்டவணை புதிய ஏற்பாட்டிலுள்ள மற்ற புத்தகங்களில் இருக்கிறது.

இ. பாவசுபாவத்தின் அதிகாரத்திற்குள் இருப்பவர்கள், இக்காரியங்களைத் தொடர்ந்து வழக்கமாகச் செய்வார்கள்; மற்றும், தேவனுடைய மன்னிப்பின் கிருபையைத் தேடவேண்டுமென்ற அவசியத்தையும், தங்களுடைய நடத்தையை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் உணரமாட்டார்கள்!

ஈ. வசனம் 21. "---- முன்னே நான் சொன்னதுபோல, இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்." பவுல், உண்மையாக மற்றொரு சந்தர்ப்பத்தில், இக்காரியங்களைக்குறித்து கலாத்தியாவிலுள்ள விசுவாசிகளை எச்சரிக்கை செய்திருந்தார். இக்காரியங்களை வழக்கமாகத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:

உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் ஜீவித்தல் கலாத்தியர் 5:16-26

1. கிறிஸ்துவை ஒருபோதும் அறியாமலும், அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணாமலும், அவர்களுடைய நடத்தைகளைக் கட்டுப்படுத்தாமலும் இருப்பவர்கள்.

2. கிறிஸ்துவை அறிந்திருந்து, ஆனால் மறுபடியும் இந்த தேவபயமற்ற நடக்கைகளில் ஈடுபட்டவர்கள். இந்த இரண்டு வகையில், அவர்கள் எந்த வகைப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் மனந்திரும்பி, கிறிஸ்துவின் பக்கம் வராவிட்டால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க மாட்டார்கள். (காலத்தின் முடிவில், கிறிஸ்து மற்றும் பிதாவினால் ஆட்சி செய்யப்படும் இராஜ்ஜியம்)

உ. வசனம் 22-23. "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம் ----." ஆகிலும் பாவசுபாவத்தின் அதிகாரத்திற்குட்பட்டவர்களுக்கும், பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்திற்குட்பட்டவர்களுக்கும் இடையே, தெளிவான வேறுபாடு இருக்கிறது. உள்ளாக வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரோடு அடியெடுத்துவைத்து நடப்பவர்கள், அதிகம் அதிகமாய் அவருடைய ஆளுமைப்பண்புகளைப் பிரதிபலித்துக் காட்டுவார்கள். மற்றவர்களோடுள்ள அவர்களுடைய தொடர்புகளிலும், அவர்கள் அதிகமதிகமாய், அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், ஆகியவற்றை வெளிப்படுத்துவார்கள். (2 பேதுரு 1:5-11; 2 கொரிந்தியர் 3:18)

நாம் கிறிஸ்துவுக்குள் வளர்ந்தோங்கவேண்டும், கிறிஸ்தவ குழந்தைகளைப்போல இனி ஒருபோதும் நடிக்கக்கூடாது.

ஊ. வசனம் 23. "---- இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை." இந்த விதமான நடத்தை, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளிலுள்ள நீதியிலும் மேலானதாக இருக்கிறது. உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து நடப்பவர்களுக்காக, நியாயப்பிரமாணம் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தெய்வீக வல்லமையினால், தேவபக்தியும், நீதியுமுள்ள வாழ்க்கை வாழுகிறார்கள். அது, அவர்களுடைய வாழ்க்கையில் கீழ்க்கண்டவற்றை வெளிப்படுத்த அவசியமுள்ள, அநீதிமான்களுக்காகக் கொடுக்கப்பட்டது:

1. அவர்களுடைய பாவவழிகளை முழுவதும் வெளிப்படுத்த தேவனுக்கு விரோதமான அவர்களுடைய பகைமையை உணர்த்த. (1 தீமோத்தேயு 1:9-10; ரோமர் 5:20; 7:7)

2. இரட்சிக்கப்படவேண்டுமென்ற அவர்களுடைய தேவையை வெளிப்படுத்த.

3. கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க நம்பிக்கையோடே அவர்களை வழிநடத்த.

3. உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல்களின்படி வாழ்க்கை நடத்துபவர்கள்; பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்து வைப்பார்கள். (5:24-26)

அ. வசனம் 24. "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்." "சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்," என்றால்

உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் ஜீவித்தல் கலாத்தியர் 5:16-26

மரணத்திற்குட்படுத்திபிருக்கிறார்கள், என்று பொருள்படும். ஆவியினால், சரீரத்தின் பொல்லாத செய்கைகளை (நாம்) மரணத்திற்குட்படுத்துகிறோம். (ரோமர் 8:13) கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் பாவசுபாவத்தை மரணத்திற்குட்படுத்துகிறார்கள். (அதை சக்தியற்றதாக்குகிறார்கள்) "உன் கை --- கால், உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு ---- உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு." என்று இயேசு கூறும்போது இப்பொருள்படவே அவர் சொல்லுகிறார். (மாற்கு 9:43-47)

ஆ. வசனம் 24. "அதின் ஆசை இச்சைகளையும்" பாவசுபாவத்தின் இச்சை மற்றும் ஆசைகளின் அட்டவணை, வசனம் 19-21வசனங்களின் விளக்கக் குறிப்புகளிலும் நாம் அங்கே கூறிய புதிய ஏற்பாட்டு வேதவசனங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இ. வசனம் 25. "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்." "ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்," என்றால், "ஆவியானவரோடு சேர்ந்து அடியெடுத்துவைத்து நடப்பது" என்று பொருள்படும்.

இது ஒரு இராணுவச் சொற்தொடர். இது கீழ்க்கண்டவாறு பொருள்படும்:

1. படையின் பவனியில் வரும்போது கிரமமாய்க் காலடிபோட்டு நேர்கோட்டில் நட,

2. கட்டளைகளையிடும் தலைவருடன் அடியெடுத்துவைத்து நட.

ஈ. உள்ளாக வாசம்செய்யும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலின்படி நாம் ஜீவிப்பதினால், நாம்:

1. அவருக்கு அடுத்தபடி நேர்பின்னால் நடந்து கொண்டிருக்கிறோம்.

2. அவர் செல்லும் அதே நேர்கோட்டுப் பாதையில் நடந்துகொண்டிருக்கிறோம்.

3. அவருடன் சேர்ந்து அடியெடுத்துவைக்கிறோம்.

4. அவருடைய, அதே நீதிநெறிப் பண்புகள் நமக்கும் உள்ளது.

5. அவருடைய அதே வாழ்க்கை நடை நமக்கும் இருக்கிறது.

உ. வசனம் 26. "ஒருவரையொருவர் --- பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம்." நாம் பரிசுத்த ஆவியானவரோடு அடியெடுத்துவைத்து நடக்கிறவர்களாயிருக்கிறபடியினால், நாம்

1. தற்பெருமையுள்ளவர்களாக மாட்டோம் - ஆடம்பரம் மற்றும் கர்வம் கொள்ள மாட்டோம்.

2. ஒருவரையொருவர் கோபமூட்ட மாட்டோம் அவர்கள் கோபப்படும் அளவிற்கு எரிச்சல் மூட்டுவது.

3. ஒருவர்மேல் ஒருவர் பொறாமைப்பட மாட்டோம் - மற்றொருவருக்கு சிறப்பான அனுகூலங்கள் அல்லது ஊழியங்கள் இருப்பதினால் ஆத்திரமடைவது, அவர்கள் மீது பொறாமைப்படுவது.

உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் ஜீவித்தல்
கலாத்தியர் 5:16-26

முடிவுரை

அ. உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்களின்படி ஜீவிப்பவர்கள்:

1. பாவசுபாவத்தின் ஆசைகளை திருப்திசெய்யமாட்டார்கள்.

2. ஆவியின் கனிகளை வெளிப்படுத்துவார்கள்.

3. ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து படை பவனிசெல்வதுபோல், கிரமமாக நேர்கோட்டில் நடப்பார்கள்.

ஆ. தங்களுடைய பாவசுபாவத்தின்மேல் வல்லமையை ஒருபோதும் பெற்றிராத சிலராக நீங்கள் இருக்கலாம். நீங்கள், பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து கிரமமாக நடக்க முடியாது. ஆனால், நீங்கள் கிறிஸ்துவையும், உங்களுடைய பாவங்களுக்காக, அவருடைய மன்னிப்பையும் தேடுவீர்களானால், எல்லாம் இன்றே மாறிவிடும்.

இ. அல்லது, கர்த்தரைவிட்டு விலகி நடந்து சென்றதினால், உங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தல் இனி ஒருபோதும் இராமல்போன சிலர் கர்த்தரிடம் திரும்பிவந்து, ஆவியானவரால் மறுபடியும் ஆளுகை செய்யப்பட விரும்ப வேண்டும்.

ஆவியானவருடன் சேர்ந்து அடியெடுத்து வைத்து நடக்கும் வாழ்க்கைக்கு செயல்முறை சார்ந்த உதாரணங்கள்

கலாத்தியர் 6:1-10

முன்னுரை

அ. விசுவாசிகள், தங்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து ஜீவிக்கிறார்கள் என்பதே ஐந்தாம் அதிகாரத்தின் முடிவுரை. இந்த முடிவான அதிகாரத்தில், இவ்விதமான வாழ்க்கை வாழுவதென்றால் என்ன என்பதற்கு, பவுல் நமக்கு உதாரணங்கள் தருகிறார்.

1. பாவிகளை மீட்பதும், மற்றவர்கள் பாரத்தை சுமப்பதும், ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து நடப்பதற்கு, செயல்முறை சார்ந்த உதாரணங்கள் (6:1-5)

அ. வசனம் 1. "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச்சீர்பொருந்தப்பண்ணுங்கள் ----." "குற்றத்தில் அகப்பட்டால்" என்றால், ஒரு நபர் தவறி (வழக்கமாக இல்லாமல், கணமாத்திரத்தில்) மீறுதலுக்குட்படுவது என்று பொருள்படும். மற்றொருவரிடம் நடத்தையில் தவறு கண்டுபிடிக்கப்பட்டால், என்றும் பொருள்படும். எப்படியிருப்பினும் வாழ்க்கையும் நடத்தையும் ஆவியானவரால் ஆளுகை செய்யப்படும். ஆவியில் அதிக முதிர்ச்சியடைந்த ஒருவர், அந்த நபர் மறுவாழ்வடையும்படி செய்யவேண்டும். (யாக்கோபு 5:19-20)

ஆ. "சீர்பொருந்தப்பண்ணுங்கள்," என்றால் உடைந்த எலும்பை சரியான நிலையில்வை, கிழிந்த மீன்வலையை பழுதுபார், அபிப்பிராய போதகங்கள் நிறைந்த கலக்கக் கூட்டத்தை ஒன்றுசேர், மறுபடியும் சீரான நிலைக்குக் கொண்டுவா, என்று பொருள்படும். "சாந்தமுள்ள" என்றால், தாழ்மையுடன் இரக்கமாக இருப்பது என்று பொருள்படும். இது, ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் நேர்மையான குணநலப்பண்பாகவும், ஆவியின் கனியில் ஒன்றாகவும் இருக்கிறது. (கலாத்தியர் 5:23)

இ. வசனம் 1. "----நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு." "எச்சரிக்கையாயிரு" என்றால் கருத்துடன் கவனி, மிக அருகில் இருந்து நோக்கிப்பார், உன் பார்வையிலிருந்து அதை தள்ளிப்போடாதே, என்று பொருள்படும். பாவத்தில் தவறிய அந்த ஒருவனைப்போல, தாங்களும் சோதிக்கப்பட்டு, பாவத்தில் விழ ஏதுவுண்டு என்பதை விசுவாசிகள் உணர்ந்து, இடைவிடாமல் விழிப்போடு இருக்கவேண்டும். (1 கொரிந்தியர் 10:12) கள்ளப் போதகர்களால் சிறைபிடிக்கப்பட்டவர்களை, "அக்கினியிலிருந்து பிடித்திழுக்க" முயற்சி செய்யவேண்டுமென்ற, யூதாவின் எச்சரிப்புக்கு இது அதிகம் ஒத்ததாக இருக்கிறது. (யூதா 1:22)தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப் பண்ணுவேன் (எசே 29:12).

ஈ. வசனம் 2. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து நடக்கும் வாழ்க்கைக்கு, இது, பவுலுடைய இரண்டாவது எடுத்துக்காட்டாக இருக்கிறது. (நொடிப்பொழுதில் குற்றத்தில் அகப்பட்டவனை சீர்பொருந்தச் செய்வது வசனம் 1, முதலாவது உதாரணம்)

ஆவியானவருடன் சேர்ந்து அடியெடுத்து வைத்து நடக்கும் வாழ்க்கைக்கு செயல்முறை சார்ந்த உதாரணங்கள்

கலாத்தியர் 6:1-10

நம்முடைய பரலோகப்பிதா, நம்முடைய பாரங்களை எவ்வாறு சுமக்கிறாரோ, அவ்வாறாக நாமும் ஒருவர் பாரத்தை மற்றொருவர் சுமக்கவேண்டும். (சங்கீதம் 55:22, மற்றும் 1 பேதுரு 5:7) "சுமப்பது" என்றால் மேலே தூக்கி, சுமப்பது தாங்குவது என்று பொருள்படும். "பாரம்" என்பது ஒரு மனிதன் எடுத்துச்செல்லும் கனமான எடை, அல்லது சுமை, பெலவீனம், துன்பம், வேதனை, சோதனைகள், இழப்பு முதலிய வாழ்க்கையில் நாம் தாங்கிக்கொள்ளக் கடினமான யாவற்றையும், இது குறிப்பிடுகிறது.

உ. உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகள், கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய சகோதர, சகோதரிகள், அவர்களுடன் பாரங்களைச் சுமந்துகொண்டு சென்றுகொண்டிருக்கும்போது, அவர்களிடமிருந்து அவற்றைத் தூக்கி எடுத்துத் தாங்கள் சுமக்கவேண்டும். அவர்களுடைய சுமைகளில் சிலவற்றை உங்கள் கரங்களில் வைக்கட்டும்! ஆவியில் பலமானவர்களின் விஷயத்தில் இது விசேஷமாக உண்மையாக இருக்கிறது. (ரோமர் 15:1)

ஊ. "கிறிஸ்துவின்பிரமாணத்தைநிறைவேற்றுங்கள்" என்றால், மற்ற விசுவாசிகளோடுள்ள நம்முடைய தொடர்புகளில், இயேசுவினுடைய அன்பையும் பண்பையும் நடத்தையையும் நாம் அப்படியே பின்பற்ற வேண்டும். கிறிஸ்துவினுடைய கட்டளையாகிய "ஒருவரையொருவர் அன்புகூருங்கள்" என்ற கட்டளையோடு இது தொடர்புடையது. (மத்தேயு 22:36-40; யோவான் 13:34; 15:12; 1 யோவான் 3:23; மற்றும் ரோமர் 13:8)

எ. வசனம் 3. "ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்". "வஞ்சிக்கிறவனாவான்" என்றால், தன் மனது வழிவிலகிச்செல்லும்படி அனுமதிப்பது, என்று பொருள்படும். ஒரு விசுவாசி, இவ்விதமாக இருக்கத் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, "குற்றத்தில் அகப்பட்டவர்களைச் சீர்பொருந்தப்பண்ணுதற்கும்", "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதற்கும்" கூடாதவனாகவும், ஊழியத்தில் அவன் பங்கை நிறைவேற்ற முடியாதவனாகவும் இருப்பான். மனது வழிவிலகிச் சென்றவர்களின் குணங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இருக்கும்.

1. ஆவியில் பெருமையுள்ளவர்கள் - தங்களைக் குறித்து, தாங்கள் இருப்பதைவிட மிக உயர்வாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள். (ரோமர் 12:3; மற்றும் 1 கொரிந்தியர் 8:1-2) குற்றத்தில் அகப்பட்ட விசுவாசிகளைச் சீர்பொருந்தப்பண்ணாமலும், கனமான பாரங்களுடன் இருப்பவர்களுக்கு உதவிசெய்யக் கூடாமலும் அநேகர் இருப்பதற்குக் காரணம், அவர்கள் கீழ்க்கண்டவாறு நினைக்கின்றனர்:

(அ) அவசியமில்லாத கீழ்த்தரமான, அவர்கள் செய்யவேண்டியதற்கு மிஞ்சின காரியங்களைச் செய்கிறார்கள்.

(ஆ) அவர்கள் நேரம் அவர்களுக்கு மிக அருமையானதாக இருக்கிறது.

(இ) அவர்கள் செய்துகொண்டிருக்கும் காரியம் மிக முக்கியமானது.

(ஈ) அவர்கள்: ஏதோ மிக விசேஷமானவர்களும், மிக முக்கியமானவர்களுமாய் இருக்கிறார்கள்!

ஆகிலும் உண்மையில், தேவனுடைய அளவுகளில் ஒருவரும் எண்ணப்படுவதற்குப் பாத்திரவான்கள் அல்ல. இந்த நபர்களிடம் பவுல், "நீங்கள் உங்களைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்கக் கூடும்.

ஆவியானவருடன் சேர்ந்து அடியெடுத்து வைத்து நடக்கும் வாழ்க்கைக்கு செயல்முறை சார்ந்த உதாரணங்கள்
கலாத்தியர் 6:1-10

ஏ. வசனம் 4. "அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன், அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும்." இது, ஒருவன் "தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்வதைத்" தவிர்க்கும் (மனம் வழிவிலகிச்செல்வதை) "அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன்," என்றால், ஒவ்வொருவனும், தன்னுடைய சொந்த நடத்தையையும், அவன் செய்த கிரியைகளையும் சோதித்துப் பார்க்கப் பொறுப்புள்ளவனாகவும், கடனாளியாகவும் இருக்கிறான். (1 கொரிந்தியர் 11:28) அவன், மற்றவர்களுடைய நடத்தை அல்லது கிரியைகளை மதிப்பீடு செய்வதற்கும்,அளந்து கணக்கிடுவதற்கும் அவசியமில்லை.கிறிஸ்து,அவருடையநியாயாசனத்தில்வீற்றிருக்கும்போது இக்காரியத்தைச் செய்வார். (2 கொரிந்தியர் 5:10; ரோமர் 14:10-12; 1 கொரிந்தியர் 3:11-15; 4:5)

ஐ. அவன் சுய பரிசோதனை செய்து, அவனுடைய நடத்தை மற்றும் கிரியைகள் நல்லவைகள் என்றும், நேர்மையான உள்நோக்கத்துடன் இருக்கின்றன என்றும் கண்டுகொண்டால் அவன் தன்னில் தானே பெருமை அடைய ஏதுவுண்டு. அது போதுமானதாக இருக்கிறது. இதற்கு மேலாகச் செல்லுவது, ஆவியில் கர்வமடைவதற்கும் தன்னைத்தானேமற்றவர்களுடன்ஒப்பிட்டுப்பார்க்கவும்வழிநடத்தும்மற்றும்"பாவத்தில்அகப்பட்டவர்களைச் சீர்பொருந்தச்செய்வதற்கும்,""பாரங்களைச்சுமப்பவனாக இருப்பதற்கும் திறமையற்றவனாக இருப்பான்.

ஒ. வசனம் 5. "அவனவன் தன் தன் பாரத்தைச் சுமப்பானே". "பாரம்" என்றால் கப்பலில் இருக்கும் சரக்கு அல்லது ஒரு வண்டி அல்லது மிருகம்மீது ஏற்றிச்செல்லும் சுமை என்று இங்கு பொருள்படும். ஒரு பிரயாணி அவனுக்குச் சொந்தமான பொருட்களையும் மற்றும் அவசியமான சாமான்களையும் தூக்கிக்கொண்டு செல்வதை இது குறிக்கிறது. உருவகப்படுத்திக் கூறினால், இது ஒருவன் செய்யும் வேலை அல்லது ஊழியம் என்று பொருள்படும். இது, ஒருவர் மற்றொருவருடைய பாரத்தைச் சுமப்பதிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. (வசனம் 2) ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவ சமுதாயத்தில், அவனுடைய சொந்த வேலையை (கடமை அல்லது ஊழியம்) நிறைவேற்றுவதற்கு, தேவனுக்கு முன்பாகப் பொறுப்புடையவனாக இருக்கிறான்.

ஓ. ஆகவே, நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவும், நம்முடைய சொந்த பாரத்தைச் சுமக்கவும் வேண்டுமென்று, 4-5 வசனங்களில் கேட்டுக்கொள்ளப்படுகிறோம். இக்காரியங்களில் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்தி நிலையாக இருப்போமானால், நாம்:

1. ஆவியில் பெருமைபாராட்ட உண்மையில் நம்மிடம் ஒன்றுமில்லை என்று அறிந்துகொள்ளுவோம்.

2. மற்ற விசுவாசிகளுடன் நம்மை ஒப்பிட்டு பார்ப்பதற்கு, நேரம் இருக்காது.

இது அடுத்தபடியாக, "பாவத்தில் அகப்பட்டவர்களைச் சீர்பொருந்தப் பண்ணுவதற்கும்", "சுமை சுமப்பவனாக இருப்பதற்கும்" நமக்குத் திறந்த வாசலை உண்டாக்கும், மற்றும் நாம், ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து நடக்கிறோம் என்று அது நிரூபித்துக்காட்டும்.

ஆவியானவருடன் சேர்ந்து அடியெடுத்து வைத்து நடக்கும் வாழ்க்கைக்கு செயல்முறை சார்ந்த உதாரணங்கள்
கலாத்தியர் 6:1-10

2. நல்ல உக்கிராணக்காரனாக இருப்பது, ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து நடப்பதற்கு, செயல்முறை சார்ந்த, மற்றொரு எடுத்துக்காட்டு. (6:6-10)

அ. வசனம் 6. "மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன், உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன். இதை வேறு விதமாகக் கூறினால், "வேலையாள் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்," அல்லது "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக." (1 தீமோத்தேயு 5:18; மற்றும் லூக்கா 10:7; மத்தேயு 10:10) மறுபடியுமாக, "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் ----." (1 கொரிந்தியர் 9:14) குருவானவர் - போதகர்களுக்குப் பொருளாதாரத் தேவைகளைக் கொடுப்பது, சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் மற்றும் தேவனுடைய வார்த்தையினால் போதிக்கப்படுகிறவர்களின் கடமையாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 9:11)

ஆ. வசனம் 7. "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்". இந்த வசனத்தின் முதல் பாகம், அநேகமாக இவ்வாறு வாசிக்கப்படலாம்: "நீ தேவனை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்து, உன்னை நீயே தவறாக வழிநடத்திச் செல்லாதே" மற்றும் "தேவனை பரியாசம் செய்து". என்றால், "உன்னுடைய மூக்கை அவருக்கு எதிராக உயர்த்துவது; வாயைப் பல கோணங்களில் அசைத்து கையைக் காட்டி அவரைப் பரியாசம் செய்வது," என்று பொருள்படும்.

இ. இங்கே என்னசொல்லப் படுகிறதென்றால், ஒவ்வொரு விசுவாசியும், (அல்லது உள்ளூர் சபை) அவனுடைய இருதயமாகிய வயல்வெளியில், தேவனுடைய வார்த்தையை விதைத்த, குருவானவர் - போதகர்களுக்கு, பொருளாதார உதவியை எந்த அளவுக்குச் செய்திருக்கிறானோ, அந்த அளவிற்கு, தேவனிடமிருந்து அவன் பெற்றுக்கொள்ளுவான்! "அவனுடைய, குருவானவர் - போதகர்களுக்கு எவ்வளவு விதைத்தானோ அந்த அளவுக்கு, தேவனிடமிருந்து அறுவடைசெய்வான்!" கொரிந்தியர்களுக்கு எழுதின இரண்டாம் நிருபத்திலும் பவுல், உள்ளூர் மற்றும் தூரதேச சுவிசேஷ ஊழியங்களுக்கு கொடுப்பதை விதைப்பு அறுப்புக் கொள்கையை செயல்படுத்துகிறார். (2 கொரிந்தியர் 9:6-11; மற்றும் ஓசியா 10:12-13)

ஈ. வசனம் 8. "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன், மாம்சத்தினால் அழிவை அறுப்பான், ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான்." "விதைப்பும், அறுப்பும்" என்ற கொள்கை, இப்பொழுது, இரண்டு வித்தியாசமான வாழ்க்கை நடைக்கு பயன்படுத்தப்படுகிறது. ஆவியானவருடன் அடியெடுத்துவைத்து நடப்பது மற்றும் பாவசுபாவத்துடன் அடியெடுத்துவைத்து நடப்பது.

1. "பாவசுபாவத்தைப் பிரியப்படுத்த," விதைப்பது, என்பது பாவசுபாவத்தின் கிரியைகளைக் குறிப்பிடுகிறது. (கலாத்தியர் 5:19-21)பாவசுபாவத்துடன் அடியெடுத்து வைத்து நடப்பவர்கள்,(அதனுடைய ஆசைகளைத்திருப்திபடுத்துகிறவர்கள்) அழிவை அறுப்பார்கள். (தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்க மாட்டார்கள் - நரக அக்கினியில்நித்தியகாலமெல்லாம் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டவர் களாயிருப்பார்கள் - மத்தேயு 13:24-30)

ஆவியானவருடன் சேர்ந்து அடியெடுத்து வைத்து நடக்கும் வாழ்க்கைக்கு செயல்முறை சார்ந்த உதாரணங்கள் கலாத்தியர் 6:1-10

2. "ஆவியானவரைப் பிரியப்படுத்த" விதைப்பவர்கள் என்பது, நம்முடைய வாழ்க்கையில் ஆவியின் கனியை, பண்படுத்தி விளையச்செய்து மற்றும், யாவரும் காணும்படி வெளிப்படுத்துவதைக் குறிப்பிடுகிறது - ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றுவது. (கலாத்தியர் 5:22-23) இவ்வாறு செய்பவர்கள் நித்திய ஜீவனை அறுப்பார்கள். (தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருப்பார்கள் - ரோமர் 6:20-23) கிறிஸ்துவுடைய நியாயாசனத்தின்முன்பாகவும்பரிசளிக்கப்படுவார்கள்! விதைப்பு அறுப்பு கொள்கைபோடு சம்பந்தப்படாமல், இதே கருத்து, ரோமருக்கு எழுதின நிருபத்திலும் கூறப்படுகிறது.(ரோமர் 8:13)

உ. வசனம் 9. "நன்மைசெய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்." "சோர்ந்து போவது," என்றால் பலவீனமாவது, மனந்தளர்ந்து போவது, மயக்கமடைவது, தைரியம் இல்லாமல் இருப்பது, என்று பொருள்படும். இழுத்துவிடப்படாத நிலையிலிருக்கும் ஒரு வில், இதற்கு ஒரு நல்ல உதாரணம். இது அழுத்தமற்ற நிலையிலிருக்கிறது.

ஊ. "நன்மை செய்வது" என்றால் சன்மார்க்க நன்மையான காரியங்களைச் செய்வதையும், மற்றவர்களுக்குப் பயனள்ளதாக இருக்கும் காரியங்களைச் செய்வதையும், குறிக்கும்மனம்சோர்ந்துபோகாமல்மற்றவர்களுக்குப் பயனுள்ள நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்பவர்கள், ஏற்ற நேரத்தில் நல்ல விளைச்சலை அறுவடைசெய்வார்கள்.

1. சபை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளப்படும்போது நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

2. கிறிஸ்துவின் நியாயசனத்தில் வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்கள். (1 கொரிந்தியர் 15:58)

எ. வசனம் 10. "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்." "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக," அநேகமாக, இது இவ்வாறு வாசிக்கப்படவேண்டும்: "நமக்கு இன்னும் காலம் இருக்கும்போது" (எபேசியர் 5:16) ஆகவே, நமக்கு இன்னமும் சமயம் இருக்கும்போது, சன்மார்க்க நற்கிரியைகளை, மற்றவர்களுடைய நன்மைக்காக,நாம் செய்வோமாக

ஏ. மற்ற விசுவாசிகளுக்கு, சன்மார்க்க நற்கிரியைகளைச் செய்வதே, முதன்மையான நம்முடைய பொறுப்பாக இருக்கிறது. (ரோமர் 12:13) இது குருவானவர் போதகர்களையும் உள்ளடக்கும்.

அடுத்து, நித்திய ஜீவனையும், கிறிஸ்துவின் நியாயாசனத்தின்முன் வெகுமதியையும், நம்முடைய அறுவடையாகப் பெற்றுக்கொள்வது இதன் பலனாக இருக்கும். நாம் இந்த நற்கிரியைகளைச் செய்து கொண்டிருக்கும்போது, நாம், தொடர்ந்து அவைகளைச் செய்ய பெலனுள்ளவர்களாகும்படி, தேவன் நமக்கு எல்லா கிருபைகளையும் அருளிச்செய்வார். (2 கொரிந்தியர் 9:8; லூக்கா 6:38) ஆகவே, மற்றவர்களுக்கு நற்கிரியைகளைச் செய்வதற்கு, குறுகிய கால அவ்வாறே நீண்டகால அறுவடை இருக்கிறது!

முடிவுரை

அ. பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்து நடப்பவர்கள்:

1. பாவத்தில் அகப்பட்டவர்களைச் சீர்பொருந்தச் செய்வார்கள்.

2. பாரம் சுமப்பவர்களாயிருப்பார்கள்.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

முன்னுரை

அ. விசுவாசிகள், உள்ளாக வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து ஜீவிக்கிறார்கள் (ஏவுதலின்படி ஜீவிக்கின்றனர்) என்று கூறி கலாத்தியர் ஐந்தாம் அதிகாரத்தைப் பவுல் முடிக்கிறார். இது, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்கு பதில் அதின் இடத்தைப் பெறுகிறது.

ஆ. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தின் கடைசி அதிகாரமாகிய, ஆறாம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவருடன் அடியெடுத்து வைத்து ஜீவிப்பது; நம் வாழ்க்கையில் என்ன பொருளுடைதாக இருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுகளைப் பவுல் நமக்குத் தருகிறார். உண்மையில் அவர் நமக்குக் கொடுக்கும் எடுத்துக்காட்டுகள், ஒரு விசுவாசியின் விதைப்பும், அவன் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அறுப்பும் தொடர்பான காரியமாயிருக்கிறது.

1. விசுவாசிகள், அவர்களுடைய குருவானவர் - போதகர்களுக்கு விதைக்கும்போது, அறுவடை செய்கிறார்கள். (கலாத்தியர் 6:6-7)

அ. வசனம் 6. "மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன், உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்." இது, "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்றும் "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், கூறுவதை மற்றொரு வழியில் சொல்லுவதாக இருக்கிறது.

(1 தீமோத்தேயு 5:18; மற்றும் லூக்கா 10:7; மத்தேயு 10:10 வசனங்கள்) அடுத்து, மறுபடியுமாக "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டும்" (1 கொரிந்தியர் 9:14). குருவானவர் - போதகர்களுக்கு, அவர்களிடமிருந்து சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களும், தேவனுடைய வார்த்தையை அவர்களால் போதிக்கப்படுகிறவர்களும், அவர்களுக்குப் பொருளாதார உதவிகளைக் கொடுக்க வேண்டும். (1 கொரிந்தியர் 9:11)

ஆ. வசனம் 7. "மோசம் போகாதிருங்கள்" தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்." இந்த வசனத்தின் முதல் பாகம் அநேகமாக இவ்வாறு வாசிக்கப்படலாம்: "நீ, தேவனை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்து, உன்னை நீயே தவறாக வழிநடத்திச் செல்லாதே." மற்றும், "தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்," என்றால் "உன்னுடைய மூக்கை அவருக்கு மேலாக உயர்த்துகிறாய்; உன்னுடைய வாயின் பலகோண அசைவுகளினால் கைகை காட்டி அவரைப் பரியாசம் செய்கிறாய்" என்று பொருள்படும்.

இ. ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசி (அல்லது உள்ளூர் சபை) அவனுடைய இருதயமாகிய வயல்வெளியில், தேவனுடைய வார்த்தையை விதைத்த குருவானவர் - போதகர்களுக்கு, பொருளாதார சம்பந்தமான உதவிகளை எந்த அளவுக்குச் செய்கிறானோ, அந்த அளவுக்கு தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளுவான், என்று இங்கே சொல்லப்பட்டுள்ளது! "அவனுடைய குருவானர் - போதகர் சார்பாக அவன் எந்த அளவு விதைக்கிறானே, அந்த அளவு தேவனிடமிருந்து அறுவடைசெய்வான்!"

ஈ. கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில், பவுல், விதைப்பு அறுப்பு கொள்கையை உள்ளூர் மற்றும் தூரதேச சுவிசேஷ ஊழியங்களுக்குக் கொடுப்பதை செயல்முறைப்படுத்துகிறார்.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

(2 கொரிந்தியர் 9:6-11; மற்றும் ஓசியா 10:12-13 வசனங்கள்) மற்றும் லூக்கா எழுதின சுவிசேஷத்தில், நாம் அறுக்கும் அளவு, விதைக்கும்போது நாம் எந்த அளவைப் பயன்படுத்துகிறோமோ, அந்த அளவினால் தீர்மானிக்கப்படும் என்று, நமக்குக் கூறப்படுகிறது. (லூக்கா 6:38)

2. விசுவாசிகள் மற்றவர்கள் பயனடையும்படியாக விதைக்கும்போது அறுவடைசெய்வார்கள்(கலாத்தியர் 6:6-10)

அ. வசனம் 8. "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினாலே, நித்திய ஜீவனை அறுப்பான்" "விதைப்பும் அறுப்பும் கொள்கை". கொள்கையானது இப்பொழுது, வேறுவிதமான இரண்டுவாழ்க்கைநடைக்குசெய்முறைப்படுத்தப்படுகிறது. (பாவசுபாவத்தைப் பிரியப்படுத்தும்படியாக நடப்பது அல்லது ஜீவிப்பது மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பிரியப்படுத்தும்படியாக நடப்பது அல்லது ஜீவிப்பது)

1. "பாவசுபாவத்தைப் பிரியப்படுத்த" விதைப்பது என்பது, பாவ சுபாவத்தின் கிரியைகளைக் குறிக்கும். (கலாத்தியர் 5:19-21) பாவசுபாவத்துடன்அடியெடுத்துவைத்துநடப்பவர்கள் (அதனுடைய இச்சைகளை திருப்தி செய்வது) அழிவைஅறுப்பார்கள்(தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கமாட்டார்கள்.நரக அக்கினியில்நித்தியகாலமெல்லாம் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவார்கள் (மத்தேயு 13:24-30).

2. "ஆவியானவரைப் பிரியப்படுத்த" விதைப்பது என்பது, நம்முடைய வாழ்க்கையில், ஆவியின் கனியை பண்படுத்தி விளையச் செய்து மற்றும் யாவரும் காணும்படி வெளிப்படுத்துவதைக் குறிக்கும். ஆவியானவரின் வழி நடத்துதலைப் பின்பற்றுவது. (கலாத்தியர் 5:22-23) இக்காரியத்தை செய்பவர்கள் நித்திய ஜீவனை அறுப்பார்கள். (தேவனுடைய இராஜ்ஜியத்தில், தேவன் மற்றும் கிறிஸ்துவுடைய சமூகத்தில் இருப்பார்கள் (ரோமர் 6:20-23).

கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன்பாகவும் இவர்களுக்கு பரிசளிக்கப்படும்! ரோமருக்கு எழுதின நிருபத்திலும், விதைப்பும் அறுப்பும் கொள்கை சம்பந்தப்படாமல், இதே கருத்து கூறப்பட்டுள்ளது. (ரோமர் 8:13)

ஆ. வசனம் 9. "நன்மைசெய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்". சோர்ந்துபோவது", "தளர்ந்துபோவது", என்றால் பலவீனமாவது, மனம் தளர்ந்துபோவது, மயக்கமடைவது, தைரியத்தை இழந்துபோவது என்று பொருள்படும். இழுத்துவிடப்படாத நிலையிலிருக்கும் வில்வித்தைக்காரனின் வில், நன்மை செய்வதில் சோர்ந்து போன ஒருவனுக்கு, ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அது, அழுத்தம் இல்லாமல் இருக்கிறது. (அது பலவீனமாகவும், தைரியம் இல்லாமலும், மன உறுதி இல்லாமலும் இருக்கிறது)

இ. "நன்மைசெய்வது" என்பது, மற்றவர்களுக்கு பயன்தரும், சன்மார்க்க நற்காரியங்களைச் செய்வதைக் குறிக்கும். மற்றவர்களுக்கு நன்மைதரும் நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்பவர்கள் ஏற்ற நேரத்தில் விளைச்சலை அறுவடை செய்வார்கள்.

1. சபை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளப்படும்போது, நித்தியஜீவனைப் பெறுவார்கள்.

2. கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்கள்.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

ஈ. "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்". "நமக்குக் கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாக", என்பது அநேகமாக இவ்வாறு வாசிக்கப்படலாம், "நமக்கு இன்னும் தருணம் கிடைக்கும்வரை", (எசேக்கியேல் 5:16) ஆகவே, நமக்கும் இன்னும் தருணம் இருக்கும்போதே, மற்றவர்களுடைய நன்மைக்காக நல்ல காரியங்களை நாம் செய்வோமாக.

உ. இந்த சன்மார்க்க நற்கிரியைகளை மற்ற விசுவாசிகளுக்குச் செய்வதே நம்முடைய முதன்மையான கடமையாயிருக்கிறது. (ரோமர் 12:13) இது, குருவானவர் போதகர்களையும் உள்ளடக்கும்.

அடுத்து, இது, நித்திய ஜீவனையும், கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன், வெகுமதியையும், நமக்கு பலனாகத் தருகிறது. மற்றும் நாம் இந்த கிரியைகளைச் செய்து கொண்டே இருக்கும்போது, நாம் அதைத் தொடர்ந்துசெய்வதற்கு பெலனுள்ளவர்களாவதற்கு, தேவன், நமக்கு எல்லா கிருபையையும் தந்தருளுவார். (2கொரிந்தியர் 9:8; லூக்கா 6:38) ஆகவே, மற்றவர்களுக்கு நற்கிரியைகளைச் செய்வதின் பலனை அறுப்பதற்கு குறுகிய கால அவ்வாறே நீண்ட கால அறுவடையும் உண்டு!

3. விசுவாசிகள், உள்ளூர் மற்றும் தூர இட சுவிசேஷ ஊழியங்களுக்கு விதைக்கும்போது, அறுவடை செய்வார்கள். (2கொரிந்தியர் 9:6-11)

அ. எருசலேமிலுள்ள சபை, பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குப் பிறகு போராட்டம் நிறைந்த சபையாக இருந்தது. அதில் அநேக ஏழைகள் இருந்தனர். அத்துடன் பொருளாதார தேவையும் இருந்தது. ஆகவே, இந்த போராட்டத்துடன் இருந்த சபைக்குச் சேரவேண்டிய, சேகரிக்கப்பட்ட பணத்தை நிறைவு செய்யும்படியாக விசுவாசிகளைப் பவுல், கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில், 8-9 அதிகாரங்களில் ஊக்குவிக்கிறார். (8:6,10-11)

ஆ. வசனம் 6. "... சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". நாம் மற்றவர்களுக்கு எந்த அளவிற்கு இனாமாகக் கொடுக்கிறோமோ, அந்த அளவிற்கு, நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுவோம். "பெருக" என்றால், உனக்கு உள்ளதில் பெரிய அளவு, என்று பொருள்படும். உனக்கு உள்ளதிலிருந்து நீ கொடுக்கும் ஒவ்வொரு தாராளமான நன்கொடையும் ஒரு தாராளமான ஆசீர்வாதத்தால் பதிலளிக்கப்படும். இந்த சத்தியம், நீதிமொழிகள் புத்தகத்தில் ஒரு முறைக்கு மேலாகக் கூறப்பட்டுள்ளது:

1. "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு. ..... உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ, அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்". (நீதிமொழிகள் 11:24-25)

2. "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்". (நீதிமொழிகள் 19:17)

இ. வசனம் 7. "அவனவன் .... தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்". கொடுப்பதைக் குறித்து, பவுல் இங்கே பேசுவது, எருசலேம் சபைக்காக, (அயல் நாட்டிலுள்ள ஒரு சபையில்) சேகரிக்கப்பட்ட காணிக்கை சம்பந்தப்பட்டது. இது, உள்ளூர் சபையின் நிர்வாகத்திற்காக, அச்சமயம் கொடுக்கப்பட்ட தசமபாகம் மற்றும் இதர வகையிலான காணிக்கைகள் ஆகியவற்றிற்கும் மேலாகக் கொடுக்கப்பட்ட நன்கொடையாக இருந்தது.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

ஈ. வசனம் 7. "..... விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, ... உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்,தேவன்பிரியமாயிருக்கிறார்". "விசனமாயும்" "கட்டாயமாயும்" கொடுப்பது என்பது, கீழ்க்கண்டவாறு பொருள்படும்:

1. சுயலாபத்தின் காரணத்திற்காகக் கொடுப்பது பற்றி உன்னுடைய இருதயத்தில் ஏற்படும் தயக்கம்.

2. காணிக்கை சம்பந்தமாக நீ எவ்வளவு கொடுப்பாய் என்பதைக் குறித்து, மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, என்று நீ பயப்படுவதின் காரணத்தினால் கொடுப்பது. இந்த இரண்டு தகுதியற்ற எண்ணங்களும், கொடுப்பதினால் ஒருவன் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சியையும், ஆசீர்வாதத்தையும் திருடிக்கொள்ளுகிறது.

உ. "உற்சாகமாய்க் கொடுக்கிற" விசுவாசி, தேவனுக்குப் பிரியமாவனாய் இருக்கிறான். பயனுள்ளவனாகவும், உதவிசெய்கிறவனாகவும் இருக்க விரும்பும் ஒருவன். இப்படிப்பட்டவன், உடனே ஆர்வத்துடன் கொடுக்கிறான். அவன் கொடுக்கும்போதுஇருதயத்தில்மகிழ்ச்சியடைகிறான். "மன மகிழ்ச்சி, முக மலர்ச்சியைத் தரும்" என்று நீதிமொழிகள் நமக்குக் கூறுகிறது. (நீதிமொழிகள் 15:13) இது, ஒரு முழு சபை கூட்டத்தினருக்கும் அவ்வாறே பொருந்தும்!

ஊ. வசனம் 8-11. "... தேவன் உங்களிடத்தில், சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்". "கிருபை", என்பது இங்கே, இப்பூலோக ஆசீர்வாதங்களையும், செல்வத்தையும் குறிக்கிறது.

ஒருவன், தாராளமாகவும், மனப்பூர்வமாகவும் கொடுக்கும்போது, சம்பவங்கள் அடுத்தடுத்து சுழன்று நடைபெற ஆரம்பிக்கிறது:

1. தேவன் உனக்கு என்ன கொடுத்திருக்கிறாரோ, அதிலிருந்து, மற்றவர்களுக்கு நீ தாராளமாகக் கொடுக்கிறாய். (இச்சந்தர்ப்பத்தில் மற்றொரு நாட்டிலுள்ள வேறொரு சபை, தூரதேச சுவிசேஷ ஊழிய வேலைக்காக)

2. எல்லாக் காரியத்திலும், எல்லா நேரங்களிலும், உன்னுடைய சொந்த தேவைகளைச் சந்திக்க, உனக்குப் போதுமான அளவுக்கும் அதிகமாக உனக்கு இருக்கும்.

3. மற்ற விசுவாசிகளுக்கும், மற்ற சபைகளுக்கும்,தொடர்ந்துதாராளமாகக்கொடுக்கவும், உனக்குப் போதுமான அளவு இருக்கும்.

எங்கு தாராளமான ஆர்வமுள்ள ஆவி இருக்கிறதோ, அதை வெளிப்படுத்த, தேவன் எப்போதும் அதற்குரிய தேவைகளை அங்கு கொடுக்கிறார்!

எ. சிறிது பின்வைக்கவேண்டும் என்ற மனப்பான்மை இல்லாதவர்கள், அவர்களுக்குள்ள எல்லாவற்றையும், தங்களுக்காகவே செலவழித்து விடுவார்கள். அவர்களுக்குள்ளதில், சிறிது பாகத்தை கொடுப்பது, அவர்களுக்குத் துணிந்து அபாயத்திற்கேதுவாகச் செய்ததாகத் தோன்றும். இது, தேவன் பேரில் விசுவாசமில்லாமையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இது ஒரு கிறிஸ்தவனின் வழியல்ல. நாம் எல்லோரும் கீழ்க்கண்டவைகளை நினைவுகூரவேண்டும்:

1. தேவன், எல்லா அதிகாரமும் வல்லமையும் உடையவர். எல்லா பொன்னும் வெள்ளியும் அவருடையது. மலைகளில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்கள், அவருக்குச் சொந்தமானவைகள். (சங்கீதம் 50:10) எல்லா மூலாதாரங்களும், பகிர்ந்தளிக்கப்படுவதற்குரிய தீர்மானத்தை எடுப்பது அவருடைய விருப்பத்தின் கீழ் இருக்கிறது.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

2. நம்மிடமுள்ளவைகள் யாவும், முடிவாக தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டவைகள்.

3. நம்முடைய செல்வத்தை அதிகரிக்க அவர் தெரிந்து கொண்ட எந்த நேரத்திலும் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார்.

4. நமக்குள்ள கொஞ்சத்திலிருந்து தாராளமாகவும் மனப்பூர்வமான ஆவிபுடனும் கொடுக்கும்போது, தேவன் நமக்கு உள்ளதை அதிகரிக்கும்படி செய்கிறார்.

5. ஆகவே, நம்முடைய தேவைகளைச் சந்திக்கவும், வருங்காலத்தில் அயல்நாட்டு சுவிசேஷ ஊழியங்களுக்குக் கொடுக்கவும், நமக்கு இன்னமும் அதிக செல்வம் இருக்கும்.

ஏ. ஏழை மக்களுக்கு அவர் கொடுக்கும் நன்கொடைகளை, அவருடைய மக்கள் மூலமாகக் கொடுக்கவேண்டும் என்பதே, தேவன் எப்போதும் கொண்டிருந்த அவருடைய நோக்கமாக இருக்கிறது என்றும், இவ்வாறு கொடுப்பது நித்திய காலத்திற்கும் தொடரும் என்பதைக் காட்ட பவுல், சங்கீதம் 112:9 வசனத்தை மேற்கோளாக எடுத்துக் கூறுகிறார். "வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான் (தர்மம் செய்வதும், இரக்கம் காட்டுவதும்) அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் ....."

ஐ. வசனம் 10. "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் (தேவன்) உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்".

'நீதி' என்பது, இந்த வசனத்தில் (சங்கீதம் 112:9 வசனம் பொருளுடன் ஒத்துப்போகும்) "தர்ம கிரியைகள்; மற்ற விசுவாசிகளுக்குக் கொடுப்பது, மற்றும் தேவையிலுள்ள வேறு சபைகளுக்குக் கொடுப்பது" என்று பொருள்படும். (மத்தேயு 6:1) தேவையிலுள்ள மற்றவர்களுக்கு, தாராளமாகவும், ஆர்வத்துடனும் கொடுப்பவர்கள், தேவனிடமிருந்து, மிகுந்த அறுவடையை அறுப்பார்கள், மற்றும் வருங்காலத்தில், தேவையுள்ள மற்றவர்களுக்கு தொடர்ந்து கொடுப்பதற்குரிய செல்வத்திலும் (விதை) ஒருபோதும் குறைவுபடமாட்டார்கள். (ஏசாயா 55:10, ஓசியா 10:12) உண்மையில், தேவையில் இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கு, அவர்களிடம் இருப்பது அதிகரிக்கப்படும்!

4. நல்ல அளவுகளைப் பயன்படுத்தி விதைக்கும் விசுவாசிகள், நல்ல அளவுகளில் தேவனிடமிருந்து அறுவடையைப் பெறுவார்கள் (லூக்கா 6:38)

அ. "கொடுங்கள்" என்றால், உங்களிடத்தில் உள்ள ஒரு பொருளை, (விலை மதிப்புள்ள அல்லது தகுதியான) விலையின்றி அல்லது மாற்றுப் பொருளின்றி, மற்றொருவருக்குத் தந்துவிடுவது, நன்கொடையாகக் கொடுத்துவிடுவது என்று பொருள்படும்.

ஆ. "அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்". இது, முறைப்படி, விலை மதிப்புள்ள மற்றும் தகுதியான ஒரு பொருளை நாம் பெற்றுக் கொள்வோம் என்பதை நிச்சயப்படுத்துகிறது. நம்முடைய வெகுமதி, மற்ற மனிதர்களிடமிருந்து அல்ல, அது தேவனிடமிருந்து தானே, மட்டும் வரும். அவர், நமக்குக் கொடுக்க மனிதர்களைப் பயன்படுத்தலாம், ஆனால், வெகுமதியோ, தனிப்பட்ட முறையில் அவரிடமிருந்து வருகிறது!

இ. மலைப்பிரசங்கத்தில், இயேசு நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "நீயோ தர்மஞ்செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே, உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்". (மத்தேயு 6:3-4) "பலனளிப்பார்" என்பது, உனக்கு அற்புதத்தைக் கட்டளையிடுவார். உனக்குப் பணம் கொடுக்கப்படும்; கொடு, முற்றிலும் கொடுத்துவிடு, தந்துவிடு, மேலும் அதிகமாகக் கொடு, திரும்பக்கொடு, என்று இந்த வேத பாகத்தில் பொருள்படும்!

ஈ. இக்காரணத்தினாலே பவுல், நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்". (கலாத்தியர் 6:10) மற்றும், கொரிந்து பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு அவர் இவ்வாறு கூறுகிறார்: "அவனவன் ....தன்தன், வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே, சேர்த்து வைக்கக்கடவன்". (எருசலேமிலிருந்த சபைக்காக) (1கொரிந்தியர் 16:2-3; மற்றும், எபிரெயர் 6:10)

உ. "..... அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள் ...." "நல்ல" அளவு என்பது, விலையேறப்பட்டதும் அழகானதுமானது, அத்துடன் அது நமக்கு நல்ல பயனுள்ளதாகவும் இருக்கும்! "அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி உங்கள் மடியிலே போடுவார்கள்" என்றால், வெளி வஸ்திரத்தின மடிப்பில் அல்லது பையில் (இடுப்பைச் சுற்றி கட்டப்பட்டிருக்கும் அரைக் கச்சை அல்லது பட்டை மேலாகத் தொங்கும் வெளிஆடையினால் ஆனது) தானியத்தைப் போடுவதை, இது குறிப்பிடுகிறது.

இந்தப் பையில், அமுக்கிக், குலுக்கி, மேலிருந்து தானியம் சரிந்து விழும்வரை தொடர்ந்து கொட்டப்படும்! நாம், இரகசியமாக மற்றவர்களுக்குக் கொடுக்கும் போது, இப்படித்தான் நம்முடைய பரலோகத் தந்தை நமக்குத் தருகிறார்!

ஊ. "..... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் ....." நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுப்பது, அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி, இருக்குமானால், நீங்கள் பரமபிதாவினிடமிருந்து பெற்றுக்கொள்வதும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படியாக இருக்கும்! நீங்கள் பயன்படுத்தும் "அளவு" என்பது நீங்கள் கொடுப்பதற்கு அளக்க, நீங்கள் பயன்படுத்தும் பாத்திரத்தின் அளவை, இங்கே குறிக்கிறது, நம்முடைய பரலோகப் பிதாவினிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளப்போகும் வெகுமதி, ஆவிக்குரியதா அல்லது, பொருள் சம்பந்தப்பட்டவைகளா மற்றும், சரீரப்பிரகாரமானதா, என்று நமக்குக் கூறப்படவில்லை. இரண்டும் அநேகமாக மறைமுகமாயிருக்கின்றன!

எ. இங்கு கூறப்பட்டுள்ள கருத்து என்னவென்றால், நீங்கள் பயன்படுத்தும் (உங்களுக்கு உள்ளவைகளிலிருந்து நீங்கள் கொடுக்கும் அளவு) பாத்திரத்தின் அளவானது (பாகம்) தேவன் உங்களுக்குக் கொடுக்கப் போவதை அளக்கப் பயன்படுத்தப்போகும் பாத்திரத்தின் அளவை (பாகத்தை) தீர்மானிக்கும்.

முடிவுரை

அ. நம் மத்தியில் இருப்பவர்களில் விதைப்பவர்கள், அறுப்பார்கள். இவர்கள், இப்பொழுது மட்டுமல்ல, ஆனால், கிறிஸ்துவின் நியாயாசனம் முன்னும் அறுப்பார்கள் மற்றும் வானலோகத்திலுள்ள பரதீசிலும், பிதா மற்றும் குமாரனுடன் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

ஆ. கீழ்க்கண்டவர்களுக்கு விசுவாசிகள் விதைக்கும்போது, அறுவடைசெய்வார்கள்.

விதைப்பும் அறுப்பும்
கலாத்தியர் 6:6-10

1. அவர்களுடைய குருவானவர் - போதகர்.

2. மற்றவர்களுக்கு விசேஷமாக மற்ற விசுவாசிகளுக்கு நன்மை செய்யும் போது.

3. உள்ளூர் மற்றும் அயல் நாட்டு சுவிசேஷ ஊழியங்களுக்காக.

4. அவர்களுக்கு உள்ள நிலைக்கு ஏற்றாற்போல், நல்ல அளவைப் பயன்படுத்தி விதைக்கும் விசுவாசிகள், தேவனிடமிருந்து நல்ல அளவுகளில் அறுவடைசெய்வார்கள்.